
கல்கி
KALKI
16.3.2003
ரூ. 6.00
பரீட்சை நேரப் பிரார்த்தனை!
இலவச இணைப்பு
பர்தாவுக்குள் பட்டாம்பூச்சி!

கல்கி

16.3.2003



அதென்ன இருதலைக் கொள்ளி?

பக்கம் 4



வௌவால் வளர்த்தேன்!

பக்கம் 33



சூப்பர் (சிக்ஸ்) கென்யா!

பக்கம் 35



இந்தியக் கிரிக்கெட்டும் ரவீனாவும்!

பக்கம் 88



காஷ்மீனை

கவிதை


பக்கம் 17

'நாக்' கமிட்டின்னா?

பழநி ஆண்டவர் கலைக் கல்லூரியை 'நாக்' கமிட்டி ஆய்வு செய்ய வந்தபோது, கல்லூரி மாணவிகள் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளானதாக, குற்றச்சாட்டுக் கூறப்பட்டது. அரசு அதிகாரிகள், போலீஸ் என்று விசாரணை முடுக்கி விடப்பட்டு, இப்போது அப்படி எதுவும் இல்லையென அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதென்ன 'நாக்' கமிட்டி?

'National Assessment and Accreditation Committee'ஐத்தான் ஆங்கிலத்தில் சுருக்கமாக 'நாக்' கமிட்டி என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழக மான்ய குழுவின் கீழ் வருகிறது இந்த அமைப்பு. இது அமைக்கப்பட்டபோது முதல் தலைவராக நியமிக்கப்பட்டவர் புதுவை பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ஞானம். சென்னையில்தான் தலைமை அலுவலகம் அமைக்க இருந்தார்கள். ஆனால் வழக்கம் போல பெங்களூர்க்காரர்கள் தட்டிக் கொண்டு சென்று விட்டார்கள்.

'நாக்' கமிட்டி அமைக்கப்பட்டதன் நோக்கம், நாடு முழுவதும் உள்ள கல்லூரிகள் மாணவ, மாணவிகளுக்கு வேண்டிய வசதிகளை முழுமையாகச் செய்திருக்கிறதா என்பதை கண்காணிப்பதுதான். முறையான கட்டுமான வசதிகள் இல்லாத கல்லூரிகளுக்கு யு.ஜி.ஸி. மான்யம் கொடுக்கப்பட்டு வந்தால், அது உடனே வெட்டப்படும். இது ஒரு பக்கம் இருக்க, நாட்டிலுள்ள கலை, அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் தாங்களாகவே முன் வந்து இந்த 'நாக்' கமிட்டியின் பரிசிலனைக்கு உள்ளாகின்றன. இதற்குக் காரணம் இந்தக் கமிட்டி கொடுக்கும் அங்கீகாரத்தைப் பொறுத்து, தங்கள் பெருமைகளைச் சொல்லிக் கொள்ளும் வாய்ப்பு கல்லூரிகளுக்குக் கிட்டும். உதாரணமாக A+++ என்ற தர நிர்ணயம் செய்தால், அது ஐந்து நட்சத்திர அந்தஸ்துக்கு ஒப்பானது. அதற்குக் கீழே B++, B+ என்ற நிர்ணயங்கள் இருக்கின்றன. ஐந்து நட்சத்திர அந்தஸ்து கிடைத்தால் 'சிறப்புக் கல்விக்குத் தகுதியான கல்விக் கூடம்' என்று அறிவிக்கப்பட்டு யு.ஜி.ஸி. நிதி தாராளமாகக் கொடுக்கப்படும்.



• 'நாக்' கமிட்டி

ஒரு கல்லூரிக்குப் போகும் முன்பு பெரிய கேள்விப் பட்டியலை அனுப்புகிறது நாக் கமிட்டி. அதை நிறைவு செய்து திருப்பி அனுப்ப வேண்டும். உடனே அந்தப் பகுதிக்கே சம்பந்தமில்லாத ஐந்து பேராசிரியர்களை, ஆய்வுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். கல்லூரியில் உள்ள வகுப்பறைகள், ஆய்வுக் கூடம், ஆசிரியர் - மாணவர்கள் விகிதாச்சாரம், விளையாட்டு வசதிகள், ஹாஸ்டல் நிலைமை, நன்கு பயின்றவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா, போன்று சகல அம்சங்களையும் அலசி ஆராய்கிறது கமிட்டி. ஏற்கெனவே எழுதி அனுப்பியதோடு வசதிகளை ஒப்பிட்டுப் பார்க்கிறது. அதன் பிறகு தர நிர்ணயத்தை முடிவு செய்கிறது.

'நாக்' கமிட்டி உறுப்பினர்கள் மீது அநியாயமாகப்



பழி போடப்பட்டிருக்கிறது என்று அதன் உயர் அதிகாரி பெங்களூரிலிருந்து அறிக்கை விட்டிருக்கிறார். ஆனால் நாக் கமிட்டி உறுப்பினர்களைத் தங்களுக்குச் சாதகமாக செயல்பட வைக்க, கல்லூரி நிர்வாகங்கள் 'பல'தரப்பட்ட வழிமுறைகளைக் கையாள்வதுண்டு என்று கல்வியாளர்கள் வட்டாரத்தில் பேசிக் கொள்கிறார்கள். சமீபத்திய உத்தரவின்படி 'நாக்' கமிட்டியின் பரிசீலனைக்கு எல்லாக் கல்லூரிகளும் உட்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

பழநி ஆண்டவர் கல்லூரிக்கு வருவோம். அந்தக் கல்லூரி முதல்வர் ஆளும் கட்சிப் பிரமுகரின் சகோதரி என்பதால் எதிர்க்கட்சிகள் - குறிப்பாக சி.பி.எம். இந்தப் பிரச்னையை ஊதிப் பெரிதாக்குவதாகவும் ஒரு பேச்சு இருக்கிறது.

— கௌசி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பாட்டுச்சாவடி



• மஞ்சுளா, ராஜலெட்சுமி, ஸ்ரீதேவி, உமா, அனிதா

வைரமுத்து அன்று படித்த பச்சையப்பன் கல்லூரியில்... பெரியார்தாசன் இன்று பாடம் சொல்லித் தரும் பச்சையப்பன் கல்லூரியில் பாட்டுக்குப் பஞ்சமாவது? தைரியமாய்க் காலடி வைத்தோம். கல்விக் கண் திறந்த பச்சையப்பரின் பெயரால் கல்லூரி விளங்கினாலும், வளாகம் முழுக்க...

அதென்ன இருதலைக் கொள்ளி?

• ஷங்கர், சேதுராமன்



எத்தனைப் பசுமை! "பச்சை நிறமே! பச்சை நிறமே!" என்று பாட்டுப் பாடலாம் போல் தோன்றினாலும், கல்லூரியின் மியூசியத்திலிருந்து வந்த சினிமா பாட்டுச் சப்தம் நம்மை இழுத்துக் கொண்டு போனது. அங்கே மகளிர் தின விழாவுக்காக நடன ஒத்திகையில் ஈடுபட்டிருந்தனர் முதுகலை விலங்கியல் படிக்கும் மஞ்சுளா,

ராஜலட்சுமி, ஸ்ரீதேவி, உமா, அனிதா ஆகிய ஐந்து மாணவிகள்.

"விழா மேடையில் சொல்லப் போகிற ஜோக்கை சொல்லட்டுமா?" என்றார் மஞ்சுளா! சிரிப்போடு பாட்டுச் சாவடி தொடங்கட்டும் என்று தலையாட்டினோம்.

"ஹமாம் சோப் விளம்பரம் பார்த்திருப்பீங்க. அதில் தன்னோட சின்ன பையன்கிட்டே அம்மா சொல்லுவாங்க. பட்டாணிக்குப் பாதுகாப்பு அதோட தோல். ஆரஞ்சுக்குப் பாதுகாப்பு அதோட தோல்! உடனே பையன் ஆர்வமா கேட்கிறான்... அப்போ நமக்குப் பாதுகாப்பு? அம்மா சொல்றாங்க_ நமக்குப் பாதுகாப்பு நம்மோட தோல்"_ ஜோக்கைக் கேட்டதும் நாம்தான் அசட்டுத்தனமாய்ச் சிரித்தோமே தவிர, அஞ்சுவின் ஜோக்கிற்கு அவரது தோழிகள் அத்தனை பேரும் வஞ்சகமில்லாமல் சிரித்து வைத்தனர்.



அடுத்து "ஜோக் வேணாம் கவிதை சொல்லுங்களேன்" என்றோம். "கவிதைக்கு முன்னாடி எங்கிட்டே ஒரு மல்டி நேஷனல் விளம்பர ஐடியா இருக்கு. அதைச் சொல்லிடுறேன்" என்றார் உமா. முடியாது என்றால் விடவா போகிறார்கள்...?

"என்னோட ஐடியா கொக்கோகோலா குளிர்பானத்துக்கு. முதல் ஷாட்டில் சூரியன் உதிக்கப் போகிற செவ்வானத்தைக் காட்டுகிறோம்! அடுத்து பெட்டில் தூங்கிக் கொண்டிருக்கிற நடிகர் விஜய்யை காட்டுகிறோம். மூன்றாவது ஷாட்டில் அந்த விடிகாலையில் ஒரு வைக்கோல் போரில் தாவி ஏறும் ஒரு சேவல். அதற்கொரு குளோசப்.

அது கொக்கரகோகோ என்று கூவுவதற்குப் பதிலாக 'கொக்கோ கோலா' என்று கூவுகிறது. அடுத்த ஷாட்டில் ஆரஞ்சு சூரியன் கடலுக்குள்ளிருந்து மேலே எழும் காட்சி. ஃபைனல் ஷாட்டில் கையில் தேநீர் குவளையோடு அழகான இரண்டு கைகள் விஜய்யை நெருங்கி 'கோக் ரெடி' என்கிறது. சோம்பல் முறித்து எழும் விஜய், தேநீர் குவளையை, சாரி, கோக் குவளையை வாங்கி ஒரு சிப் உறிஞ்சி விட்டு, 'நான் இப்படியும் சாப்பிடுவேன்' என்கிறார். எப்படி ஐடியா!" உமா சொல்லி முடித்ததும் கைதட்டலில் விலங்கியல் துறை விழித்துக் கொண்டது.

நம்ம கடக ராசிக்கு எங்கே போனாலும் விளம்பர இடைவேளை விட மாட்டேங்கிறதே என்ற கவலையோடு "கவிதை சொல்றதாச் சொன்னீங்களே" என்று மாணவிகளை நினைவு படுத்தியதும் ஹைகூ சொல்றோம் என்று ஆரம்பித்து வைத்தார் இராஜலட்சுமி.

ஆற்றில் கிரிக்கெட்டா?
நிலவைத் தட்டி விடுகிறதே
படகின் துடுப்பு!

– இதென்ன நிலவுக் கவிதை. நான்

• கெர்சோம், கோபி




சொல்றேன் பார் என்று சென்ரியூ பதிலடி கொடுத்தார் அனிதா.

'எல்லாத் தண்ணீரையும்
இறைத்து முடித்தும்
கிடைக்கவேயில்லை
கிணற்று நிலவு'

'அடடே! அடடே! கவிதை சொல்லும் கவிதைகளை இப்போதுதானப்பா பார்க்கிறோம்' என்று கொஞ்சமாய்க் கிண்டலடித்தபடி வந்து சேர்ந்தார்கள் 'இருதலைக் கொள்ளி' நண்பர்களான கெர்சோம், கோபி இருவரும்.

அதென்ன இருதலைக் கொள்ளி? "விலங்கியல் படிச்சா மட்டும் போதாது சார்... விலங்குகளா வாழ்ந்து காட்டணும்... நாங்க இரண்டு பேரும் இருதலைக் கொள்ளிகள் மாதிரி ஒருடல் ஈருயிர் நண்பர்கள்" என்றார் கோபி. "அப்படியானால் இருதலைக் கொள்ளி மாதிரி ஃபோட்டோவுக்கு போஸ் தர முடியுமா?" என்று கிண்டலாகக் கேட்கப் போய்... நொடிக்குள் அசத்தினார்களே, சாமி... என்ன ஓர் ஆறாவது அறிவு! நாம் வியந்துபோய் வாயடைத்து நிற்க... கெர்சோம் தம் நினைவுகளைத் திருப்பி, "சார்! சார்! நான் ஒரு நிலவுக் கவிதை சொல்றேன் சார்!" என்று ஐந்து வயதுச் சிறுவன் மாதிரி குதிக்க ஆரம்பித்துவிட்டார். அவரை கவிதை சொல்ல அனுமதிக்காவிட்டால் எங்கே பெருங்குரலெடுத்து அழுது பஞ்சு மிட்டாய் கேட்பாரோ என்ற பயத்தில் தலையாட்டி வைத்தோம்... அவர் சொன்ன கவிதை உண்டு பண்ணிய அதிர்வுகளில் மாணவிகள் எல்லோரும் அவருக்குக் குட்டு வைத்தார்கள்... அப்படி என்ன பெரிய கவிதை...



அக்காவைப் பார்
அக்காவைப்பார் என்று
உன்னைக் காண்பித்து
குழந்தைகளுக்கெல்லாம்
சோறூட்டும்போதே
புரிந்து கொண்டேன்
எனக்கு மட்டுமல்ல
அந்தக் குழந்தைகளின்
அப்பாக்களுக்கும்
நீதான் நிலவு!

– கெர்சோமை கவிதை பாட விடுவது ஆபத்து என்று புரிந்து போய் அங்கே வந்த எம்.சி.ஏ.மாணவர்கள் ஷங்கருக்கும் சேதுராமனுக்கும் வாய்ப்புக் கொடுத்தோம். பெரிய ஆச்சர்யம்! விரல் சூப்பியபடி குழந்தை மாதிரி சேதுராமன் இடுப்பில் உட்கார்ந்து கொண்டு வந்தார் ஷங்கர். "இவன் இன்டர்நெட்டில் பிரிட்னிஸ் பியர்ஸ் தொடங்கி மேற்கத்திய பாப் குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து இப்படிக் குழந்தை மாதிரி தெரங்கி போயிட்டான் சார் பாவம்... பிரிட்னிப் பத்தி சூப்பரா ஒரு கானா பாடுவான் சார்... ஆனால் பாருங்க அதை நீங்க பப்ளிஷ் பண்ண முடியாது" என்று விஷம வெட்கத்தோடு சிரித்தார் சேதுராமன்.

அதன்பிறகு நம்மைக் கேட்காமலேயே அவர் பாடிய அந்தக் கானாவில் நமது புகைப்பட கலைஞர்

உருகி... "இன்னொரு முறை சொல்லுங்க" என்றார் ராகமாய். கடவுளே! பாட்டுச் சாவடி பாடாவதி சாவடியாய் மாறும் முன்பு, மறுபடியும் ஹைக்கூ பக்கமே இழுத்து வந்தோம்.



எம்.சி.ஏ. முதலாண்டு மாணவர் விஜய்குமார் சவால் விட்டார், "இங்கே நிலவைப் பத்தி ஹைக்கூ பாடிணாங்க. ஆப்டரால் அல்ப ஜந்து கொசு! அதைப் பத்தி எங்கிட்டே பல மேட்டருங்க இருக்குது... இரத்த தானம் தர மாட்டேன்னு பல பேர் அடம்பிடிக்கிறாங்களே, அவங்க கூட தங்களுக்குத் தெரியாமலே கொசுவுக்கு இரத்தம் கொடுக்குறாங்க தெரியுமா?" என்று சொன்னதும் "அய்யோ! இதுக்குக் கொசுக் கடியே மேலு சாமி" என்று கூட்டமாய் கமெண்ட் அடித்தார்கள். ஆனால் விஜய் கொசு மாதிரியே அசைந்து கொடுக்காமல் கொசு பற்றி ஒரு ஹைகூ சொன்னார்.

'இரவுக் காவலாளியைத்
தூங்க விடாமல்
பார்த்துக் கொண்டது கொசு..!'

– ச்சே...ச்சே... என்று எல்லோரும் உச்சுக் கொட்ட, மற்றொரு எம்.சி.ஏ மாணவரான சதீஷ் தலையிட்டு "நிலவு, அப்புறம் கொசுவைப் பத்தி பாடிட்டீங்க. ஆனால் இரண்டுக்கும் பாலம் போட்டு ஹைக்கூ சொல்ல முடியுமா? நான் சொல்றேன் எழுதிக்கோ" என்று நிஜமாகவே அசத்தினார். அவரது நிலவுக்கும் கொசுவுக்குமான ஹைக்கூ பாலம் இதுதான்:

நிலவின் மேல்
உட்கார்ந்திருந்தது கொசு
குட்டையில்

– என்னப்பா இது பச்சையப்பன் கல்லூரியில் ஹைக்கூக்கள் கொடி கட்டிப் பறக்கிறது. கானாக்கள் கிடையாதா? ஏன் இல்லை... அந்தக் குறையைத் தீர்த்து வைக்க வந்து சேர்ந்தார் வரலாற்றுத்துறை மாணவர் ஷங்கர்.

டமுக்கு டுமுக்கு டப்பாங்குத்து
டாவடிச்சா கும்மாங்குத்து
எத்திராஜு பக்கம் போனா
எக்குதப்பா கிழியுதப்பா
டப்பா
இராணிமேரி பக்கம்
போனா
பிரசிடென்சி
பையனுங்கோ
பார்க்குறாங்க தப்பா
மீனாட்சி பெட்டருன்னு
கோடம்பாக்கம் வுட்டா
மப்டியிலே பொம்பளை
போலிஸ்
மாட்டிகிட்டா வீங்கிடுது
நிட்டா
எந்தப் பக்கம் போனாலும்
ஈவ் டீசிங்கு
என்னைக்கிதான்
தடுப்பாங்களோ
ஆதம் டீசிங்...

– ஷங்கரின் கண்ணீர் வழிந்தோடும் கானாவில் வெகுண்டு இப்படியொரு அவமான கானாவைக் கேட்பதைவிட இறப்பதே மேல் என்று வெங்கடேஷ் ஒரு பட்டமரத்தில் தலையைக் கொடுத்து நிற்க, என் கானாவையா கிண்டல் செய்தாய்? என்று அவரைத் துரத்தினார் ஷங்கர். நம்மையும் துரத்துமுன் தன்னார்வத்தோடு வெளியேறினோம்.

— ஜெ.ஜே.

படங்கள்: டிஜிட்டல் சண்முகம்

சர்வதேச படம் இயக்குகிறார் சுசி!



தரமான உலக சினிமாக்களை தரிசிக்க உதவும் சாளரம், சர்வதேச திரைப்பட விழாக்கள். பெரும்பாலும் இங்கே பேரலல் சினிமா எனப்படும் கலைப் படைப்புகள் தான் காட்டப்படும். ஆனால் சமீபத்தில் நடந்து முடிந்த கோலாலம்பூர் உலகத் திரைப்பட விழாவை, கலக்கிவிட்டுத் திரும்பியிருக்கிறது ஒரு கமர்ஷியல் தமிழ்ப் படம். சுசி. கணேசன் இயக்கத்தில் பிரசாந்த், சினேகா நடித்த அந்தப் படம் 'விரும்புகிறேன்'. எப்படிச் சாத்தியமாயிற்று இது? சென்னை திரும்பிய சுசி. கணேசனிடம் கேட்டோம்.

''ஓரளவு நல்ல சினிமாக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் உலக நாடுகளிலிருந்து நாற்பத்தெட்டு படங்கள் கோலாலம்பூரில் திரையிடப்பட்டன. இந்தியாவிலிருந்து 'ரோஜா', 'விரும்புகிறேன்' ஆகிய இரண்டு தமிழ்ப்படங்கள் மட்டுமே தேர்வு செய்ப்பட்டிருந்தன. மணிரத்னம் இயக்கிய 'ரோஜா' உலகத் திரைப்பட விழாக்களில் இன்னும் வலம் வந்து கொண்டிருக்கிற படம். அதைத் தேர்வு செய்ததில் எனக்கு எந்த வியப்பும் இல்லை. ஆனால் 'விரும்புகிறேன்' படத்தை எதனடிப்படையில் தேர்வு செய்தார்கள் என்று கேட்டபோது, கல்கி உள்ளிட்ட முன்னணி தமிழ்ப் பத்திரிகைகளில் 'விரும்புகிறேன்' படத்திற்கு வந்த தரமான விமர்சனங்களும், உலகத் தமிழர்கள் மத்தியில் படத்திற்குக் கிடைத்த வரவேற்பும் முக்கியமான இரண்டு காரணங்கள் என்று தேர்வுக் குழு சொன்னபோது வியந்து போனோம்.

''எனது சினிமா குருவின் படைப்போடு நமது படமும் திரையிடப்படுகிறதே என்ற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், உலகப் பார்வையாளர்கள் நமது படத்தை எப்படி எடை போடப் போகிறார்கள் என்ற சின்ன பயம் இருந்தது. ஆனால் திரையிடலின் முடிவில் கிடைத்த பாராட்டுக்களால் திக்குமுக்காடிப் போனோம்.

''இத்தனைக்கும் தேர்வு செய்யப்பட்ட தகவல் எங்களுக்குத் தாமதமாகக் கிடைத்தது. இதனால் படத்திற்கு சப்டைட்டில் கூடப் போடாமல் திரையிட்டோம்.

• சுசி கணேசன்

வெவ்வேறு மொழி, வெவ்வேறு கலாசாரங்களிலிருந்து வந்து படத்தைப் பார்த்தவர்கள், 'உங்கள் படத்திற்கு மொழியே தேவையில்லை. ஒரு இந்தியக் கிராமத்தின் கலாசாரத்தை நேரடியாக அனுபவித்த உணர்வை ஏற்படுத்திவிட்டது' என்றார்கள்.

''ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்திருந்த இயக்குனர், தயாரிப்பாளர் லோரிஸ் ஓமெடேஸ், 'எங்கள் நாட்டின் கிராமங்களில் இன்றும் இளவட்டக் கல் தூக்கும் பழக்கம் இருக்கிறது. இதைத் திரைக்கதையில் நீங்கள் பாத்திரப்படுத்தியிருக்கும் விதம் அபாரம்'



• மலேஷிய நடிகர்களுடன் பிரசாந்த்

என்று பாராட்டினார். படம் முடிந்ததும், 'இளவட்டக்கல் தூக்கிய நடிகர் இவர்தான்' என்று பிரசாந்தைச் சூழ்ந்து கொண்டு கைகுலுக்கினார்கள். பிரசாந்த் திக்கு முக்காடிப் போனார்.

“திரைப்பட விழாவில் 'நிலா வெளிச்சத்தின் கீழே' (Under the moon light) என்ற ஈரானிய திரைப்படம் எல்லோராலும் சிலாகித்துப் பேசப்பட்டது. ஒரு ஈரானிய மத குருவின் வீட்டில் திருட்டுப் போய் விடுகிறது. திருடன் நகரத்தை ஒட்டிய ஒரு குடிசைப் பகுதியில் வசிப்பவன் என்று தெரிந்து, அவனைத் தேடி அங்கே போகிறார். அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலை, பழக்க வழக்கம் எல்லாம் அவருக்கு முற்றிலும் புதிய அனுபவத்தைத் தருகின்றன. வீட்டில் திருட்டுக் கொடுத்ததை விடவும் மதிப்பு மிக்க பொக்கிஷம் கிடைத்து விட்ட மன நிறைவு அவரை ஆட்கொள்ள, திருடனைப் பிடிக்காமலேயே திரும்பி விடுகிறார். இந்தப் படத்தின் தயாரிப்பாளர் மனுசர் முகமது 'விரும்புகிறேன்' படத்தைப் பார்த்துவிட்டு எங்களிடம் வந்தார்.

‘‘ஈரான் படங்களை உலகமே விரும்பிப் பார்த்துப் பாராட்டுகிறது. காரணம் எங்கள் கலாசாரத்தை, வாழ்க்கையை, படைப்புகளில் பிரதிபலிக்கிறோம். உங்கள் கலாசாரத்தை மிகைப்படுத்தாமல் கொஞ்சம் அழகியலோடு கையாண்டு இருக்கிறீர்கள். இனி ஈரான் படங்களுக்குத் தமிழ்ப் படங்களைப் போட்டியாக எடுத்துக் கொள்ளலாம்'' என்று மனம் திறந்து பாராட்டிய போது, ஈரானியக் கலைஞர்களின் விசாலப் பார்வை வியக்க வைத்தது.

‘‘விழா முடிவில் மலேசிய அரசர் கொடுத்த விருந்தில் கலந்து கொண்டோம். அந்த நிகழ்ச்சியின் வரவேற்பில் வாத்தியங்கள் முழங்க, என்னையும், பிரசாந்தையும் இந்திய தேசியக் கொடியின் பின்னால் அழைத்து வந்தபோது கண் கலங்கிப் போனோம்.

‘‘இந்த சர்வதேச திரைப்பட விழாவில் உலகக் கலைஞர்கள் பலரையும் சந்திக்கும் மிகப் பெரிய வாய்ப்பு கிடைத்தது. ஸ்பெயின், ஈரான், க்யூபா, மலேசியா நாடுகளைச் சேர்ந்த ஆறு நாடுகளின் கலைஞர்களோடு இணைந்து ஒரு சர்வதேசப் படத்தை இயக்க வரும்படி எனக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள்'' என்று நெகிழ்ந்து போகிறார் சுசி கணேசன்.

அடுத்து அமெரிக்க சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு வரும்படி 'விரும்புகிறேன்' படத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். ஆனால் படத்திற்கு ஐம்பதாயிரம் செலவு செய்து சப்-டைட்டில் போடக்கூட பணமில்லை என்று கவலைப்படும் இவர், மாதவன் நடிக்க ஒரு முழு நீள ஆக்ஷன் படத்தை இயக்கத் தயாராகி வருகிறார். அதிகார துஷ்பிரயோகத்தின் மீதான கோபம்தான் படத்தின் கதை. ஆனால் அதிலும் தமிழ்க் கலாசாரத்தின் அடையாளமும், எனது ஸ்டைலும் தொடரும். இங்கே முதலில் வெற்றியைக் கொடுக்க வேண்டும்... அதுதான் சோர்ந்து கிடக்கும் தமிழ் சினிமாவுக்கு ஊக்க மருந்து என்கிறார், தொடர்ந்து புதிய கலைஞர்களை அறிமுகப்படுத்தத் துடிக்கும் சுசி கணேசன்.

- விஷுவல் தாசன்

படம்: டிஜிட்டல் சண்முகம்



கேட்பாரின்றி 22 லட்ச ரூபாய்!

பல்வேறு திரைப் படத் தயாரிப்பாளர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய இருபத்திரண்டு லட்சம் ரூபாய் கேட்பாரில்லாமல் கிடக்கிறது தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையில்!

ஆல் இந்தியா ரேடியோவில், திரைப்படப் பாடல்களை ஒலிபரப்பியதற்காக அரசாங்கம் கொடுத்துள்ள ராயல்டி தொகைதான் அது.

ஒவ்வொரு தயாரிப்பாளராகத் தேடிக் கொண்டு போய், ராயல்டி தொகையைத் தனித் தனியே தருவது இயலாது என்பதனால், ஆண்டுக்கு ஒரு தடவை, எந்தெந்தப் பாடல்கள் ரேடியாவில் ஒலிபரப்பானதோ அதைக் கணக்குப் பார்த்து, எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து, ஒரே பேமெண்ட் ஆக, பிலிம் சேம்பருக்கு ஆல் இந்தியா ரேடியோ கொடுத்து விடுகிறது. அந்தந்த தயாரிப்பாளர்கள், சேம்பருக்கு விண்ணப்பித்து, தங்களுக்குச் சேர வேண்டிய தொகையை வாங்கிக் கொள்ளுவது வழக்கம்.

ஆனால் நூற்றுக் கணக்கான தயாரிப்பாளர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய ராயல்டி கோரி விண்ணப்பிக்காததால் லட்சக் கணக்கில் பணம் பட்டுவாடா ஆகாமல் தேங்கிக் கிடக்கிறது. இது அரசாங்கம், தயாரிப்பாளர்களுக்கு அளிக்கும் ராயல்டி. சேம்பர் என்ற அரசு அங்கீகாரம் பெற்ற திரை உலக அமைப்புக்கு, அதை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் பொறுப்பு மட்டுமே என்பதால், வேறு எதற்கும் பயன்படுத்த முடியாத சூழ்நிலை நிலவுகிறது.

இது குறித்து, தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் முக்கியஸ்தர்களுள் ஒருவரும் பிரபல விநியோகஸ்தருமான ஆனந்தா பிக்சர்ஸ் சுரேஷிடம் கேட்டபோது, "மிகப் பழைய பாடல்கள் முதல் லேட்டஸ்ட் பாடல்கள் வரை எல்லா பாடல்களும் ரேடியோவில் ஒலிபரப்பாவதால், எல்லாவற்றுக்குமான ராயல்டி ஒட்டு மொத்தமாக சேம்பருக்கு அனுப்பப்படுகிறது. ரேடியோவில் திரைப்படப் பாடல்கள் பெருமளவில் ஒலிபரப்ப ஆரம்பித்த காலம் முதலே சேம்பர் மூலம் ராயல்டி வழங்கும்படியாக ஓர் ஒப்பந்தம் போடப்படுவதுதான் மரபு. ஆனால், பழைய கால சினிமா கம்பெனிகள் பல இப்போது மூடப்பட்டுவிட்டன. பல தயாரிப்பாளர்கள் இறந்து போய் விட்டனர். அவர்களுடைய சட்டபூர்வமான வாரிசுகளுக்கு இதுபோன்ற ஒரு ஏற்பாடு இருப்பதே தெரிவதில்லை. தக்க சான்றுடன், உரியவர்கள் விண்ணப்பிக்கிறபோது, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குச் சேர வேண்டிய ராயல்டியை செக் மூலம் கொடுத்து விடுகிறோம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, சேம்பரின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எங்கள் சேம்பரின் ஜர்னலில், ரேடியோவிலிருந்து வரும் பட்டியலை வெளியிடுகிறோம். அதைப் பார்த்துவிட்டு விண்ணபிக்



கிறவர்களும் கணிசமாக உண்டு. எங்களாலான அனைத்து முயற்சிகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதையும் மீறி, பணம் பட்டுவாடா செய்ய முடியாமல் போகிறது" என்றார்.

அந்த ராயல்டி, திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குப் போய்ச் சேர வேண்டியது என்பதால், தமிழ்த் திரைப் படத்தயாரிப்பாளர்கள் கவுன்சில் பட்டுவாடா ஆகாத ராயல்டி தொகையை தங்கள் அமைப்பிடம் ஒப்படைக்கக் கோரி வருகிறது. எதிர்காலத்தில், ராயல்டி தொகையை தங்களுக்கே அனுப்பி வைக்க வேண்டும் என்கிறார்கள். என இந்த விஷயத்தின் இன்னொரு பக்கத்தை அறிமுகப் படுத்தினார் பிலிம் நியூஸ் ஆனந்தன்.



• பிலிம் நியூஸ் ஆனந்தன்

இதையடுத்து, தமிழ் திரைப் படத் தயாரிப்பாளர்கள் கவுன்சிலின் நிர்வாகிகளுள் ஒருவரான முரளிதரனிடம் பேசினோம். "சேம்பர் எங்களுடைய தாய் அமைப்பு. அதனுடன் எந்தவிதமான மோதல் போக்கையும் நாங்கள் கடை பிடிக்க விரும்பவில்லை. சேம்பர் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் என்று முத்தரப்பினருக்குமான அமைப்பு எங்களுடையது. தமிழ்த் திரைப் படத் தயாரிப்பாளர்களுக்கான அமைப்பு. எனவே தயாரிப்பாளர்களுக்குச் சேர வேண்டிய ராயல்டியை, தயாரிப்பாளர்கள் கவுன்சிலிடம் தருவதில் தவறு ஏதுமில்லை என்பது எங்கள் தரப்பு எண்ணம்." என்கிறார் முரளிதரன்.

தயாரிப்பாளர்களுக்குச் சேர வேண்டிய சுமார் இருபத்தி இரண்டு லட்சம் ராயல்டிக்குரிய பட்டியலைப் பார்த்தபோது கண்ணில் பட்ட சில விவரங்கள் :

பட்டியல்படி கிருஷ்ண சித்ரா என்கிற கம்பெனிக்குத் தான் அதிகபட்ட ராயல்டி சேர வேண்டியுள்ளது. தொகை ரூ.26,808/-

பட்டியலில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான திரைப்படக் கம்பெனிகள் இடம் பெற்றுள்ளன.

எம்.கே.தியாகராஜ பாகவதர் பிலிம்ஸுக்குச் சேர வேண்டிய ராயல்டி ரூ.340/-

தேவர் பிலிம்ஸ் மற்றும் தண்டாயுதபாணி பிலிம்ஸ் - 11,500/-.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் ரூ.6,278/-

காஞ்சி கம்பைன்ஸ் என்கிற கம்பெனிக்கு ஒரே ஒரு ரூபாய் சேர வேண்டியுள்ளது!

பத்து ரூபாய்க்குக் குறைவாக ராயல்டி பெறும் கம்பெனிகள் நூறுக்கும் அதிகம்!

இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு எந்த தயாரிப்பாளராவது, தங்களுக்குச் சேர வேண்டிய ராயல்டிக்கு விண்ணப்பித்தால் சேம்பரின் தலைவலிக்கு இலேசாக ஒத்தடம் கொடுத்த புண்ணியம் நமக்கு மிஞ்சும்.

- எஸ். சந்திரமௌலி

மிலிட்டரி



வானும் நிலவும் போல, மீனும் நீரும் போல, தமிழ் சினிமாவும் அண்ணன், தங்கை அழுகாச்சி கதைகளும். பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டையில் கம்பீரமாக நடந்து வரும் சத்யராஜின் பின்னணியில் ஐந்து தங்கைகள் அடக்கமாய் நடந்து வருவதுபோல் போஸ்டர். ஒரு தங்கை சென்டிமென்டிற்கே நெஞ்சைப் பிழிந்து மூக்கைச் சிந்த வைத்து விடுவார்கள். இந்த லட்சணத்தில் ஐந்து தங்கை சென்டிமென்ட் என்றால், தமிழகம் எப்படித் தாங்கும்! கொஞ்சம் தயக்கத்தோடு அமர்ந்தால், இது வழக்கமான அபத்தமல்லவென்று, வணக்கம் போடுவது வரை, இருக்கையிலேயே ஆணி அடித்து உட்கார வைத்து விடுகின்றன புத்தம் புது காட்சிகள். கூடவே இயல்பான நகைச்சுவை இறுதிவரை இழையோடுகிறது.

அம்மா இல்லாத தங்கைகளைக் கண்ணும் கருத்துமாய் வளர்க்கிறார் அண்ணன் சத்யராஜ். தங்கைகள் மீது தப்பான கண்ணோட்டத்தோடு ஒரு சின்னப் பார்வை பார்க்கிறவர், பல் போன கிழவன் என்றாலும் முடிந்து போனது கதை. ஒரு கட்டத்தில் முறைப் பையன் என்றுகூடப் பார்க்காமல் புரட்டி எடுத்து விடுகிறார். இதனால் ஒட்டு மொத்த ஊரும் இவரை 'மிலிட்டரி' என்று கிண்டலடிக்கிறது. அண்ணனின் அளவுக்கு மீறிய கண்டிப்பே, தங்கைகளின் மனத்தில் எரிச்சல் தீயை மூட்டிவிட, அண்ணனை அடியோடு வெறுக்கத் தொடங்குகிறார்கள். பாசமுள்ள அண்ணன் என்ன செய்தார்? என்பதுதான் மீதிக் கதை அல்லது கவிதை.


சத்யராஜ் அம்மாவின் சாவில் உள்ள பின்னணியை அரைமணி நேர ப்ளாஷ்பேக் காட்சிகளாகக் காட்டி, பிலிம் ரோலை வலிய கண்ணீரில் நனைத்து, மூக்கி வீணடித்து விடவில்லை. மாறாக போன்சாய் அளவு பிளாஷ்பேக்கோடு முடித்துவிட்டு, பிரதான பாத்திரங்களின் மேல் கதையை நகர்த்துவதில் கவனம் செலுத்தியிருக்கும் இயக்குனரைப் பாராட்டலாம்.

லாரி டிரைவராக வரும் அப்பா மணிவண்ணன், அடிக்கடி தோன்றி வெறுப்பேற்றாமல் தேவையான தருணங்களில் வந்து, மகனுக்காகவும், மகள்களுக்காகவும் குரல் கொடுப்பதும், தன் மேல் சுமத்தப்பட்ட பழியை தனது உயிரைக் கொடுத்தே துடைத்துக் கொள்வதும் உறுத்தாத சென்டிமென்ட். பாசத்தில் பங்கு போட்டுக் கொள்ள புதிதாக இரண்டு தங்கைகள் வந்து விட்டார்களே, என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளும் மூத்த தங்கைகள், நிஜ வாழ்க்கையின் பிரதிபலிப்புகளாகப் படைக்கப்பட்டிருப்பதில் யதார்த்தம்.

ஒரே சொதப்பல், சத்யராஜின் மாமா விஜுச்சக்கரவர்த்தி, பொன்னம்பலம் கோஷ்டியுடன் சேர்ந்துகொண்டு அடிக்கும் சினிக்கூத்துகள். என்றாலும், குடும்பத்தோடு தைரியமாய்த் திரையரங்குக்குச் சென்று பார்க்கும்படி படம் தந்திருக்கும் இயக்குனருக்கு ஒரு மிலிட்டரி சல்யூட்!

— விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்



மாயாவதியின் மாயாஜாலம்

தமது அறுபதாவது பிறந்த நாளை அதி ஆடம்பரமாகக் கொண்டாடி பொதுப் பணத்தை வீணடித்த உ.பி. முதல்வர் மாயாவதி, மீண்டும் தலைப்புச் செய்தி ஆகியிருக்கிறார்!

தமது கட்சி எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள், தங்கள் தொகுதி நிதியைக் கொண்டு நிறைவேற்றும் திட்டங்களுக்குக் கமிஷன் பெறுவதாகவும்; அக் கமிஷனில் ஒரு பகுதியை அவர்கள் கட்சிக்குத் தரவேண்டும் என்றும் வற்புறுத்தி மாயாவதி பேசிய பேச்சு ஒலி/ஒளிப்பதிவு செய்யப்பட்டுத் தற்போது நாடறிந்த விஷயமாகிவிட்டது.

ஒலி/ஒளிப்பதிவுகளை உள்நோக்குடன் 'எடிட்' செய்து தம் மீது அவதூறு சுமத்தப்பட்டுள்ளதாக மாயாவதி மறுப்பும் தெரிவித்து விட்டார்.


'எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள், தொகுதி நலப் பணிகளை நிறைவேற்ற கமிஷன் வாங்குவதைக் கண்டித்துத்தான் பேசினேன். கட்சி நிதிக்கு அவர்களைப் பணம் தரச் சொல்லித் தனிக் கோரிக்கை வைத்தேன். இரண்டையும் வெட்டி - ஒட்டி



கல்கி

2003 மார்ச் 16
சித்ரபானு பங்குனி 2
மலர் : 61
இதழ் : 33





சதி செய்து விட்டனர் எதிர்க்கட்சியினர்' என்பது மாயாவதியின் விளக்கம்.

எது உண்மை என்பதை நாம் நிரூபிக்க இயலாது. என்றாலும் மாயாவதியின் மறுப்பும் விளக்கமுமே இன்றைய அரசியல் சீரழிவைச் சுட்டிக் காட்டுகிறது:

1) எம்.பிக்கள், தங்களுக்கு ஒதுக்கப்படும் இரண்டு கோடி ரூபாய் தொகுதி நிதியை ஆக்கப் பணிகளுக்குப் பகிர்ந்தளிக்கும்போது, கமிஷன் பெறுகிறார்கள் என்பதை இவ்விளக்கம் உறுதி செய்கிறது. (மாயாவதி தங்கள் மீது அவதூறு சுமத்துவதாக பல எம்.பிக்கள் ஆட்சேபித்தாலும் இந்தக் கமிஷன் விவகாரம் ஊரறிந்த ரகசியமே!)

2) எம்.பி., எம்.எல்.ஏக்கள் ஜெயித்து, பொறுப்பேற்றதும் தொகுதிப் பணிகளில் கவனம் செலுத்துகிறார்களோ இல்லையோ, கட்சிக்கு நிதி சேர்ப்பதில் கவனம் செலுத்தியாக வேண்டும் என்கிற கட்டாயச் சூழல் இன்றைய அரசியலில் நிலவுவதையும் இவ் விளக்கம் விண்டு வைக்கிறது.

மாயாவதி மட்டுமல்ல, ஆட்சியைப் பிடிக்கும் அரசியல்வாதிகள் அத்தனை பேருமே, இன்று கட்சியும் ஆட்சியும் ஒன்றுதான் என்று கருதிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் — தங்களைச் செழுமைப்படுத்திக் கொண்டு, நாட்டை வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்க விடுகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் ஒவ்வொரு எம்.பிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகுதி அபிவிருத்திப் பணிக்கான தொகை, இரண்டு கோடி ரூபாயிலிருந்து மூன்று கோடி




ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்ற அபாயகரமான கோரிக்கை எழுந்திருக்கிறது. இக் கோரிக்கை நிறைவேறுமானால், மக்கள் வரிப்பணத்தில் மேலும் பல கோடி ரூபாய் விரயமாகுமேயொழிய, நற்பயன் எதுவும் விளையாது.

இதுவரையில் பல்வேறு எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதி நிதித் தொகை எவ்வகைகளில் செலவானது, என்ன பலன் தந்திருக்கிறது என்பதற்குக் கணக்கோ, மதிப்பீடோ கிடையாது.

எனவே, இந்தத் தொகுதி நிதி ஒதுக்கீட்டையே மொத்தமாக ரத்து செய்வதுதான் நல்லது. இப்போது மாயாவதியின் பேச்சையொட்டிக் கிளம்பியிருக்கிற சர்ச்சை, அவ்வாறு ரத்து செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

எம்.பி.க்களுக்குத் தொகுதி நிதியாக, ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வழங்குவதற்கான யோசனை, எக்கட்சியின் எதிர்ப்புமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது நினைவிருக்கும். அனைத்து அரசியல்வாதிகளும் இதில் ஒருமித்த நோக்குக் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

இதன் காரணமாகவே இந்த ஏற்பாடு ரத்தாவதென்பதும் மிகவும் கடினமானதாக அமையும். எனினும், அரசியல் தூய்மையையும் நாட்டின் நன்மையையும் மத்திய அரசு மதிக்குமானால், விரைந்து இந்தத் தொகுதி நிதி ஒதுக்கீடு நடைமுறையை ரத்து செய்தே ஆக வேண்டும். ○



காலிமனை

வாங்க வழியற்றவர்களையும்
ஏங்க வைத்துக் கொண்டிருக்கிறது
கட்டட நெரிசலுக்கிடையில்
ஒரு காலிமனை.

வாழ்ந்த பரம்பரையில் பிறந்து
வீழ்ந்த ஒருவனின்
வீடென்கிறார்கள் அதை.

விதம் விதமான கார்களில் வந்திறங்கி
விசாரித்துவிட்டுப் போகிறார்கள்,
காலிமனை மோகம் கொண்டலையும்
கட்டுமான அதிபர்கள்.

வாங்க முடிகிற வல்லமையோடு
விசாரிக்க வருகிறவர்கள்மீது
வெறுப்பைப் பீய்ச்சியடிக்கிறான்,
மனையின் மூலையில்
பால்மாடு கட்டிப் பராமரித்துவரும்
எதிர்வீட்டுக்காரன்.

விசாரித்து விளங்கிக் கொள்ள முடியாத ஒன்று
என்கிற கருத்து மண்டிக் கிடக்கிறது
அந்த காலிமனையின்மீது.


ஒருவேளை யாரேனும் ஒருவன்
தீர விசாரித்துத் தனக்கென அதைக்
கைமாற்றிக் கொண்டு களமிறங்கினால்
எங்கு போவானெனத் தெரியவில்லை
எவராலும் விசாரிக்கப்படாமல்
நீண்ட நாளாய் அங்கு மையங் கொண்டிருக்கும்
வழுக்கைத் தலை பிச்சைக்காரன்.

ஜெயபாஸ்கரன்









அனுபவம். கதைக்களம் வேற்று மண்ணானாலும், விழுதுகள் காற்றில் பறந்தாலும், வேர்கள் இங்கேதான் ஊடுருவியிருக்கின்றன என்பதைத் தெளிவாக்கியிருக்கிறார். கல்கியில் தொடராக வெளியான கதை நாவல் உருக்கொண்டுள்ளது.

கவிதா வெளியீடு, 8, மாசிலாமணி தெரு, தி. நகர், சென்னை - 600 017. விலை ரூ. 75/-

இந்திய செவ்வியல் நடனம் : கபிலோ வாத்ஸ்யாயன். தமிழாக்கம் : ரா. வெங்கடேஸ்வரன்

நடனக் கலையின் பரிணாம வளர்ச்சியையும், பரதம், கதகளி, ஒடிசி, மணிப்புரி, கதக் என இந்திய நடனங்களைப் பற்றியும் கூறும் நூல். நாட்டியக் குறியீட்டுச் சொற்களுக்குத் தெளிவான, விரிவான விளக்கங்களைத் தரும் இந்நூல், நடனக் கலையைப் பயில்பவர்கள் முழுமையாக அறிய உதவக்கூடியது.

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, புதுடில்லி-110 001. ரூ.245/-

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் - ஒரு திறனாய்வு - வே. பாலசுப்பிரமணியன்

பாமர மக்களுக்காக அந்த மக்களின் மொழியிலேயே ஆழமான பொருட்களையும் அழகான வடிவத்தில் தந்த 'மக்கள் கவிஞரின்' படைப்புகளை ஆய்வு செய்யும் நூல். பாரதியும், பாரதிதாசனும் விட்டுச் சென்றவற்றைத் தொட்டு முடித்து, மக்களிடம் சேர்த்தவர் கவிஞர் என்பதை நிரூபிக்கிறார் பாலசுப்பிரமணியன்.

ராஜேஸ்வரி புத்தக நிலையம், 4, முத்துகிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை-17. விலை ரூ. 60/-

கறுப்பு நாய் - சிபிச் செல்வன்

புலன்களின் வழி ஊடுருவும் உணர்வுகளைக் கனவுலகில் சேர்த்து, கற்பனை கலந்து கவிதைகளாக்கியிருக்கிறார். பழைமையும் புதுமையும் சேர்ந்து கைகோத்துக் கொண்ட நடை. கவிதை வாசிப்பு அனுபவத்தின் மற்றொரு கோணம்.

அமுதம் பதிப்பகம், 30, சம்பங்கி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ. 30/-

ஆன்மிக அமுதம் - ஓவியர் தாமரை

ஆன்மிக உலகில் அருள் பெற்றுச் சாதித்த ஞானிகள் பலரின் வாழ்விலிருந்து, மக்களுக்குத் தேவையானவற்றை செதுக்கித் தந்திருக்கிறார் சிற்பியாகி விட்ட ஓவியர்.

பல்லவி பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078. விலை ரூ. 35/-.

- சேனன்

கதை அருவி - தொகுப்பு

தனித்தனி அட்டைகளில் அச்சிடப்பட்ட, குழந்தைகளுக்கான நூறு கதைகளின் தொகுப்பு. கிராமப்புறக் குழந்தைகளின் கற்றல் திறன், மொழித் திறன், சித்திரம் - நாடகம் வடித்தல், விளையாட்டுக்கள், ஆகியவற்றில் திறமைகளை வளர்க்கவும், படிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவும் உதவும் சிறந்த முயற்சி.




சட்டநாத் அறக்கட்டளை, 10, ராஜா கிருஷ்ணா ரோடு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. விலை ரூ. 700; பள்ளிகளுக்கு விலை ரூ. 600/-

இக்கரையில் : காஞ்சனா தாமோதரன்

கனவுத் தேசமான அமெரிக்காவில் குடியேறி விடுபவர்களுக்கு ஏற்படும் கலாசார பாதிப்புகளின்

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.

ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

அன்புடையீர்,

நிகழும் சித்ரபானு வருஷம் பங்குனி மாதம் 7-ஆம் தேதி (21.03.2003) வெள்ளிக்கிழமை திருதியையும் ஸ்வாதி நக்ஷத்திரமும் கூடிய நன்னாளில் ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானுக்கும் மற்ற பரிவார தேவதைகளுக்கும் 6-ம் ஆண்டு **ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா** குருவருள், இறையருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது. இறையன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சி நிரல் 21.03.2003

காலை	மணி	07.30	— புண்யாஹவசனம், அனுக்ஞை, மஹா ஸங்கல்பம்
காலை	மணி	06.00	— ஸ்ரீ மஹாகணபதி ஹோமம், ஸ்தபன பூஜை
காலை	மணி	09.00	— நவக்ரஹ ஹோமம்
காலை	மணி	10.00	— ஜபம் - பாராயணம், பூஜை, ஹோமம்
பகல்	மணி	11.00	— பூர்ணாஹுதி
பகல்	மணி	12.00	— மஹாபிஷேகம் _ அர்ச்சனை
பிற்பகல்	மணி	01.00	— மஹாதீபாராதனை.
பிற்பகல்	மணி	02.00	— திருமுறை இன்னிசை — ஏற்று போற்றுவோர் திருச்சி BHEL கைலாசபுரம் திருவாசக குடும்பத்தினர்
பிற்பகல்	மணி	03.30	முதல்
மாலை	மணி	05.30	முடிய — ஸ்வாமி அம்பாளுக்குத் திருக்கல்யாண உத்ஸவம்
மாலை	மணி	06.00	— இன்னிசை

அனைத்து வைபவங்களும் சிவாகம சிரோமணி, அலங்கார கலாரத்தினம் வடகுடி ஸ்ரீ D. கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் திருக்கோயில் அர்ச்சகர் சிவத்திரு. பா. நாகராஜ சிவாச்சாரியார் மற்றும் பல சிவாகம விற்பன்னர்கள் துணையுடன் நடைபெற இருக்கின்றன.

இங்ஙனம்,

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்,
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்

என்றும் இறைபணியில்
ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
மற்றும் கிராமவாசிகள்



ஆர். கண்ணன்

> தயாராக இருந்தால் அதுவே தன்னம்பிக்கை தரும்;
> மற்ற எதுவும் நம் கைவசம் இல்லை.
>
> **- ரிச்சர்ட் க்ளைன்**

தேர்வுக்கு சில டிப்ஸ்!

மாணவர்களுக்கு வழிகாட்டும் துடிப்புத் தொடர்

சேகருக்குப் பரீட்சை வருகிறது என்றாலே ஒரு வித பயம் வந்துவிடும். படித்தது போதுமா? இன்னும் ரிவைஸ் பண்ணணுமா? நிறைய மார்க் கிடைக்குமா? தேர்வு கடினமாக இருக்குமா? - என்று பயமும், படபடப்பும் உண்டாகிவிடும். சேகர் ஓர் உதாரணம்தான்.

படிப்பில் உங்கள் திறமையை எடை போடத்தான் தேர்வுகள் வைக்கிறார்கள். நீங்கள் எந்த அளவுக்குச் சாதித்திருக்கிறீர்கள், அல்லது உண்மையாகவே உங்கள் திறமை என்ன என்று அறியக் கையாளப்படும் வழக்கமான உத்தியே தேர்வுகள். இதற்காக நீங்கள் சில முக்கியமான குறிப்புகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

திட்டமிடுதல், திரும்பப் படித்தல் :

கற்பதில் சிறந்த முறை எது தெரியுமா? அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுத் தெரிந்து கொள்வதுதான். ஒவ்வொரு சப்ஜெக்டிலும் எத்தனை தடவை முடியுமோ, அத்தனை தடவை கொஞ்சம் கொஞ்சமாகப் படியுங்கள்.

முதலில், படிக்கிற நேரத்தை எப்படிச் செலவழிப்பது என்று திட்டம் இடுங்கள் :

என்ன எல்லாம் செய்ய வேண்டும் என்று வரிசையாக ஒரு டயரியில் குறித்து வையுங்கள். ஒரு சமயத்தில், ஒரு வாரத்துக்கு மேல் திட்டமிடாதீர்கள்.

ஒரே நாளில் உங்களை மாற்றி அமைத்துக் கொண்டு விடலாம் என்று நினைக்காதீர்கள். ஆனால் ஒரு சின்ன வெற்றிகூட, அடுத்த பல வெற்றிகளுக்கு வழி திறந்து விடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் என்ன படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களோ, அதை மறுபடி நினைவில் கொண்டு வர, திரும்பப் படித்தல் உதவும். ஒவ்வொரு முறை திரும்பப் படிக்கும் போதும் பொருள் இன்னும் தெளிவாகப் புரியும்.

இதை எப்படிச் செய்வது?

எவை முக்கியமாகத் திரும்பப் படிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அவற்றை மட்டும் குறித்துக் கொண்டு படியுங்கள்.

உங்களால் முடிந்த அளவுக்கு, கேள்விகள் எப்படி அமையும்

என்று ஊகித்துப் பாருங்கள். அதை ஓர் அட்டையில் பட்டியல் இட்டு, அதற்கான பதில்களைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்.

பழைய தேர்வுகளின் கேள்வித் தாள்களை வைத்துக் கொண்டு, உங்கள் முன்னேற்றத்தைக் கணக்கிடுங்கள். தேர்வுக்கு முந்தைய வாரம் வரை, இந்தப் பயிற்சியில் ஈடுபடுங்கள். பழைய தேர்வுகளின் கேள்வித் தாள்களை உங்கள் பயிற்சியின் அனுபவ பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

'தேர்வுக்கு முன் நாள் என்ன செய்ய தேர்வு அன்று -

அடித்துப் பிடித்துக் கொண்டு புறப்படாமல், நேரத்துக்குச் சற்று முன்னதாகவே போய்ச் சேர்ந்து விடுங்கள். அப்போதுதான் பரபரப்பு இல்லாமல் இருக்க முடியும். நன்றாக ஆழமாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டு, உடம்பை ரிலாக்ஸ்டாக வைத்துக் கொள்ளுங்கள்.

எதை எல்லாம் கொண்டு செல்ல வேண்டுமோ, அதை எல்லாம் மறக்காமல் எடுத்து வைத்துக் கொண்டு விடுங்கள்.



வேண்டும்?'

தேர்வுக்கு முதல் நாள் நார்மலாக இருங்கள். எப்போதும் போலச் சாப்பிடுங்கள். நார்மலாகவே தூங்குங்கள். தேர்வுக்குப் புறப்படு முன் லைட்டாக உணவு உட்கொள்ளுங்கள். மூளைக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள அதற்குக் கொஞ்சம் அவகாசம் கிடைக்க வேண்டாமா?

கடைசி நிமிஷத்தில் எல்லா விஷயங்களையும் போட்டு மண்டைக்குள் திணிக்கப் பார்க்காதீர்கள். கடைசி நிமிடப் படிப்பு ஒரு வேளை உங்கள் நினைவுச் சக்தியைக் கூடப் பாழாக்கிவிடக் கூடும்.

ஹாலுக்குள் நுழைவதற்கு முன் யாருடனும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

தேர்வின்போது -

எல்லா பதில்களும் தெரியவில்லையே என்று கவலைப்படாதீர்கள். உங்களுக்குத் தெரிந்த பதில்களை வைத்துக் கொண்டு நன்றாக எழுத முயலுங்கள்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வித் தாளில் கொடுத்திருப்பதைப் படியுங்கள். ஒருமுறைக்கு இரண்டு முறை, மூன்று முறை படியுங்கள். உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்.

எது எதற்கெல்லாம் ஈஸியாகப் பதில் சொல்லத் தெரிகிறதோ அதற்கெல்லாம், முன்னால் விடை எழுதி விடுங்கள். இதனால் அமைதியாகச் செயல்படலாம். தானாக உற்சாகத் தூண்டுதல் உண்டாகும். நேரம் வீணாகாது.

எதற்கெல்லாம் பதில் தெளிவாக எழுத முடியாது என்று தோன்றுகிறதோ, அதற்கு எதிரே சின்னதாக ஒரு கேள்விக் குறியை மட்டும் போட்டு வையுங்கள். பிறகு நேரம் இருக்கும்போது மறுபடி யோசித்துப் பார்க்கலாம்.

கேள்விகளின் எல்லாப் பிரிவுகளுக்கும் நேரம் ஒதுக்கப் பாருங்கள். அதன்படியே நடந்து கொள்ளுங்கள். அப்போதுதான் கூடுமானவரை அதிகக் கேள்விகளுக்குப் பதில் எழுத முடியும். கடிகாரத்தின் மீதும் ஒரு கண் இருக்கட்டும். கடைசி நிமிட அவதியைத் தவிர்க்கலாமே?



''படகு மறைவில் உட்கார வேண் டாம்னு சொல்றியே... ஏன்... வெட்கமா?''

''சுண்டல்காரன் வந்தா தெரியாமப் போயிடுமோ!''

— அருள்மூர்த்தி

கேள்விகளில் கம்பேர் (ஒப்பிடு), கான்ட்ராஸ்ட் (மாறுபட்ட), எவால்யுவேட் (சீர்தூக்கி), டிஃபைன் (விளக்கு) போன்ற முக்கியமான வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.

நேரத்துக்குள் முடிக்கப் பாருங்கள். கடைசிக் கேள்வியை முடிக்கக் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது என்றால், என்னென்ன பாயிண்ட்டுகள் முக்கியமோ அவற்றை மட்டுமாவது வரிசையாக எழுதுங்கள்.

எண்ணிக்கையை விட, தரத்துக்கு முக்கியத்துவம் அளியுங்கள். பதில்கள் தெளிவாக இருக்கிறதா, ஸ்பெல்லிங் தவறில்லாமல் இருக்கிறதா, கால்குலேஷன்ஸ் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிடுங்கள். பதில்களின் எண்களைச் சரியாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களா, கேள்வித் தாள்களில் உள்ள கட்டளைப்படி எழுதியிருக்கிறீர்களா - பாருங்கள்.

யாரைக் கேட்கலாம்?

ஆசிரியர்கள், பேராசிரியர்களிடம் உரையாடுங்கள். அவர்கள் கற்றறிந்த புத்தகங்கள் மூலமாக, நீங்கள் கேட்கிற அம்சங்களைப் புரிந்து கொண்டு பல வழிகளில் தெளிவு படுத்துவார்கள். தேர்வில் கேள்வித் தாள்கள் எப்படி அமைக்கப்படும், எந்த மாதிரி வினாக்கள் எழுப்பப்படும் என்பதை எல்லாம் அவர்கள்தான் அறிவார்கள்.

பெற்றோருக்கு உங்கள் வெற்றியில் நிச்சயம் அக்கறை இருக்கும். நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா என்பதைச் சோதித்துப் பார்க்க, பெற்றோர் அல்லது தகுதியான குடும்ப உறுப்பினரிடம் நீங்கள் புரிந்து கொண்ட பதிலைச் சொல்லுங்கள். நீங்கள் எதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர்களும் கூடச் சொல்லித் தருவார்கள்.

நூலகத்துக்குச் சென்று படியுங்கள். பாடப் புத்தகத்தில் நீங்கள் படித்துப் புரிந்து கொள்ளச் சிரமப்பட்ட கட்டுரை, புத்தகத்தில் எளிதாக இருக்கும். செய்தித்தாள் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். முதல் பக்கம் முதல் கடைசிப் பக்கம் வரை, விலாவாரியாகப் படிப்பதற்குப் பதில், செய்திகளை மேலோட்டமாக ஒரு பார்வையில் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் தேர்வில் எழுதுவது என்பதுதான், நீங்கள் எவ்வளவு தூரம் உங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் காட்டும். எனவே தயாராக இருப்பதில் சிரத்தையாக இருங்கள். நம்பிக்கையுடன் தேர்வுகளைச் சந்தியுங்கள்.

ஆல் த பெஸ்ட்!

(அடுத்த வாரம் : போட்டித் தேர்வுகளில் (competitive exams) வெல்வது எப்படி?)

மூட்டு வலியா?

ORTHOCURE™
ஆர்தோக்யூர்

மாத்திரைகள் மற்றும் ஆயில்

(இது ஒரு இந்திய ஆஸ்திரேலிய கூட்டு முயற்சி)

Product of **NATURE REMEDIES (P) LIMITED** CHENNAI-600 083



மூட்டு வலியால
அவதிப்பட்டேன்!
ஆர்தோக்யூர்
சாப்பிட்டு ரொம்ப
ஈசியா என்னால
திருப்பதி மலை
கூட ஏற முடியுது.

NO SIDE EFFECTS



MARKETED BY:

KUREWEL PHARMA

CHENNAI-600 083
PH: 044 2489 3013, 2471 1719

STOCKISTS

Chinmaya Nagar	Vasantha Enterprises	24795251, 24794101
Sowcarpet	Srinath Medical Agencies	25352799, 25359087
Annanagar	Perfect Medical Enterprises	26150253, 26150948
Teynampet	Pritam Pharmaceuticals	24338456, 24335098
Mylapore	S.V.S.Agencies	24941057
Perambur	Kumaran Pharma Agencies	25584285, 25592822
Tiruvottiyur	Kumaran Agencies	25734336, 25727953
Nanganallur	Shri Murugan Agencies	22327451
Chitlapakam	V.A.Agencies	22237379
Pudukkottai	A.V.Medical Agencies	220181, 224171
Dindigul	Alagappa Agencies	2433914, 2433915
Palani	Best Medical Agencies	245049, 247690
Mayiladuthurai	Chellas Enterprises	2243272
Madurai	Dhanalakshmi & company	2621421, 2631582
	Sri Pushpa Agencies	2630371, 2630719
Nagapattinam	Eagammal Agencies	220983
Erode	ESS Jay Agencies	2268855
Krishnagiri	Kuttappa Agencies	231211
Tirupur	Kumaran Pharma	2427193
Kanchipuram	Kanagavalli Pharma	220326, 233144
Karaikal	Maragatham Medicals	222079
Coimbatore	M.S.Agencies	2491554
Thiruvallur	Medicare Agencies	264997
Arakonam	Murugan Pharma	224225
Tiruvannamalai	Mohana Agencies	227689
Tiruvarur	Maharaja Traders	225146
Pollachi	Pharmaceutical Services	220435, 223335
Pondycherry	Pharm House	2212001, 2211702
Cuddalore	Arcot Agencies	230592
Tindivanam	P.R.R.Pharma	224313
Karur	Showraa Agencies	236573
Thanjavur	Sidharth Pharma	224024
Vandavasi	Srinivasa Medicals	225135
Chengalpattu	State Pharma Distributors	222159
Kumbakonam	Sri Bargavi Agencies	2426426
Ranipet	Sri Rajeswari Pharma	222788
Villupuram	Saraswathi Agencies	224224 224242
Tirupattur	Srinivasa Pharma	227498, 221145
Tirunelveli	SPM Medical mart	2333801, 2331318
Erode	Shri Ramana Medical Agencies	2253421
Chidambaram	Salamia Distributors	220871
Arni	Sri Guna & Company	226470
Nagerkoil	Saravana Pharmaceutical	232341
Trichy	Uthra Marketing	2760542
	V. R. Agencies	**2740933**
Salem	Vinayaga Agencies	2266098, 2266114

கண்டக்டர் வக்கீல்!

சென்னை மாநகரப் பேருந்தில் 'நடத்துனராக' வாழ்க்கையைத் தொடங்கி, இடையில் 'வழக்கறிஞர்' பயிற்சி பெற்று, மறுபடியும் பழையபடியே நடத்துனராக டிக்கெட் கிழித்துக் கொண்டிருக்கிறார் ஓ. சுந்தரம்!


"பர்மா தமிழர்களாகச் சென்னை வந்த குடும்பம் எங்களுடையது. பூர்வீகம் சிவ கங்கை. 1979ஆம் வருஷம் பியூசி வரை படிப்பை முடித்திருந்த எனக்கு 'மாதவரம் பால் பண்ணை' பணிமனையில் நடத்துனர் வேலை கிடைத்தது. ஒருநாள் எங்களின் குடும்ப ஜோஸ்யர் ஒருவர் என் கைரேகையைப் பார்த்துட்டு, இனி உனக்குப் படிப்புங்கறதே கிடையாது. இந்த பி.யு.சி.தான் உன் வாழ்க்கையின் இறுதிப் படிப்புன்னார்.

"அன்றையிலிருந்து படிப்பு மேல தனி ஆர்வமே வந்தது. அஞ்சல் வழி பி.ஏ. தமிழ் இலக்கியம் படித்து முடிச்சேன். அந்த ஜோஸ்யருக்குத் தகவல் சொன்னேன். கல்விக்கு எல்லை கிடையாதுன்னு முடிவு செய்து, எம்.ஏ. முடிச்சேன். இதுக்குப் பெரிய வழிகாட்டியாக இருந்தவர் பேராசிரியை சரஸ்வதி. இதற்கிடையில 'நடத்துனர்' பணியைத் தொடர்ந்துட்டிருந்தேன். கவிதை, கட்டுரை எழுதறதுல ஆர்வம் இருந்ததால, 'இதழியல்' படிப்பையும் விட்டு வைக்கலை. அப்புறம் இடையில் ஒரு சின்ன திருப்பம். ஒரு வழக்கில் சிறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை வந்தது. சிறையில் நான் பார்த்த வாழ்க்கை, மனிதர்கள், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த வழக்குக் காரணமா என்னை 'நடத்துனர்' பணியிலிருந்து நீக்கிட்டாங்க. என் மனைவியும் உடல்நலமில்லாம இறந்துட்டாங்க. இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு நிர்க்கதியாக நிற்கும் போது, என்னுடைய நண்பர் சவுரி ராஜன், உதவிகள் செய்தார். என்னைப் பணி நீக்கம் செய்தது தவறுன்னு ஒரு வழக்குத் தொடர்ந்தேன்.

"சிறையில் தவிக்கும் சிலரைப் பார்த்த அனுபவத்தினால் வழக்கறிஞருக்குப் படிக்கணும்னு முடிவு செய்து, 1995ஆம் ஆண்டு சென்னை சட்டக் கல்லூரியில் 'பி.எல்.' சேர்ந்தேன். 1998 ஆம் ஆண்டு படிப்பை முடிச்சேன். வக்கீலாயிட்டேங்கற சந்தோஷம்'' என்று சொல்லி முடித்தவர், தன்னைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

வக்கீலான பிறகு வித்தியாசமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறார் சுந்தரம். "குடும்ப நீதிமன்றத்தில் ஒரு வித்தியாசமான வழக்கு வந்தது. பெரும்பாலும் ஆண்கள்தான் பெண்களை ஏமாற்றிட்டாங்கன்னு குற்றச்சாட்டு வரும். நான் சந்தித்த வழக்கு, ஒரு பெண், ஒரு ஆணை ஏமாற்றி விட்டார் என்பது. ஒரு கல்லூரியில் 'லெக்சரராக' பணிபுரிந்த பெண், அங்குப் படித்த மாணவனை கல்யாணம் பண்ணிட்டாங்க! அந்த மாணவன் சின்னப் பையன். மாணவனின் பெற்றோர் விவகாரத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்துட்டாங்க.


'அந்த மாணவனை 'டைவர்ஸ்' செய்யணும்னா, எனக்கு ஒரு கணிசமான தொகை வேணும்னு அந்தப் பெண் பேரம் பேச ஆரம்பிச்சுட்டாங்க. எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. சரி என்ன செய்ய, கேட்ட தொகையைக் குறைச்சு, அதன் பிறகு அவங்களுக்கு 'டைவர்ஸ்' வாங்கிக் கொடுத்தேன்'' என்கிறார்.



''அது சரி, கறுப்பு கவுனிலிருந்து எப்போ கண்டக்டர் டிரஸ்ஸுக்குத் திரும்புனீங்க?''

''என்னைப் பணி நீக்கம் செய்ததை எதிர்த்து நான் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு, எனக்குச் சாதகமா வந்தது. பிறகு வக்கீல் தொழிலை விட்டு, பழையபடி கண்டக்டர் வேலைக்கே வந்துட்டேன். அடையாறு பஸ் நிலையத்திலிருந்து, பாரி முனை வரை செல்லும் தடம் எண் 5ல்தான் மீண்டும் என் நடத்துனர் பயணம் தொடருது'' என்கிறார்.

''நடத்துனர் 'பப்ளிக் சர்வென்ட்'னும் சொல்லலாம். இத் தொழிலில் கனிவு,





பணிவு, துணிவு, இது மூணும் அவசியம். நான் செல்லும் வழித்தடங்களில் பொது மற்றும் தனியார் மருத்துவமனை, ஏழு இருக்கு. இதில், 'அரசு பொது மருத்துவமனை, 'இராயப்பேட்டை மருத்துவமனை' பஸ் ஸ்டாப்பிங்கில், சில நோயாளிகள், மூக்கில் டியூப் வைத்தபடி பஸ்ஸிற்காகக் காத்திருப்பாங்க. அவங்களுக்காக வண்டியை நிறுத்தி கனிவா ஏத்திட்டுப் போவேன். இதே போல் பெண்களை 'ஈவ் டீசிங்' செய்றவங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. சமயத்தில் சில பேரைப் பிடித்து தர்ம அடி கொடுத்திருக்கேன்'' என்கிறார்.

''பிக்பாக்கெட் ஆசாமிகளை கண்டக்டருக்கு நன்றாகத் தெரியுங்கறாங்களே, உண்மையா?''

''உண்மைதான். அதனால் தான் பயணிகள் டிக்கெட் வாங்கியவுடன் வழியில் நிற்காதீங்க, உள்ளே போங்க என்று மறைமுகமாக எச்சரிக்கிறோம். பிக்பாக்கெட் ஆசாமிகளை போலீசில் பிடிச்சுக் கொடுத்தா, பிறகு ஏதாவது செஞ்சுடு வாங்கங்கற பயத்திலேயே பெரும்பாலான கண்டக்டர்கள் சும்மா இருக்க வேண்டிய நிலை ஏற்படுது. பயணிகள்தான் தங்கள் உடைமைகளை உஷாராக வைத்துக் கொள்ளணும்'' என்கிறார் எல்லோரையும் போல.

''இந்த 'நடத்துனர்' வேலையை என் மனைவியை விட ஒரு படி அதிகமாகவே நேசிக்கிறேன். தினம் தினம் பல மனிதர்களைச் சந்திக்கும் இத்தொழிலில், மனிதர்களைப் புரிந்து கொள்ளக்கூடிய 'உளவியல்' அவசியம் வேணும். அப்போதான் அவங்களுக்கு ஏற்ற மாதிரி நடந்து கொள்ள முடியும்'' என்கிறார் சுந்தரம். தன்னுடன் பணிபுரியும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் போது தகுந்த சட்ட ஆலோசனைகளையும் வழங்குகின்றாராம்.

செய்யாறு வி. பாலு

படங்கள் :

'டிஜிட்டல்' சண்முகம்.

வட்டமேஜை

✉ ஆர். கண்ணனின் "ஏறு நூறு" வழிகாட்டித் தொடர், நிச்சயம் மாணவச் செல்வங்களை முன்னேற்றும்.

நெய்வேலி, சு. இந்துமதி.

✉ 'ஜூலி கணபதி'யில் இடம் பெற்ற தொலைக் காட்சித் தொடரின் பெயர் 'மங்கா', கல்கியின் விமர்சனத்தில் 'கங்கா' என்று அச்சாகியுள்ளதை... கவனிக்கவில்லையா?

திருச்சி - 2, த.சந்தானகுமார்.

✉ உலகக் கோப்பை ஸ்பெஷல் பிரமாதம்! கல்கியைப் படித்து முடித்தவுடன் கோப்பையை நமது அணியினர் வென்று வெற்றி வாகை சூடிய திருப்தி ஏற்பட்டது.

பள்ளப்பட்டி, த. அசாருதீன்.

✉ வந்தியத்தேவன் வழியிலே... தலைப்பில் விஷ்வக்சேனனின் (பயணக்) கட்டுரை மீண்டுமொரு முறை பொன்னியின் செல்வனைப் படித்த உணர்வைத் தந்தது. கதை நடந்த இடங்களுக்கெல்லாம் சென்று திரும்பிய குழுவினரை நினைத்தால் பொறாமையாக இருக்கிறது.

மொரட்டுப்பாளையம், இரா.வி. சௌந்தர்யா.

✉ இங்கிலாந்து ஏன் ஜிம்பாப்வேக்கு செல்ல மறுக்கிறது? என புரியாமல் விழித்தோம். 'ஜிம்பாப்வேயில் என்னதான் பிரச்னை?' கட்டுரை அதற்கு விளக்கம் தந்தது.

திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்.

✉ நாடகங்களின் தரம் உயர வேண்டுமே என 'தராக' ஆதங்கத்துடன் கூடிய ஆசைப்பட்டவுடன் அதற்கு பலன் கிடைத்து விட்டதாகத் தோன்றியது 'ஊர்க்குருவி'யின் விமர்சனம் மூலம்!"

பொன்மலை, ஆர்.பிரகாஷ்

✉ 'ஆடறது கபடியில்லை!' என்ற தலைப்பிலான கட்டுரை நன்றாக இருந்தது. சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டியது. ஒரே குஷியில் இந்த இதழ் 'கிரிக்கெட்' செய்திகளை விடாமல் படித்துவிட்டேன்."

சேலம்,

சின்ன வெங்கட்ராமன்



'மங்கா'வ கங்கா ஆக்கிட்டீங்களே!

✉ தேர்தல் என்பது கட்சிகளை பொறுத்தவரை வெற்றி, தோல்விகளுக்கே வழி வகுக்கும்! ஆனால் தேர்தல் கமிஷன் தனது ஜனநாயக கடமையிலிருந்து தோல்வியையே சந்திக்க கூடாது என்பதைத் தலையங்கம் உணர்தியது. என்ன செய்ய? அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுவதிலிருந்து தேர்தல் கமிஷன் தன்னை தானேக் கூட காப்பாற்றி கொள்ள முடியவில்லையே.

திருச்சி, ஆர்.அப்துல் சலாம்

✉ "இப்படியும் சொல்வாங்க" என்று சாருகேசி சொன்னதைக் கேட்டு விட்டு, விழுந்து விழுந்து சிரிக்காதவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் உடனடியாக மன நல மருத்துவரைத்தான் தொடர்பு கொள்ள வேண்டும்.

சென்னை5,

கே.தெய்வசிகாமணி



✉ சராசரி அப்பாக்களின் உள்மன ஏக்கங்களையும், காலத்திற்கேற்ப போடும் வேஷங்களைச் சரியாக நிர்வகிப்பதையும் உணர்த்தியது 'ம.வே. சிவ குமாரின் 'லகான்' சிறுகதை.

குட்டலாடம்பட்டி,


கொ. மூர்த்தி.

போகவா? வேண்டாமா? அவமானமாகுமே? தன்மானத்துக்கு இழுக்கு என்றாகுமே? இப்படியான கேள்விகளாலும், தயக்கங்களாலும் அலைக்கழிக்கப்பட்டதன் மயக்கம் - இன்னமும் எனக்குள் தீரவில்லைதான். நீளமான குழப்பம் வலை பின்னியது.

“ஐயா போனீங்கன்னா - அவனுக்குத்தான் கௌரவம். சிஷ்யனை வரவேற்கக் குருவே வந்தாருன்னு பாராட்டுவானுங்க. இல்லேன்னா பொறாமைன்னு கிசுகிசு எழுதுவானுங்க பத்திரிகைக்காரங்க. ஐயா — உக்கார வேண்டிய மேடைல நேத்து வந்தவன் உக்காரப் போறான். வருத்தம்தான். போகாதீங்கய்யா. நேத்து முளைச்ச காளானை வரவேற்க ஆலமரமா போகறது?”

மிச்ச சொச்சத் தொண்டர்கள் இந்த வேப்பிலையைத் தொடர்ந்து அடித்ததில், நானே கரைந்துதான் போயிருக்கிறேன். ஒருவகையான இளகல் நிலை இப்போது.

“மரியாதைக்குக் கூட ஐயா பேரு இல்ல. மதியாதார் தலைவாசல் மிதிக்காதீங்கய்யா...!” — மாண்புமிகு முன்னாளை அழைக்காத ஆத்திரத்தில் அழைப்பிதழைக் குத்திக் காட்டிப் பேசினார்கள் அணுக்கத் தொண்டர்கள். ஆனால் – மதியாதார் தலைவாசல் என்பதெல்லாம் இதற்குத் தோதுப்படாது என்பது புரியாத மரமண்டைத் தொண்டர்கள். இவர்கள் சொல்வதைச் செய்தால், உயிரோடு சமாதிதான் எனக்கு. இப்போதைய வனவாசமே கல்லறைக்குள் கிடப்பது மாதிரி பரிதவிக்க வைக்கிறது.



அந்த அழைப்பிதழ் பிரம்மாண்டமாய் இருந்தது. அவனின் கும்பிட்ட புகைப்படமும், தலைமையின் புகைப்படமுமாய்.

இந்தப் பயலை அரசியலுக்கு இழுத்து வந்ததே நான்தான். புழுக்கைப்பயல். நான் சொல்லிக் கொடுத்த தகிடுதத்தமெல்லாம் ரொம்பச் சரியாய்க் கற்றுத் தேர்ந்து, எதிர்த் தலைமைக்கு வலது கை நெருக்கமாகி, நாற்பது வயசிலேயே மந்திரியாகி விட்டான். எனக்கு ஐம்பதில் வாய்த்த அமைச்சர் பந்தா, பகட்டு. தொண்டர் படை எல்லாம் நாற்பதிலேயே சித்தித்திருக்கிறது இந்த நாய்க்கு. மாஜிதான் என்றாலும், தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. நான் தானே? அவனை வரவேற்கும் அரசியல் மரியாதை நிர்ப்பந்தம் இருக்கிறதே? போகவா? வேண்டாமா?

நான் மந்திரியாக இருந்த போது, தொகுதி உறுப்பினர்கள் வரவேற்கவோ, கூட்டத்துக்கோ வராவிட்டால், எத்தனை முறை புழுதிவாரித் தூற்றியிருக்கிறேன்? கேணப் பயல், கோழை, முதுகெலும்பில்லாதவன், தைரியமில்லாதவன், இன்னபிற வசவுகள் தான் எழுத்தில் வடிக்கவும், படிக்கவும்



கூடியவை. பிறவெல்லாம் காது கொடுத்துக் கேட்கும் தகுதி பெற்றவையல்ல. குருவானாலும் என்னை - இவனும் மேடையேறித் திட்டுவானோ? செய்யக்கூடும். செய்தால் தானே அரசியல். ஹைகமாண்ட் தவிர, வேறெதுவுமே நிஜமில்லை என்கிற மயக்கம்தானே அரசியல்?

முந்தியெல்லாம் கடச்கட வெளுத்த வெள்ளை வேட்டி சட்டை, செண்ட் மணக்க, விழாவுக்குப் போவதே சந்தோஷமாயிருக்கும். போகும் வழியெல்லாம் கொடிகள் கையசைத்துக் கூப்பிடும்.

பெருமூச்சின் நீளம்

ஆண்டாள் பிரியதர்ஷினி

எனது படமும் பெயரும் போட்ட தட்டிகளும், 'வருக வருக' என்று எழுதப்பட்ட பதாகைகளும் வளாகத்தை நிறைக்கும். கரை வேட்டியில் காத்திருக்கும் தொண்டர்கள்; மந்திரியின் பார்வை நம் மீது விழாதா என்று ஏங்கும் சாதாரணர்கள், அவர்களைத் தெரிந்த மாதிரி பாவித்து, 'என்ன? சௌக்கியமா?' என்று பொதுவாய்க் கேட்டுத் தோளில் தட்டினால், ஜென்ம சாபல்யம் அடைந்ததாய்ப் புளகாங்கிதம் கொள்ளும் மக்கள். புகைப்படக்காரர்களும், டி.வி. சானல் கேமரா விளக்குகளும் பளீர் வெளிச்சத்தில் மூழ்கடிப்பதும், தொடரும் செய்தி அறிக்கையிலும், தினசரிகளிலும் நான் ஆக்கிரமிப்பு செய்வதும் சுகம்.

'அண்ணே... அண்ணே...' என்று நெருக்கியடித்த காக்கா கும்பல் வெளிச்சம் இல்லாத இன்றைய இருட்டு நாட்கள் - நரகமாக இருக்கிறது. வெறுப்பாயிருக்கிறது. என் திருமுகமும், செய்தியும் தாங்காத செய்தி அறிக்கையும்; தினசரியும் பார்க்க நேர்கையில், நான் உயிரோடுதான் இருக்கிறேனா? என்னை அறியாமலே, எனக்குத் தெரியாமலே மண்டையைப் போட்டு விட்டேனா, என்கிற சந்தேகம் வருகிறது. இப்படியே இருட்டில் இருந்தால், பாடையில் தூக்கிப் போய்ப் புதைத்தே விடுவார்கள். இருப்பை நிரூபிக்க வேண்டும். இருப்பை வெளிச்சப் படுத்த வேண்டும். அரசியலின் அடிப்படைத் தகுதி நிலை அதுதானே?

அமைச்சராயிருந்த அற்புத சமயத்தில், தலைப்புச் செய்திகள் வெட்டி ஒட்டின கோப்பு - பார்வைக்கு வரும். இலேசாய்ப் புரட்டிப் பார்ப்பதற்குக் கூட நேரமிருக்காது. விடிந்தால் நாள் ஓடிப் போய் முடிவதே தெரியாது. மின்னலாய் முடிந்து விடும். உதவியாளர், குறிப்பேட்டுடன் வந்து, ஒவ்வொரு நாளுக்கும், ஒவ்வொரு மணிக்கும் என்ன பணி என்று பட்டியலிட்டுத் திறப்பு விழா, பாராட்டு விழா, வெளியீட்டு விழா, இலவச உதவிகள் விநியோக விழா. பத்திரிகை பேட்டி, அதிகாரிகளோடு கூட்டம் என்றெல்லாம் - கை சொடக்கில் முடிந்திருக்கின்றன.

பதவி வந்தால், உடம்பிலேயே கூட ஒரு மதர்மதர்ப்பு. தெனாவெட்டு. தேஜஸ் எங்கேயிருந்துதான் வருமோ, நிமிஷமாய் வந்து விடும். எனக்கே கூட ஆச்சர்யம்தான். எம்.எல்.ஏ. ஒரு ஜொலிப்பு என்றால், அமைச்சர் ஸ்தானம் அடுத்த பளபளப்பு. என் மூஞ்சியை எனக்கே நம்ப முடியவில்லை. நான்தானா அது? நானேதானா? கன்னங்கரேலென்று எண்ணெய் வழியும் மூஞ்சியும், குட்டை கட்டையுமாய்க் கிராமப்புறத்தான்



தோற்றமுமாய் இருந்த நான்தானா அது? ஐந்து நட்சத்திர ஹோட்டலின் ப்யூட்டி பார்லரில் ஷாம்பூ குளியலும், மசாஜும், முக வெளுப்புமாக மாறி விட்டது நான்தானா? இத்தனை அழகா என் மூஞ்சி? அது தான் எத்தனையோ பெண்கள், "ஐயா, மனசு வையுங்கய்யா...' என்று நெருங்கினார்கள். மசிந்து விட மாட்டேனா என்று பார்வையிலேயே உருகினார்கள். இப்போது ஒரு நாய் கூடச் சீந்த மாட்டேனென்கிறது. செத்த எலியைப் பார்ப்பது மாதிரி ஒதுங்கிப் போகிறதுகள். ஒவ்வொரு நாளையும் பிடித்துத் தள்ளுவதற்குள் தாவு தீர்ந்து விடுகிறது. உன்பாடு என்பாடு என்றாகிறது. ஏண்டா மறுநாள் விடிகிறது என்றிருக்கிறது. நிமிஷங்கள் - நத்தைகளாகி ஊர்கின்றன. நாட்கள் இயக்கமேயின்றி இறுகியிருக்கின்றன.

எவனாவது மண்டையைப் போட்டாலாவது பரவாயில்லை. ஒரு மாலையையோ, மலர் வளையமோ தூக்கிப் போய் வைத்துக் கும்பிடு போட்டு விட்டு வந்தால் டீ.வி. செய்தியில் மூஞ்சி தெரிய வாய்ப்புண்டு. செய்தித்தாளிலும், இறுதி அஞ்சல் செலுத்தியவர் பட்டியலில் பெயர் வரும். கட்சிப் பாகுபாடு இல்லாமல் இறுதி மரியாதை செய்தார், என்ற பெயராவது மிஞ்சும். ஹும். அதற்குக் கூடக் கொடுப்பினை இல்லை.

இன்னும் எத்தனை நாள்தான் இந்த சாய்வு நாற்காலியே கதி என்று ஒய்ந்து கிடக்க?

"எதுக்கு பையனை போட்டு அடிக்கிறீங்க?"

"திரை கடலோடியும் திரவியம் தேடு'னு சொல்லிக் குடுத்தா, சின்னத் திரையா பெரிய திரையான்னு கேட்கறான்."

— மதுரை என். உஷாதேவி



நல்லவேளை – இங்கே இத்தனை மாநிலங்கள் இருக்கின்றன. அடுத்த மாநிலத்தில் மருத்துவக் கல்லூரியாக, பொறியியல் கல்லூரியாகக் கழுக்கமாகக் காதும் காதும் வைத்த மாதிரி என்னுடைய சாம்ராஜ்ய விஸ்தீரணம். பொன் முட்டையிடும் வாத்து தான் போங்கள்!

'தொண்டர்களுக்காக நான் உயிர் வாழ்கிறேன். அவர்களுக்காக உயிரும் துறப்பேன்' இன்னபிற வசனம் போதும். தொண்டர்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கலாம். அங்கே – அதை முதலீடு செய்து கொண்டே இருக்கலாம். எந்தப் பயலுக்கும் தெரிய வராது. தெரிந்தாலும் கூட அனுபவஸ்தர்கள் கேட்க மாட்டார்கள். மூன் ஏர் நகிடுதத்தம் தானே?

இத்தனை கம்பசூத்திரத்திலும் இந்தப் பயலும் கூடத் தேறி விட்டான் என்றே தெரிகிறது. முகத்தில் ஜொலிக்கும் களையே சொல்கிறதே, அத்தனை ரகசியத்தையும். அழைப்பிதழைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். போகவா? போனால் மரியாதை இருக்குமா? முதல் வரிசையில் இடம் தராமல், மூன்றாம் வரிசைக்குத் தள்ளி விடுவான்களா? அவமானம் பிடுங்கித் தின்னுமே. என்ன பண்ண? சிந்தல் இல்லாத சவ பிழைப்பை விடக் கொஞ்சம் சோதித்துப் பார்க்கலாமே, மானமா? அவமானமா? என்று.

''அண்ணே... தயங்காதீங்க. கிழிச்சுப் போடுங்க அந்தக் கஸ்மாலத்தை. முப்பத்தஞ்சு வருஷமா தலைமை பக்கத்திலேயே உக்காந்தீங்க. அம்புட்டு மரியாதை. உங்க பேரு கூடப் போடாத விழாவுக்கு ஏன் போறீங்க? உங்க கௌரவம் என்னாறது...?"

கை கட்டி, வாய் பொத்தின எடுபிடிகள் துள்ளினார்கள். வண்டுக் குடைச்சல் என் மனசெல்லாம். என்ன பண்ண? இதுநாள் வரைக்கும் தூற்றிய நாக்கைப் புரட்டிப் போட்டுப் பேச வேண்டும். அந்தக் கட்சித் தலைமையே அரசியலின் விடிவெள்ளி என்று பேச, கொஞ்சம் பழக்கப்படுத்த

வேண்டும். பழக்க தோஷத்தில், தலைமையின் பெயராக, இப்போதைய எனது தலைமையையே உச்சரித்து விடாத ஜாக்கிரதை வேண்டும். செய்யலாமா? சாய்வு நாற்காலியோடு சமாதியாவதை விடவும், சறுக்கலானாலும் முயற்சி செய்யலாமே...

"நானே கூட அசந்து மறந்து கட்சி மாறி விடலாம். நீ கொள்கை வீரன். கோஷ்டி மாறாதவனாச்சே. இங்க மிச்சமிருக்கற தன்மான வீரன் நீதான்யா..."

இவ்வாறெல்லாம் நீடித்த நம்பிக்கையோடு பேசும் என் தலைமையின் கண்டனத்துக்கு ஆளாக நேரும். தாவல் தவறு என்கிற நமைச்சல் ஒரு பக்கம் குடைகிறதுதான். ஆனாலும் தலைமைக்கென்ன? அடுத்த இருபது தலைமுறைக்கும் தாண்டிச் சொத்து சேர்த்தாயிற்று. நான் வெறுமனே இரண்டு தலைமுறைக்குத்தானே சேர்த்திருக்கிறேன். காய் நகர்த்திப் பார்க்கலாமே. புதிதாய் வேறிடத்தில் வேர் விடவா? பாலைவனமாய்க் கருகுவதை விட வேர் விடுதல் தவறில்லையே. அமைச்சர் நாற்காலி ஆள் நான். சாய்வு நாற்காலி ஆள் இல்லையே...

தாவல் பற்றிப் பொது ஜனம் கேவலமாய் நினைக்குமே என்கிற கவலை கிடையாது. அவர்களுக்கு மறதி ஜாஸ்தி. அந்தக் கல்யாண குணத்தில்தானே எங்களின் வண்டி ஓடுகிறது. இல்லையென்றால் பிழைப்பு நாறி விடும். ஊழலுக்காகக் கரிபூசிக் கவிழ்க்கப்பட்டு, டெபாஸிட் இல்லாமல் வீட்டுக்கு அனுப்பப்பட்டவன் நான் என்பதையே கூட இதற்குள் மறந்து போயிருப்பார்கள். மறுபடியும் - தொகுதியை ரெண்டு சுற்று சுற்றினால் போதும். என் அரசியல் இருப்பை நிச்சயம் செய்து விடலாம்.

எழுந்து வெள்ளை வெளேரென்று ஆடையில் புகுந்து கொண்டேன். ஆட்டமாய் ஆடியது சாய்வு நாற்காலி.

"தம்.. ஐயா.. வணக்கம். வாங்க.."

"ஐயா வணக்கம்யா. என்னைத் தம்பின்னே கூப்பிடுங்கய்யா... உங்களைப் பார்க்கணும்னுதான் தொகுதிக்கே வந்திருக்கேன்..."

"தொகுதி உங்களோடது தம்பி. எங்க வீட்டுப் பிள்ளை நீங்க. ஆணையிடுங்க. தலையால முடிச்சுக் காட்டறேன்..."

பொய்யாய்ச் சிரித்துப் பூரித்து, ரெண்டு பேருமே மனசுக்குள் கத்தியை மறைத்துக் கொண்டு வார்த்தைச் சந்தனம் அப்பிக் கொண்டோம். தொண்டர் கூட்டம் உணர்ச்சி வசப்பட்டு எங்களை வாழ்த்திக் கோஷம் போட்டது.

'தலையெழுத்து - உன்னை ஐயான்னு கூப்பிடறேன்..'

'நாயி வந்துடுச்சு மோப்பம் புடிச்சுட்டு. கிழம். இன்னுமா மண்டையப் போடல்ல? உன் மூஞ்சிலயே முழிக்கக் கூடாதுன்னுதான் நெனைச்சேன்..'

'இரு இரு காலை வாரி விடறேன். உன்னைக் கவுத்துட்டு உன் நாற்காலில நான் உக்காரணும்..'

இது மாதிரியான இன்னபிற வசனங்களை, விஸ்தாரமான எங்களின் புன்னகை மறைத்தது. எனது வயதுக்குப் பொருந்தாத பவ்யமும், முதுகு வளைவுமாய்ப் பாதி மடிந்து அவனை வரவேற்றதைப் புகைப்படக்காரர்களும், கேமராக்காரர்களும் படம் பிடித்தார்கள். ரொம்ப நாளான இருட்டைக் கிழித்துக் கல்லறைக்குள் வெளிச்சம் பட்டது மாதிரி நிம்மதியாயிருந்தது. ஒளி - என்னை ஊடுருவிய போது, உயிர்நிலை கூடப் புல்லரித்தது. புகைப்பட வெளிச்சத்தில் எலும்பும் கிளுகிளுத்தது. கைத்தட்டலால், காதுக்குள் பாலும், தெளிதேனும், பாகும், பருப்புமாய்க் கலந்து பாய்ந்தது. பெருமூச்சின் நீளம் கூடக் குறைச்சலானது மாதிரி இருந்தது. ○



"கிடைச்ச வேலையை ஏன் வேண்டாம்னு சொல்ற?"

"வேலை கிடைச்சவுடனே, நம்ம கல்யாணத்தை வச்சுக்குவோம்னு என் காதலி சொல்லியிருக்காளே!"

உஷாதேவி



• 'தி பியானிஸ்ட்' - படத்தில்

விருது பெற வந்தால் சிறை!

ஆஸ்கர் விருதுக்காக இந்த ஆண்டு இறுதிச் சுற்றை எட்டியிருக்கும் படங்களில் ஒன்று "தி பியானிஸ்ட்". இந்தப் படத்துக்கு விருது கிடைத்து, அதைப் பெற படத்தின் இயக்குனர் அமெரிக்காவுக்குள் நுழைந்தால் அவர் கைது செய்யப்படுவார்! இப்படி ஒரு சூழலை ஆஸ்கர் எதிர்கொள்வது இதுவே முதல் முறை.

படத்தின் இயக்குனர் ரோமன் பொலான்ஸ்கி, பாரீஸ் நகரில் பிறந்தவர். அவரது பெற்றோர் போலந்து நாட்டு யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். யூதர்களுக்கு எதிராக பிரான்ஸில் கிளம்பிய எதிர்ப்பைத் தொடர்ந்து, போலந்துக்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது அந்தக் குடும்பத்துக்கு. பொலான்ஸ்கியின் அம்மா இரண்டாம் உலகப் போரின் போது நாஜிக்கள் உருவாக்கிய விஷ அறைகளுள் ஒன்றில் இறந்தார்.

பொலன்ஸ்கியின் முதல் படமான "நைஃப் இன் த வாட்டர்" விமர்சகர்களால் பாராட்டப்பட்டது. உலக அளவில் இவருக்குப் புகழ் சேர, 1963ல் போலந்திலிருந்து வெளியேறினார். இங்கிலாந்திலிருந்து கொண்டு "ரிபல்ஷன்" என்ற படத்தை இயக்கினார். பிறகு அமெரிக்காவுக்குச் சென்று "ரோஸ் மேரீஸ் பேபி" என்ற திரைப்படத்தை இயக்கினார்

மற்றொரு சூறாவளி 1969ல் இவர் குடும்பத்தைத் தாக்கியது. தீவிரவாதக் கும்பல் ஒன்று இவரது மனைவி ஷாரன் மற்றும் சிலரையும் கொலை செய்தது. அப்போது ஷாரன் கருவுற்றிருந்தது மேலும் சோகம். இதைத் தொடர்ந்து இவர் இயக்கிய படங்களில் சோகமும் தத்துவங்களும் அதிகமாயின.

1978ல் அமெரிக்கா அவரை நாடு கடத்தியது. சிறுமி ஒருத்தியை, பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக இவர் மீது குற்றச்சாட்டு. மீண்டும் அமெரிக்க மண்ணில் காலடி வைத்தால், கைது செய்து சிறையில் அடைப்போம் என்ற நிபந்தனையோடுதான் அந்த நாடு கடத்தல் நடைபெற்றது. பிரான்ஸுக்கு மீண்டும் திரும்பிய இவர் அங்கு "ரோமன்" என்ற தலைப்பில் தன் சுயசரிதையை எழுதினார்.

ஆஸ்கருக்குப் போட்டியிடும் அவரது படம் போலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பியானோ கலைஞரை மையமாகக் கொண்டது. இரண்டாம் உலகப் போரின் போது போலந்தின் தலைநகராக இருந்த வார்ஸா, ஜெர்மனியின் பார்வையில் பட்டது. ஹிட்லரின் படையை எதிர்க்க போலந்து வீரர்களுக்குத் துணிவில்லாமல் போனது. போதாக் குறைக்கு வறுமையில் போலந்து தவித்துக் கொண்டிருந்த காலம் அது. இந்தச் சூழலில் பியானோ கலைஞன் விடுதலையைத் தேடி ஓடுவதுதான் கதை.



• ஆட்ரியன் ப்ராடியுடன் பொலான்ஸ்கி

பியானோ கலைஞராக நடித்துள்ள ஆட்ரியன் ப்ராடியும் ஆஸ்காருக்கான சிறந்த நடிகர் பிரிவில் இறுதிச் சுற்றை எட்டியிருக்கிறார்.

- ஜி.எஸ்.எஸ்.

வெளவால் வளர்த்தேன்!



• சுபாஷிணி ராகவன்



''விட்டுப் பிரியும்போது மிகவும் துக்கமாக இருந்தது. அழுகை கூட வந்தது. ஆனாலும் வேறு வழியில்லையே.'' திருமணத்திற்குப் பின் மகளைப் பிரியும் தாயின் வாசகம் போலத் தோன்றினாலும் சுபாஷிணி ராகவன் குறிப்பிடுவது, தாம் கொஞ்ச காலம் வளர்த்த வெளவாலை!

''மாலை நான்கரை மணிக்கு எங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பிலிருந்து வாக்கிங் கிளம்பியபோது, அந்த வெளவால் கீழே கிடந்தது. வெறும் ஒரு இன்ச் நீளமே இருந்த அது, வெளவால் என்பதே எனக்கு முதலில் விளங்கவில்லை. ஏதோ ஓர் உயிரினம், கீழே கிடந்தால் காக்கை கொத்தி விடுமே என்ற பயத்தில் அதைத் தூக்கி அருகிலிருந்த கார் பார்க்கிங் இடத்தில் விட முயற்சி செய்தேன். ஆனால் அது என் விரல்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டது. விடவே இல்லை. சரி என்று என் ஃப்ளாட்டுக்குத் தூக்கிக் கொண்டு வந்தேன்.



அடிபட்டுக் கிடந்த அணில் குஞ்சு, குருவி, காக்கை போன்றவற்றை வீட்டில் சில நாட்கள் வைத்திருந்து தேற்றி வெளியே அனுப்பிய அனுபவம் ஏற்கனவே இருந்தது.

ஒருவழியாக இது வெளவாலாக இருக்கக்கூடும் என்பதை யூகிக்க முடிந்தது. ஆனால் வெளவாலை எப்படி வளர்ப்பது? எனக்குத் தெரிந்து யாரும் வெளவால் வளர்த்ததில்லை. வலைத்தளங்களை ஆராய்ந்ததில் இது "shortnosed fruit bat" என்ற வகையைச் சேர்ந்தது என்பது புரிந்தது. (பூச்சிகளைத் தின்னும் வெளவால் வகை மற்றொன்று. இவைதான் பழங்காலக் கோவில்களில் வசிப்பவை)

மிகச் சிறிய வெளவால் என்பதால், பழச் சாறுதான் கொடுக்க வேண்டும் என்றது வலைத்தளம். பப்பாளி, கொய்யா, வாழைப்பழம் போன்றவற்றின் ஜூஸைத் தயார் செய்து கொண்டேன். ஆனால் அதை எப்படிக் கொடுப்பது? மூக்கில் விட்டுவிடக் கூடாதே! அம்மா பயன்படுத்திய ஒரு பூதக் கண்ணாடியின் உதவியுடன் அதன் வாயைக் கண்டுபிடித்து, ஊசியில்லாத சிரிஞ்சின் மூலம் பழச்சாறை, கொடுத்தேன்.

இதற்கு முன் 'மொட்டைத் தலை மைனா' உள்பட பல பறவைகளை வீட்டில் வளர்த்திருந்

தாலும், வௌவால் விஷயத்தில் ஒரு வித்தியாசமான அனுபவம். பகலெல்லாம் அது தூங்கிக் கொண்டிருக்கும் என்பதால், இரவில்தான் உணவு கொடுக்க வேண்டும். மிகச் சிறிய வௌவால் என்பதால், ராத்திரி இரண்டு மூன்று முறை அலாரம் வைத்துக் கொண்டு எழுந்து உணவு கொடுத்தேன்.

வீட்டில் ஏற்கெனவே ஒன்றரை அடி சதுரக் கூண்டு ஒன்று இருந்தது. பக்கத்திலேயே ஒரு ஜீரோ வாட் பல்ப்பை எரியவிட்டு, வௌவாலை அந்தக் கூண்டுக்குள் துணிப்பந்துக்குள் வைத்தேன். இரண்டு மாதங்களுக்கு அதற்குப் பறக்கத் தெரியவில்லை. நாற்காலியில் விட்டால், அது பாட்டுக்குக் கீழே தொங்கிக் கொண்டிருக்கும். பிறகுதான் மெல்ல மெல்ல அதற்குப் பறப்பதற்கான பயிற்சியளித்தேன். வரும்போது வழுக்கையாக இருந்த அந்த வௌவால் குஞ்சு, இரண்டு மூன்று வாரங்களில் அடர்த்தியான ரோமம் கொண்டதாக ஆகிவிட்டது.

சுமார் ஐந்து மாதங்கள் என் வீட்டிலேயே வளர்ந்த அந்த வௌவாலை, மனமின்றி தியசாபிகல் சொஸைட்டியில் உள்ள ஒரு வீட்டில் சேர்ப்பித்து விட்டேன். அங்கு பெரிய அளவில் இதற்கென்றே கூண்டுகள் வைத்திருக்கிறார்கள். மெல்ல மெல்ல அது வளர்ந்து பறந்து சென்று தன் இனத்தவர்களோடு கலந்துவிடும். கீதா ஜெயகுமார், லதா, காரன் ஆகிய பெண்களின் அன்பான கவனத்தில் அது வளர்ந்து வருகிறது.

வௌவாலைப் பற்றிய இரண்டு தவறான நம்பிக்கைகளை நான் குறிப்பிட வேண்டும். அது துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்பது தவறு. அது இருந்தபோது நான் மகிழ்ச்சியாகவே இருந்தேன். மேற்படி மூடநம்பிக்கையின் காரணமாக, வௌவாலைப் பார்த்தாலே சிலர் அதைக் கொன்று விடுகிறார்கள் என்பதை அறிந்தபோது துடித்துப் போனேன். நான் வளர்த்த வௌவால் வெகு சுத்தமாகவே இருந்தது. அதைக் கையாண்ட எனக்கு எந்தவித தோல்வியாதியும் வரவில்லை.''

- குல்லூ

உல்டா கோப்பை!



படத்திலிருக்கும் உலகக் கோப்பை நிச்சயம் இந்தியாவுக்குத்தான். ஆனால் என்ன, இங்கிருப்பது ஒரிஜினல் கோப்பை இல்லை. உல்டா கோப்பை. உலகக் கோப்பையைப் போலவே, வெள்ளியில் செய்யப்பட்டது.

கிரிக்கெட் ஆடாமலேயே, யாரோ ஒருவருக்கு இந்தக் கோப்பை கிடைக்கப் போகிறது. இதன் எடை இரண்டரை கிலோ மதிப்பு இருபத்தைந்தாயிரம்.

பெங்களூரில் உள்ள மயூரி ஓட்டலில் இது வைக்கப்படுகிறது. இங்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கூப்பன்களில், அவரவர் தம் பெயர், விவரங்களை எழுதிப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

உலகக் கோப்பை இறுதிப் போட்டி நடைபெறும் தினத்தில் பெங்களூர் மயூரி ஓட்டலில், அதிர்ஷ்டக் குலுக்கல் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிக்கு, (வெள்ளி) உலகக் கோப்பை வழங்கப்படும்.

- சி.எம்



சூப்பர் சிக்ஸ் கென்யா!

யார்தான் எதிர்ப்பார்த்திருப்பார்கள்? தென்னாப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய கிரிக்கெட் அணிகள் சூப்பர் சிக்ஸ் சுற்றில் இடம் பெறாத நிலையில், கென்யா வெகு அலட்சியமாக அந்தத் தகுதியைப் பெற்று விட்டது. இத்தனைக்கும் சர்வ தேச டெஸ்ட் பந்தயங்களில் ஆட அங்கிகாரம் பெறாத நாடு இது.

இந்தச் சாதனை அளித்த தெம்பில் மேற்படி அங்கிகாரம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று கொடி பிடிக்கத் துவங்கி விட்டது கென்யா கிரிக்கெட் குழு. அவர்களது வாதம் இதுதான். 2000ல் இந்த அங்கிகாரம் பெற்ற பங்களா தேஷ் கிரிக்கெட் அணியை ஏழாவது முறையாக வென்றிருக்கிறது கென்யா அணி.

சூப்பர் சிக்ஸில் கென்யா இடம் பெற்றதற்கு ஓரளவு அதிர்ஷ்டத்தின் பங்கும் உண்டு. நியூசிலாந்து அணி நைரோபிக்கு வர மாட்டோம் என்று அடம் பிடிக்க, கென்யா அணிக்கு ஆடாமலே நான்கு பாயிண்டுகள் கிடைத்தன. ஆனால் அதற்காக கென்யா அணியை அலட்சியப் படுத்திவிட முடியாது. இலங்கை அணியை அவர்கள் தோற்கடித்த விதம் பிரமிக்க வைத்தது. தவிர இதுவரை தான் கலந்து கொண்ட 57 போட்டிகளில் இந்தியாவுக்கு எதிராகவும் ஆடி இருமுறை வெற்றி பெற்றிருக்கிறது கென்யா அணி.

ஆப்பிரிக்காவின் ஒரு கோடியில் இருந்தாலும், கென்யா கிரிக்கெட் அணியுடன் இந்தியாவுக்கு ஆழ்ந்த தொடர்பு உண்டு. கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்ற பல இந்திய வீரர்கள் கென்யாவுக்குப் பயிற்சியாளர்களாக வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். அன்ஷுமன்கெய்க்வாட், அனுமந்த் சிங், சந்திரகாந்த் பண்டிட், பல்வீந்தர்சிங் சந்து மற்றும் சந்தீப் பாட்டீல் ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்கள்.

தேசிய கிரிக்கெட் அணி என்ற ஒன்று கென்யாவில் உருப்படியாக உருவாகி ஆறு ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலகட்டத்தில் ஸ்டீவ் டிகோலோ, ஒடும்பே, ஒடியேனோ, ஒடோயோ போன்றவர்கள் புகழ் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் ஒடோயோவும் ஒடும்பேவும் திறமை மிக்க ஆல்ரவுண்டர்களாகப் பெயர் பெற்றுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் குழுவில் கென்யாவுக்கு ஆதரவாகப் பலர் உண்டு. அவர்களின் வெளிப்படையான ஆதரவை கென்யா இப்போது எதிர்பார்க்கும், சர்வதேச டெஸ்ட் பந்தய அந்தஸ்தை கென்யாவுக்கு அளிக்க, இந்திய கிரிக்கெட் குழுவும் சிபாரிசு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விரைவில் இன்னொரு நாட்டின் அணியும் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இடம் பெற முயற்சிக்கப் போகிறது. அது ஆப்கானிஸ்தான்! அந்த நாட்டின் கிரிக்கெட் கூட்டமைப்பின் தலைவரான அல்லா தாட் நூரி என்பவர், இதற்கான வாய்ப்பை, சர்வதேசக் கிரிக்கெட் குழுவிடம் கேட்டிருக்கிறார். அந்த நாட்டின் மிகப் பிரபலமான விளையாட்டாக விளங்குவது கிரிக்கெட்தானாம்!

- ஜி.எஸ்.எஸ்

பிள்ளையார் சுழி!

"என்ன சார் இது, சரியா பராமரிக்கிறதே இல்லையா?" மோட்டாரைப் பார்த்தபடியே கேட்டான் வேலு. வீட்டின் சொந்தக்காரர் ஒரு அவஸ்தைச் சிரிப்பை உதிர்த்தார்.

"இப்படித்தான் அடுத்த தெருவுல மளிகைக் கடைக்காரரர் வீடு இருக்கு. மோட்டாரைப், பிரிச்சுப் பார்க்கறேன் பேர்வழின்னு ஒருத்தன் தலைகுப்புற வைச்சிட்டுப் போயிட்டான். அப்புறம் நம்மகிட்ட வந்தாங்க. சரி பண்ணினேன். சும்மா கின்னுனு ஓடுதுல இப்ப" பெருமையாகச் சிரித்தான். பக்கத்தில் நின்ற தனது அசிஸ்டெண்ட் (?!?!) முருகனையும் மற்றும் வீட்டுக்காரரையும் ஒரு சேரப் பார்த்து.

"டேய்! இந்த ஸ்க்ரூவைக் கழட்டு!"

"முருகன், 'அதுக்கு வேற ஆளைப் பாரு' என்பது போல் நின்றான்.

"நம்ம கை சுத்தம் யாருக்கும் வராது சார்!"

மோட்டாரிலிருந்து நீண்டு நிற்கும் பைப்பின் கழுத்தைத் திருகினான் வேலு. முடியவில்லை. அதைக் காட்டிக் கொள்ள விரும்பாதவனாய், "கொஞ்சம் எண்ணெய் ஏதாவது அப்பப்ப போட்டு வைக்கணும் சார்! இல்லைனா இதைப் பேரீச்சம்பழத்துக்குக் கூட எடுத்துக்க மாட்டாங்க."

பத்து வருடத்துக்கு முன்னால் வைத்த மோட்டார் அது. நல்ல பெயர் வாங்கிய ஒரு கம்பெனி. வீடு கட்டும் போது அந்த ஏரியாவில், அதிக வீடில்லாததாலும், திருட்டு பயம் இருந்ததாலும், கிணற்றின் உள்ளேயே, அதுவும் மேற்பரப்பில் வைத்து மோட்டாரைப் பொருத்தி வைத்திருந்தனர்.

வீட்டுச் சொந்தக்காரருக்கோ, திக்திக்கென்று இருந்தது. கிணற்றுக்குள் இறங்குவோரைப் பார்த்தாலே ஒரு பயம் எல்லோருக்குமே மேலிடுவது சகஜம்தான்.

வேலு ஒரு காலை அந்தத் தட்டியிலும், இன்னொரு காலை கிணற்றுச் சுவரிலும் அழுந்தப் பதித்து உட்கார்ந்து கொண்டான்.

வீட்டின் சொந்தக்காரர்தான் நடுங்கினாரேயன்றி, முருகன், வேலுவை வித்தைக்காரனைப் பார்ப்பது போல் பார்த்தான்.

வேலு திடீரென்று மோட்டாரின் அடியில் போகும் இரண்டு டியூப்களை காலால் ஓர் எத்து எத்தினான்.



"சார்! பைப்புல தண்ணி நிக்கலை."

"ஏன்?"

"புட்வால்வு புட்டிருக்கும்!"

"இப்பத்தானே போட்டது?"

"அப்ப... கிணத்துல தண்ணி இறங்கியிருக்கும்."

எட்டிப் பார்த்த எவரும் சொல்லி விடுவார்கள். ஐம்பதடி கிணற்றில், முப்பத்தைந்து அடி தண்ணீர் இருக்குமென்று.

"ஊத்து இல்லாத கிணறு சார்."

பத்து வருஷமா ஊறின கிணறாச்சே இது. இவனுக்கு வேலை தெரியுமா தெரியாதா?

"ஒரு வழிதான் சார் இருக்கு. பேசாம புட்வால்வை இறக்கி வெச்சிடுவோம். தண்ணி இறங்கிக்கிட்டே இருக்கறதுனால, ஒரு ஆறடி இறக்கலாம்."

புட்வால்வுதான், கீழிருக்கும் தண்ணீரை உறிஞ்சி எடுத்து மேலே செலுத்துகிறது. சரி தான். ஆனால் மழை வந்தா கிணறு ரொம்பி வழியறா மாதிரி தண்ணி இருந்திருக்கே. இப்ப எதுக்கு புட்வால்வை இறக்கிக்கிட்டு...?

"சரி! ஒரு வாரமாவே தண்ணியில்லாம போராடுறோம். எப்படியோ தண்ணி வந்தா சரி."

"இல்ல காயில் போயிருக்குமோ, முருகா."

புட்வால்வை இறக்கி வைப்பதில் அப்படி ஒண்ணும் காசு பாக்க முடியாது என நினைத்தானோ என்னவோ வேலு.

முருகன் எதுவும் பேசவில்லை.

மேலேறி வெளியில் வந்தான் வேலு.

"சரி சார்! புட்வால்வை இறக்கி வைக்க, டியூப்பை அறுக்கணும், அப்புறம், ஒரு ஆறடி டியூப் வாங்கணும். அதைப் பொருத்த கப்ளிங் வாங்கணும். அப்புறம், பேஸ்ட், வேலைக்கு இரண்டு ஆளு வேணும்."

மையமாகத் தலையாட்டினார்.

தண்ணி வந்தா சரி!

"ஒரு பேப்பரும் பேனாவும் கொடுங்க சார்."

வீட்டுக்காரம்மாவைக் கேட்டுவிட்டு, மாற்ற ஒப்புதல் வாங்கிக் கொண்டு, பேப்பரும், பேனாவும் தேடினார். வழக்கம் போலவே தட்டுப் படவில்லை.

"சார்! இப்பவே மணி பன்னிரண்டு. எல்லோரும் பூட்டிட்டுச் சாப்பிடப் போயிடுவாங்க. சீக்கிரம் தார்" - வேலு.

பேப்பருக்கு இருந்த கருணை கூட பேனாவுக்கு இல்லை. ஒரு துண்டுச் சீட்டு கிடைத்தது.

"பரவாயில்லை சார்! என்கிட்ட பென்சில் இருக்கு."

பென்சிலால் துண்டுச் சீட்டின் மேலே பிள்ளையார் சுழி போட்டு விட்டு லிஸ்ட் போட்டான் வேலு.

பட்டியலில், தேவையான பொருட்களும் அதன் எதிரே குத்துமதிப்பான விலையையும் எழுதி, "எண்ணூறு ரூபா ஆகும் சார்" என்றான்.

"அவ்வளவு ஆகுமா?"

"பைப் வாங்கணும், பேஸ்ட், கப்ளிங், வேலை ஆளுங்களுக்குக் கூலி. சரி சார்! கூலி வேணா குறைச்சுக்கறோம். அப்படியும் அறுநூறு ரூபா ஆகும்."

ஒரே கேள்விக்கான பதிலில் இருநூறு ரூபா குறைந்த சந்தோஷம் ஏற்பட்டது.



மதியம் மணி மூன்று. வேலு, முருகன், மற்றும் இரண்டு பேர் வந்தார்கள்.

"டேய்! பார்த்து இறங்கு, வேலை கத்துக்கும் போது அவசரப்படக்கூடாது!" - வேலு.

வேலை கத்துக்கும்போதா?

புதிதாய் வந்ததில் ஒருவன், தன் இடுப்பில் கயிற்றைக் கட்டிக் கொண்டு அதன் மறு முனையைக் கிணற்றுச் சுவரில் இறுக்கக் கட்டிவிட்டு உள்ளே இறங்கினான்.

கிணற்றில் இறங்கியவன் பைப்பை அறுத்துக் கொண்டு மேலேறினான்.

புதிதாய் வாங்கி வந்த கப்ளிங்கில், பாட்டிலின் அடிவாரத்தில் ஒட்டியிருந்த பேஸ்ட்டை சுரண்டித் தடவி, ஒருபுறத்தில் அறுத்து எடுக்கப்பட்ட பைப்பையும், மறுபுறத்தில் புதிதாய் வாங்கி வந்த பைப்பையும், பொருத்தினான். இப்பொழுது நீளம் அதிகரித்தது.

கப்ளிங்தான் இரு பைப்புகளை இணைக்க உதவும் சாதனம். ஆனால் கப்ளிங்கைப் பார்த்தால் புதிதாய்த் தெரியவில்லை. இருந்தும் அதுபற்றி எதுவும் விசாரிக்கப்படவில்லை.

மீண்டும் உள்ளே இறங்கி, இன்னொரு செட் கப்ளிங்கை வைத்து, பாதியில் அறுபட்டு நின்று கொண்டிருந்த பைப்போடு இதைச் சேர்த்தார்கள்.

ஆச்சு! ஆறடி இறக்கியாச்சு பைப்பை.

"சார்! ஒரு பக்கெட் தண்ணி கொண்டாங்க சார்."

காலையில், கார்ப்பரேஷன் பைப்பிலிருந்து, நடக்க முடியாது நடந்து, கொண்டு வந்த இரண்டு குடத்தைக் கொடுத்தார்.

மெள்ள, ஒரு குவளையின் மூலம் ரொப்பினார்கள் பைப்பை. பைப்பு ரொம்பி விட வேண்டியதுதான் பாக்கி. சாதாரணமாக, ஒரு பக்கெட் தண்ணீர் வாங்கும். இப்பொழுது பைப்பின் நீளத்தை அதிகரித்திருப்பதால், கொஞ்சம் எக்ஸ்ட்ரா.

பைப், நிரம்பும் சமயத்தில்தான் வேலு அதைக் கவனித்தான், முனையில் வந்த தண்ணீர், காற்று கொப்பளித்துத் துப்புவது போல் பீச்சி குதித்தது. இதான் பிரச்னையா... மனத்துக்குள் சிரித்துக் கொண்டான்.

"இப்ப! போடுங்க சார்! வேலு கை வெச்சா அது மசியாமப் போகுமா?" மோட்டாரைப் போட்டவுடன் தண்ணீர் பீச்சி அடித்தது. ஒரு ஆனந்தம் வீட்டுக்காரரின் மனமெங்கும் பரவியது.

"எவ்வளவு சொல்லுங்க?"

"என்ன சார் ஒரு அறுநூறு ரூபாதான்."

"பில்லு...?"

"இருங்க சார்!" சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவினான் வேலு.

கொஞ்சம் அசந்தால் ஏமாற்றி விடுவார்கள் போலிருக்கே.

"இந்தாங்க சார் பில்லு" பட்டை அடிக்கும் பேனா போல் இருக்கிறது. பளிச்சென இருந்தது. அப்படி இப்படி மொத்தம் அறுநூறு ரூபாயைக் காட்டியது. "ஒரு அம்பது ரூபா சேர்த்து கொடுங்க சார்!"

எண்ணூறு ரூபாய் வேலை. அறுநூத்தைம்பதுதானே, பரவாயில்லை.

தண்ணீர் நிரம்பி, மாடியிலிருந்த தண்ணீர்த் தொட்டி வழிய மனமும் குதூகலித்தது.

இரண்டு நாள் கழித்து பின், மீண்டும் மோட்டாரைப் போட்டார். 'கிர்ர்ர்ரிங்' என்ற தகாத சப்தத்தை எழுப்பி, ஆட்சேபக் குரல் எழுப்பியது மோட்டார். விளங்கிவிட்டது. மோட்டார் தண்ணீர் எடுக்க முடியாது திணறியது.

ஆடிப் போனார் வீட்டுக்காரர்.


நல்லவேளையாக ஒரு வாரத்திற்கு முன்பே மோட்டார் ரிப்பேருக்காகச் சொல்லி வைத்திருந்த ரமேஷ் வந்து சேர்ந்தான்.

"நான் ஊருல இல்ல... அதான், இப்பத்தான் வந்தேன். கடையில சொல்லியிருந்திங்களாம். என்ன பிரச்னை சார் மோட்டார்ல?"

"என்னய்யா டிரைவர் நீ...! பஸ்ஸை மரத்துலே மோதிட்டியே...! முன் அனுபவமே கிடையாதா?"

"உண்டு சார்! ஏற்கெனவே மூணு தடவை மரத்துலே மோதியிருக்கேன்..."

— தஞ்சை தாமு



உன் ஞாபகத்தை...





- பயிர்களைத் துவைக்கும்
  கொக்குகளை விரட்ட
  அப்பா நட்டுவைத்த
  வயற்காட்டு பொம்மை.

- புழுங்கலில்
  காகத்தை விரட்ட
  மிளகாயை நட்டு வைத்து
  காவல் காக்கும் அம்மா.

- எதனை கொண்டு
  விரட்டியடிக்க
  இதயம் கொத்தி
  ரணமேற்படுத்தும்
  உன் ஞாபகத்தை.

— குவளை மு. வீரமணி

"உள்ள வாங்க! நீங்க இல்லைன்னு வேறே பிளம்பரைப் பார்க்கச் சொன்னேன். பைப்பையெல்லாம் வெட்டிக் கீழே இறக்கி வெச்சு செஞ்சிட்டுப் போனாங்க. பயங்கரச் செலவு வெச்சிடுச்சு. ஆனா மறுபடியும்..."

மோட்டாரைப் பார்த்த ரமேஷ், "யார் சார் உங்களை பைப்பையெல்லாம் இறக்கச் சொன்னது? உங்க மோட்டார் பழைய மாடல். அதனால் ஏர் லாக்கை எடுத்து விட வழியில்ல, அவ்வளவுதான். காத்து உள்ளே புகுந்து அடைச்சிருக்கும். அதான் பிரச்னை. நான் ஒரு நட்டு போட்டுக் கொடுத்திடறேன். அது காத்து உள்ளே போகாம தடுத்திடும். அப்படியே போனாலும், அதைத் திறந்து தண்ணி ஊத்தினா ஏர்லாக் ரிலீஸாயிடும்."

அவன் தொழில் திறமையைப் பயன்படுத்தி நட்டைப் பொருத்தினான்.

அந்த நட்டைத் திறந்து பைப்பிற்குள் ஒரு குவளைத் தண்ணீர் ஊற்றினான். காற்று, நீரை கொப்பளித்துத் துப்பிய பிறகு, தண்ணீர் ஒரு சிறு கோடாய்ப் பீச்சி அடித்தது.

"இப்படி வந்துட்டா ஏர்லாக் ரிலீஸாயிடுச்சுன்னு அர்த்தம். அதை இந்த நட்டு போட்டு மூடிட்டா போதும். எப்ப வேணும்னாலும் இதைத் திறக்கிற மாதிரிதான் வைச்சிருக்கேன்."

மோட்டாரைப் போட, தண்ணீர் வந்தது. அணைத்து, அணைத்து போட்டுப் பார்த்தார்.

"எவ்வளவு?"

"ஒரு முப்பது ரூபா கொடுங்க சார்!" ரமேஷ் வாங்கிக் கொண்டு போனான்.

முப்பது ரூபாயில் முடிய வேண்டியது, அறுநூறு ரூபாய்க்கு மேல் செலவழித்து விட்டோமோ.

வேலுவின் நோக்கம் ஏமாற்றுவதாக இருந்திருந்தால் பில்லெல்லாம் கொடுத்திருக்க மாட்டானே. பாவம் அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். வேலுவுக்காகப் பரிதாபப்பட்டார்.

உள்ளே வந்தவர், தனது சட்டையைக் கழற்றி நாற்காலியில் போட்டார். அந்தச் சட்டைப் பாக்கெட்டில் இருந்த சில நாணயங்கள், ஙிளிங்கென்ற சப்தத்துடன் விழுந்தன. ஒரு பேப்பரும் விழுந்தது.

அது வேலு கொடுத்த அறுநூறு ரூபாய் பில். இப்பொழுதுதான் அதை உற்றுப் பார்த்தார்.

அந்தப் பில்லின் உச்சியில், வேலு, முதலில் லிஸ்ட் போடும் போது பென்சிலால் போட்ட பிள்ளையார்ச் சுழி பல் இளித்தது. ○



சிவகாமியின் சபதம்

நாற்பத்து ஏழாம் அத்தியாயம்

வீதி வலம்

ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பரத கண்டத்தில் பிரசித்தி பெற்றிருந்த மூன்று சாம்ராஜ்யத் தலைநகரங்களில் வாதாபி ஒன்றாகும். கன்யாகுப்ஜத்தையும், காஞ்சியையும் போலவே வாதாபி நகரத்தின் புகழும் அந்த நாட்களில் கடல் கடந்து வெகு தூரம் சென்றிருந்தது.

ஒவ்வொரு தடவை திக்விஜயம் செய்து திரும்பும் போதும் புலிகேசியின் படைவீரர்கள் வெற்றி கொண்ட தேசங்களிலிருந்து ஏராளமான செல்வங்களைக் கொண்டு வந்து வாதாபியில் சேர்த்து வந்தார்கள். இதனால் வாதாபி நகரம் வளங்கொழிக்கும் நகரமாய் அந்தக் காலத்தில் விளங்கிற்று. அந்நகரில் வர்த்தகம் சிறந்தோங்கியிருந்தது. தூர தூர தேசங்களிலிருந்தெல்லாம் அந் நகருக்கு இரத்தின வியாபாரிகள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

பிரசித்தி பெற்ற ஜைன ஆலயங்களும் பௌத்த மடங்களும் வாதாபியில் இருந்தபடியால், பற்பல நாடுகளிலிருந்தும் யாத்திரிகர்கள் அந்நகருக்கு வருவதுண்டு.

இதனாலெல்லாம் வாதாபி நகரம் எப்போதும் கலகலப்பாகவே இருந்து வந்தது. அதிலும் சக்கரவர்த்தி தலைநகரில் இருக்கும்போது கேட்க வேண்டியதில்லை.

சக்கரவர்த்தியைப் பேட்டி காண்பதற்காகச் சிற்றரசர்கள் காணிக்கைகளுடன் வருவார்கள். சீனம், பாரசீகம் முதலிய தூர தூர தேசங்களிலிருந்து அரசாங்கத் தூதர்கள் வருவார்கள்.

மாடமாளிகைகள், கூட கோபுரங்களுடன் விளங்கிய வாதாபியின் வீதிகள் எப்போதுமே திருவிழாக் காலத்தைப் போல் ஜனக்கூட்டம் நிறைந்து விளங்கும். வண்டிகள் - வாகனங்களின் சப்தம் ஓயாமல் கேட்ட வண்ணமிருக்கும்.

அமரர் கல்கி

வாதாபி நகரில் வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சிவகாமி பல்லக்கிலே போய்க் கொண்டிருந்தபோது அவளுடைய உள்ளம் அடிக்கடி காஞ்சியையும் வாதாபியையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்தது. பழமையான காலத்திலிருந்து செல்வமும் பண்பாடும் சேர்ந்து வளர்ந்து வந்த நகரத்துக்கும் திடீரென்று செல்வம் படைத்துச் செழிப்படைந்த புதுப் பட்டணத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் அவளுக்கு நன்கு புலனாகி வந்தன.

காஞ்சியில் செல்வத்திற் சிறந்த சீமான்களும் சீமாட்டிகளும் ஆடை ஆபரணங்கள் பூணுவதில் அடக்கம் காட்டுவார்கள். அவர்களுடைய அலங்காரங்களில் கலை உணர்ச்சியே பிரதானமாயிருக்கும்.

இந்த நகரிலோ எங்கு பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் படாடோபமும் பகட்டும் தாண்டவமாடின.

காஞ்சி வீதிகளில் தெரிந்தவர்கள் சந்தித்தால் ஒருவருக்கொருவர் அன்புடனும் மரியாதையுடனும் முகமன் கூறிக் கொண்டார்கள். வாதாபியின் தெருக்களிலோ, தெரிந்தவர்கள் சந்திக்கும்போது இடி முழக்க ஒலியில் சிரித்து ஆர்ப்பரித்தார்கள்.

காஞ்சியில் எஜமானர்கள் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடும்போது கூட அன்புடனும், ஆதரவுடனும் பேசினார்கள். வாதாபியில் எஜமானர்கள் வேலைக்காரர்களிடம் பேசும்போது கடுமையான மொழிகளையும் துர்வசனங்களையும் கையாண்டார்கள்.

இவற்றையெல்லாந் தவிரக் காஞ்சிக்கும் வாதாபிக்கும் உள்ள இன்னும் ஒரு வித்தியாசத்தையும் சிவகாமி கவனித்தாள்.

காஞ்சி வீதிகளில் புத்த பிக்ஷுக்கள், திகம்பர சமணர்கள், வைதிக சந்நியாசிகள், ஆண்டிகள், கபாலிகர்கள், வெறும் பிச்சைக்காரர்கள் ஆகியவர்கள் மொய்த்துக் கொண்டு வீதியில் போவோர் வருவோரின் பிராணனை வாங்குவது வழக்கம். தர்மபுத்தியுள்ள தனவான்கள் அதிகம் உள்ள இடத்திலே யாசகர் கூட்டமும் அதிகமாகப் பெருகி விடும் போலும்!

வாதாபியின் வீதிகளில் அம் மாதிரி பிக்ஷுக்களும் யாசகர்களும் அதிகம் காணப்படவில்லை. தர்மம் கொடுப்பவர்கள் இல்லாதபடியால் யாசகர்களும் இல்லை போலும்! - இம்மாதிரியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டும், வாதாபியின் செல்வ வளத்தை வியந்து கொண்டும், சிவிகையில் சென்ற சிவகாமி, ஒரு நாற்சந்தி மூலையில் அதுவரையில் காணாத காட்சி ஒன்றைக் கண்டாள்.

ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்கிய ஒரு கூட்டம் அங்கே நின்றது. அவர்கள் ஒவ்வொருவருடைய கரங்களும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அவ்விதம் பந்தமுற்ற கைகளுடன் தலைகுனிந்து நின்ற கும்பலைச் சுற்றி யமகிங்கரர்களைப் போன்ற முரடர்கள் சிலர் கையில் பெரிய பெரிய சாட்டைகளுடன் நின்றார்கள்.

இந்தக் காட்சியைப் பார்க்கும்போதே சிவகாமியின் உள்ளம் பதைத்தது. கைகள் கட்டுப்பட்டு நின்ற ஸ்திரீ புருஷர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தோன்றினபடியால் அவளுடைய மன வேதனை பன்மடங்காயிற்று.

பல்லக்கை நிறுத்தி அவர்கள் அருகில் சென்று விசாரிக்கலாமா என்று சிவகாமி ஒருகணம் நினைத்தாள். ஆனால், அதற்கு வேண்டிய மனோதைரியம் அவளுக்கு ஏற்படவில்லை. சிவிகை மேலே சென்றது.

நாற்சந்தி முனையிலிருந்து சிவிகை கொஞ்ச தூரம் போன பிறகு சிவகாமி தடுக்க முடியாத ஆவலினால் திரும்பிப் பார்த்தாள். அந்தக் கூட்டத்திலிருந்தவர்களில் சிலர் கட்டப்பட்ட கைகளினால் தன்னுடைய சிவிகையைச் சுட்டிக் காட்டுவது போலவும், கண்ணீர் ததும்பிய கண்களால் தான் போகும் திசையை உற்றுப் பார்ப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. உடனே சிவகாமி தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். பல்லக்குச் சுமந்தவர்களை நேரே வீட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டாள்.



வீடு போய்ச் சேர்ந்ததும் சிவகாமி தான் கண்ட காட்சியைத் தாதியிடம் சொல்லி, அதைப் பற்றி ஏதேனும் தெரியுமா என்று கேட்டாள். தாதி தனக்கு தெரியாது என்று சொல்லவே, போய் விசாரித்துக் கொண்டு வரும்படி பணித்தாள்.

அவ்விதமே அந்தத் தாதி வெளியே போய் விசாரித்துக் கொண்டு வந்தாள். அவள் கூறிய விவரம் சிவகாமிக்குச் சொல்ல முடியாத பயங்கரத்தையும் மன வேதனையையும் அளித்தது.

தாதி விசாரித்து வந்து கூறிய விவரம் இதுதான்.

பல்லவ நாட்டிலிருந்து புலிகேசிச் சக்கரவர்த்தி அநேக ஸ்திரீ, புருஷர்களைச் சிறைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தார். அவர்களில் சிலர் சிறையிலிருந்து தப்பிப் போக முயன்றார்கள். சிலர் அடிமைத் தொண்டு செய்ய மறுத்தார்கள். சிலர் உணவு உட்கொள்ளாமல் பிடிவாதம் பிடித்தார்கள்; இத்தகைய குற்றங்களைச் செய்த கலகக்காரர்களை வாதாபி நகரின் நாற்சந்திகளில் நிறுத்திச் சாட்டையினால் அடிக்கும்படியாகப் புலிகேசிச் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். இந்தச் சாட்டையடி உற்சவம் இன்றைக்குத்தான் ஆரம்பமாகியிருக்கிறது. இன்னும் இரண்டு மாதம் வரையில் நடக்கும். தினம் சாயங்கால வேளையில் வீதிகளில் நடக்கும் வாதாபி நகரவாசிகள் அந்த வேடிக்கையைப் பார்த்துக் களிப்பார்கள்.

சிவகாமி அன்றிரவு ஒரு கணமும் கண்ணுறங்கவில்லை. வேதனையும் துன்பமும் நிறைந்த அவளுடைய வாழ்க்கையில் இதுவரை என்றும் அனுபவித்தறியாத வேதனையை அவள் அனுபவித்தாள். சுளீர் சுளீர் என்று அவளுடைய உடம்பில் சாட்டையடி விழுவது போன்ற உணர்ச்சி அவளுக்கு அடிக்கடி உண்டாயிற்று.

பொன்முகலியாற்றங்கரையில் அவள் புலிகேசியை வேண்டித் தன்னுடன் சிறைப்பட்டிருந்த மாதர்களை விடுதலை செய்தது அவளுக்கு நினைவு வந்தது. அன்று விடுதலையானவர்கள் சளுக்கர் சைனியத்தினால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களில் ஒரு சிலர்தான் போலும். இன்னும் எத்தனையோ பேரை முன்னால் சென்ற பெருஞ் சைனியம் சிறைப் பிடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும்.

இன்று பகலில் சக்கரவர்த்தி வந்து தன்னுடன் பேசியதன் கருத்தும், தனக்கு வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்க அநுமதியளித்ததன் கருத்தும் இப்போது சிவகாமிக்குப் புதிய பொருளில் விளங்க ஆரம்பித்தன. சிவகாமியைத் தன்னுடைய காலிலே விழுந்து கெஞ்சும்படி செய்வதற்காக இம்மாதிரியெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறான் அந்தக் கிராதகன். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும் சரி; இனித்தான் புலிகேசியின் காலில் விழுந்து கெஞ்சப் போவதில்லை. அவனுடைய சபையில் வந்து நடனமாடவும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. ஒருநாளும் முடியாது! இப்படியா வஞ்சம் தீர்க்க நினைத்திருக்கிறான். அந்தப் பாவி!

"எதற்காக வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்?" என்று எண்ணி எண்ணிச் சிவகாமி தவித்தாள். இரவெல்லாம் தூக்கமின்றித் துடித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. சூரியோதயம் ஆயிற்று. வானவெளியில் சூரியன் மேலே வர வர, சிவகாமியின் இதயத் துடிப்பு அதிகமாயிற்று. சூரியன் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்யச் செய்ய அவளுடைய உள்ளமும் உடம்பும் பதறத் தொடங்கின.

இத்தனை நேரம் அந்தப் பல்லவ நாட்டு ஸ்திரீகளும் புருஷர்களும் நாற்சந்தியில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருப்பார்கள்! அவர்களுடைய கைகள் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். இத்தனை நேரம் யமகிங்கரர்கள் போன்ற காவலர்கள் கையில் பெரிய சாட்டைகளுடன் வந்து நிற்பார்கள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் சாட்டையினால் அடிக்கத் தொடங்கி விடுவார்கள்.

சிவகாமி முதல் நாள் இரவு கொண்டிருந்த மன உறுதியெல்லாம் பறந்து





போயிற்று. பரபரப்புடன் பல்லக்குக் கொண்டு வரும்படி வாசற் காவலர்களிடம் கட்டளையிட்டாள். பல்லக்கு வந்ததும் அதில் விரைந்து ஏறிக்கொண்டு நேற்றுப் பார்த்த நாற்சந்தி முனைக்குப் போகும்படி சொன்னாள்.

நாற்சந்தியின் சமீபத்தில் இன்று சிவகாமியின் சிவிகை போய்ச் சேர்ந்த போது அங்கே கரங்கள் கட்டப்பட்டு நின்றவர்களிடம் நேற்றுக் காணாத கிளர்ச்சியை இன்று கண்டாள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவர்களில் பலர் சிவகாமியை நோக்கி, "அம்மா! தாயே! எங்களைக் காப்பாற்று!" என்று கூச்சலிட்டார்கள்.

எதிர்பாராத இந்த அபயக் கூக்குரலினால் சிவகாமியின் உள்ளம் பெருங் குழப்பமடைந்தது. 'ஐயோ! இவர்களைக் காப்பாற்றும் சக்தி உண்மையில் நம்மிடம் இருக்கலாகாதா?' என்ற ஏக்கம் ஒரு பக்கம் உண்டாயிற்று. பல்லக்கைத் தரையில் இறக்கச் சொல்லித் தானும் இறங்கிக் கூட்டத்தை அணுகினாள்.

மீண்டும், "அம்மா! தாயே! எங்களைக் காப்பாற்று!" என்ற கூக்குரல்கள் அக் கூட்டத்திலிருந்து எழுந்தன.

சிவகாமி அவர்கள் அருகில் இன்னும் நெருங்கிச் சென்றாள். அவர்களில் சிலருடைய உடம்பில் முன்னமே சாட்டையடி பட்ட காயங்களைக் கண்டாள். அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருப்பதையும் தரையில் பல இடங்களில் இரத்தம் சொட்டிக் கரையாகியிருப்பதையும் பார்த்தாள்.

சிவகாமியின் தலை சுற்றியது; வயிறு குமட்டியது; மயக்கம் வந்தது. அதையெல்லாம் சமாளித்துக் கொண்டு ஒருவாறு சித்தத் தெளிவை நிலைநாட்டிக் கொண்டாள்.

கூட்டத்தில் அவளுக்குச் சமீபத்தில் நின்ற ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா! உங்களைக் காப்பாற்றும்படி என்னை வேண்டிக் கொள்கிறீர்களே, அது ஏன்? உங்களைப் போல் நானும் ஓர் அபலைப் பெண்தானே! சளுக்கரால் சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்டவள் தானே? உங்களைக் காப்பாற்றும் சக்தி எனக்கு ஏது?" என்றாள்.

"எங்களைக் காப்பாற்றும் சக்தி உனக்கு உண்டு, தாயே! அதோ அந்த ராக்ஷதனைக் கேள்; அவன்தான் அவ்விதம் சொன்னான்" என்றாள் அந்த ஸ்திரீ.

அவள் சுட்டிக்காட்டிய ராக்ஷத வடிவங்கொண்ட வீரர் தலைவனைச் சிவகாமி அணுகினாள். வாதாபிவாசிகள் பேசிய கலப்புப் பாஷையில், "ஐயா! இவர்களை ஏன் இப்படிச் சாட்டையால் அடித்துச் சித்திரவதை செய்கிறீர்கள்? வேண்டாம்! இந்தப் படுபாதகச் செயலை நிறுத்துங்கள்!" என்றாள்.

அந்த வீரர் தலைவன் கலகலவென்று சிரித்தான். என்னவோ யோசிப்பவன் போல் சற்று இருந்துவிட்டுப் பிறகு, "நாங்கள் என்ன செய்வோம், தாயே! சக்கரவர்த்தியின் ஆக்ஞை!" என்றான்.

"அப்படியானால் கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள். நான் உங்கள் சக்கரவர்த்தியிடம் சென்று வேண்டிக் கொண்டு பார்க்கிறேன். அதுவரையில்..." என்று சிவகாமி சொல்வதற்குள், அவ்வீரன் "வேண்டாம், அம்மா! சக்கரவர்த்தியிடம் நீ போகவே வேண்டாம். இவர்களைச் சாட்டையால் அடிப்பதை நிறுத்தும் அதிகாரம் உன்னிடமே இருக்கிறது. நீ சொன்னால் நிறுத்தி விடுகிறோம். ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை உண்டு!" என்றான்.

"அந்த வீரன் முதலில் கூறிய வார்த்தைகளை வியப்போடும் உவகையோடும் கேட்ட சிவகாமி, 'நிபந்தனை'' என்றதும் திடுக்கிட்டாள். இதில் ஏதோ வஞ்சம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், "என்ன நிபந்தனை?" என்றாள்.

"நீ இந்த இடத்தில், எங்கள் எல்லாருடைய முன்னிலையிலும் நடனம் ஆட வேண்டும். நீ ஆடும் வரையில் நாங்கள் இவர்களை அடிக்காமல் இருக்கிறோம். சூரியன் அஸ்தமிக்கும் வரையில் நீ ஆடிக் கொண்டிருந்தால், நாங்களும் பார்த்துக் கொண்டேயிருப்போம்.





அருள்வாக்கு!

எல்லா ஸ்வாமிக்கும் தநுஸ் உண்டு. அந்த தநுஸுக்கு என்று ஒரு தனிப் பெயரும் உண்டு. பரமசிவன் கையில் வைத்திருக்கிற தநுஸுக்குப் 'பிநாகம்' என்று பெயர். அதனால் அவருக்கே 'பிநாகபாணி' என்று ஒரு பேர்.

மஹாவிஷ்ணுவுக்குச் 'சாரங்கபாணி' என்று ஒரு பேர் சொல்கிறார்கள். 'சார்ங்கம்' என்பது மஹாவிஷ்ணுவின் கையில் இருக்கப்பட்ட வில். விஷ்ணு சஹஸ்ரநாம கடைசி ஸ்லோகத்திலும் சார்ங்கத்தைச் சேர்த்து ஐந்து ஆயுதங்களை சொல்லியிருக்கிறது. 'தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்' நன்றாக வர்ஷிக்கட்டுமென்று ஆண்டாள் திருப்பாவையில் பாடியிருக்கிறாள்.

ஸாக்ஷாத் பராசக்தியும் ராஜராஜேச்வரியாக இருக்கும்போது இக்ஷுதநுஸ் என்பதாகக் கரும்பு வில் வைத்துக் கொண்டிருக்கிறாள். மன்மதனுக்கும் இதுவேதான் ஆயுதம்.

தநுஸுக்கு இப்படி விசேஷமிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலே, இத்தனை தெய்வங்களாயும் ஆயிருக்கிற நிர்க்குணப் பிரம்ம வஸ்துவை அடைவதற்கும் உபநிஷத்திலேயே தநுர் வித்தை அப்யாஸத்தைத்தான் உபமானமாய்ச் சொல்லியிருக்கிறது. சிஷ்யனைப் பார்த்து குரு, 'ஸௌம்யா! உபநிஷத்திலேயிருக்கிற மிகப் பெரிய அஸ்திரமான, மஹாஸ்திரமான வில்லை எடுத்துக் கொண்டு, அதிலே உபாஸனையாலே நன்றாகச் சாணை தீட்டி, கூராயிருக்கிற அம்பைப் பூட்டி, அக்ஷரமான குறியை நோக்கி, அதுவாகவே ஆகிவிடும் பாவனையோடு விடு' என்பதாகச் சொல்லியிருக்கிறது.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

சூரியன் அஸ்தமித்ததும் நீ வீட்டுக்குத் திரும்பலாம். நாங்கள் இவர்களைச் சிறையிலே கொண்டு போய்ச் சேர்ப்போம். நாளைக்கும் இவர்கள் அடிபடக் கூடாது என்று நீ கருதினால் நாளைக்கும் இம் மாதிரியே நீ இவ்விடம் வந்து நடனம் ஆடலாம்!" என்றான் அந்தக் கிராதகன்.

சிவகாமியின் உள்ளத்திலிருந்து எரிமலை, தீக்குழம்பையும் கரும்புகையையும் கக்கத் தொடங்கியது.

ஆஹா! இதுவா அந்தப் பாதகனுடைய எண்ணம்? இப்படியா என் மீது பழி வாங்கப் பார்க்கிறான்? இப்படியா என் அற்புதக் கலையை இழிவு படுத்த நினைக்கிறான்? புத்த பிக்ஷு வேஷத்தில் வந்து என் கலையைக் கண்டு மெய்ம் மறந்து பரவசமடைந்ததாக நடித்ததெல்லாம் இதற்காகத்தானா?

ஆனால் அந்த வஞ்சக நெஞ்சனுடைய உத்தேசம் ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும், நான் வாதாபியின் நாற்சந்தியில் நின்று நடனம் ஆடப் போவதில்லை. ஒரு நாளுமில்லை.

முகத்தில் குரோதம் பொங்க, கண்களில் தீப்பொறி பறக்க நின்ற இடத்திலே ஸ்தம்பமாய் நின்று யோசித்துக் கொண்டிருந்த சிவகாமியைப் பார்த்து மேற்படி வீரர் தலைவன், "என்ன முடிவு சொல்கிறாய், தாயே! நடனம் ஆடப் போகிறாயா? அல்லது இவர்களைத் தங்கள் காரியத்தைப் பார்க்கச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வி சிவகாமியின் செவிகளில் பழுக்கக் காய்ந்த வேல் நுழைவது போல் நுழைந்தது.

திடீரென்று பிரக்ஞை பெற்றவள் போல் அவள் துள்ளி நிமிர்ந்து நின்று அவ் வீரனைப் பார்த்தாள்.

"ஆஹா! இந்த நாற்சந்தியில் நின்று என்னை நடனம் ஆடவா சொல்கிறாய்? மாட்டேன்; ஒரு நாளும் மாட்டேன்!" என்றாள்.

அவ்வீரர் தலைவன் முகத்திலே புன்னகையுடன், "சரி, உங்கள் வேலையை நீங்கள் நடத்துங்கள்!" என்று கையில் சாட்டையுடன் நின்றவர்களைப் பார்த்துக் கட்டளையிட்டான்.

(தொடரும்)

பர்தாவுக்குள் பட்டாம்பூச்சி!

திரையரங்குகள் திருமணக் கூடங்களாக மாறி வருவது போல, படப்பிடிப்பு வளாகங் களும் பள்ளிக் கூடங்களாக மாறிவிட்டதோ என்ற சந்தேகம்! பிரசாத் படப்பிடிப்பு வளா கம் முழுக்க, பாவாடை தாவணியில் ஆயிரம் கல்லூரி மாணவிகள்! 'ஜெயம்' படத்தின் படப்பிடிப்பு. அறுபதடி உயரத்திற்கு அப்பா லும் சுழன்று சுழன்றுப் படம் பிடிக்கும் அகேலா கிரேனின் கேமராவோடு, கையைப் பிசைந்தபடி அமர்ந்திருந்தார் படத்தின் இயக்குனர் எம்.ராஜா.

யாருக்காக இந்தக் காத்திருப்பு?

"இன்னும் ஹீரோயின் வந்து சேர லீங்க" கூட்டத்திலிருந்து யாரோ சொல் லிக் கொண்டிருக்கும்போதே, நுழைந்த சாம்பல் நிற ஹூண்டாய் அக்சண்ட் காரிலிருந்து இறங்கிய உருவம், கறுப்பு நிற பர்தா அணிந்திருந்தது. கூட்டத்தில் இயக்குன ரைத் தேடிச் சென்று, முகத்திரையை விலக்கி "சாரி சார் ஏர்போர்ட்லேர்ந்து வர்றதுக் குள்ளே போதும் போதும்ன்னு ஆயிடுச்சு. பத்து நிமிஷத்தில் ரெடியாயிடுறேன்" என்று கெஞ்சலாய் ஆங்கிலத்தில் சொல்லி விட்டு நம் பக்கம் திரும்ப, இருண்ட மழையிரவில் வெட்டும் அழகிய மின்னலைப்போல, கறுப்பு பர்தாவில் பளிச்சென்ற முகத்தோடு சதா! ஜெயம் படத்தின் கதாநாயகி. அட, பர்தாவுக்குள் பட்டாம்பூச்சி.

கடவுளே! பர்தாவை நடிகைகள் பயன் படுத்தக் கூடாது என்று அடிப்படைவாதிகள் மிரட்டிக் கொண்டிருக்கும்போது, கூலாக பர்தாவில் வந்து இறங்க, இந்த அறிமுக நடிகைக்கு எத்தனை துணிச்சல்? படப்பிடிப்பு இடைவேளைக்காகக் காத் திருந்து, சதாவை நெருங்கி பர்தா விவகாரம் பற்றிப் பயமுறுத்தினோம்.

"நடிகைகள் முகத்தை மறைக்கிறதுக்காக பர்தா போட்டுக்கலாமா கூடாதான்னு ஆர்கியூமென்ட் பண்ற அளவுக்கு நான் பெரிய மனுஷி இல்லே. ஆனால் நான் பர்தா போடுவதை யாரும் தடுக்க முடி



யாது. ஏன்னா, நானொரு முஸ்லிம் கேர்ள். பொதுவா சொல்லணும்னா பெண்கள் பர்தா அணிந்தால் வெளிப் பார்வைக்குக் கவர்ச்சியாகத் தெரியமாட்டாங்க. அதனாலே தப்பா பார்க்கணும்னு நினைக்கிற ஆண்கள்கிட்டேயிருந்து சுலபமாகத் தப்பிச்சுக்கலாம்" என்று குட்டியாய் லெக்சர் கொடுத்த சதா, பிறந்தது, வளர்ந்ததெல்லாம் மும்பை.

"அப்பா டாக்டர். அம்மா ஆயுள் காப்பீட்டுக் கழகத்துலே ஆபீசர். இரண்டு பேருக்குமே நான் ஐ.ஏ.எஸ். ஆகணுங்கறது ஆசை. எனக்கோ நந்திதா தாஸ் நடிப்பைப் பார்த்து நாமும் நடிக்கப் போகலாமேன்னு ஆசை. என்ன வழின்னு யோசிச்சப்போ, மாடலிங் பண்ணுன்னு தோழிகள் சொன்னாங்க. அம்மா காதுல மட்டும் போட்டுட்டு அப்பாவுக்குத் தெரியாமல் மாடலிங் பண்ணினேன். நான் நினைச்ச மாதிரியே தெலுங்குப் படத்தில் முதல் வாய்ப்பு. ஆனால் படக் கம்பெனிக்காரங்க நேரே அப்பா கிளினிக் போய், "உங்க பெண்ணை நடிக்க அனுப்புறீங்களா"ன்னு கேட்க... அவர் கத்தின கத்தலைக் கேட்டு, அய்யோ! அம்மான்னு வந்தவங்க, பயந்துபோய் ஓடிட்டாங்க. ஆனால் வாய்ப்பை இழக்கிறதுலே எனக்குச் சம்மதமில்லே. அப்பாவை ஒரு மாதிரி சரிகட்டிட்டேன். ஆனால் ஒரு கண்டிஷன் போட்டிருக்கார். சினிமாவிலாவது ஒரு கலெக்டர் கேரக்டரில் நடிச்க காட்டணும்னு. நல்ல ஜோக் இல்லே!" என்று சிரித்த சதா, பி.டெக் படிப்பை நிறுத்திவிட்டு நடிக்க வந்திருக்கிறார்.

"தெலுங்கிலும் முதல் படம் 'ஜெயம்'தான். பெரிய ஹிட். அதுக்கப்புறம் இடியட். அதுவும் ஹிட். 'நாகா'ன்னு ஒரு படம். அதுவும் ஹிட். வரிசையா வெற்றிப்படம் அமைஞ்சதுலே இப்போ நான் ரொம்ப பிஸி" என்று பவ்யமாய் பந்தா பண்ணிய சதாவிடம், அதென்ன சதா? செல்லப் பெயரா? என்றால் இயற்பெயரே அதுதானாம். "என்னோட முழுப் பெயர் சதாஃப். அரபி மொழியில் முத்துச் சிப்பின்னு அர்த்தம்" என்று முத்தான பற்களைக் காட்டிச் சிரிக்கிறார்.

தமிழில் ஜெயம் படம் ரீமேக் செய்யப்படுகிறது என அறிந்து, அடம் பிடித்து இந்த வாய்ப்பைப் பிடித்தாராம். "காரணம், தெலுங்கில் பெயர் வாங்கிக் கொடுத்த கேரக்டர். பள்ளிப் படிப்பை முடிச்சுட்டு, கல்லூரிக்கு வரும்போது ஏற்படும் முதல் காதல் அனுபவம்தான் கதை. படம் வெளியானதும் பாருங்க. ஹோம்லியான ஹீரோயினா கூப்பிடு, சதாவைன்னு சொல்லுவாங்க" என்று ஆர்வமாய்ப் பேசிக் கொண்டிருந்தவரை ஷாட் ரெடி என்று உதவி இயக்குனர் வந்து அழைக்க சீரியஸாகி, விடைபெற்றார் சதா.



- ஸ்ரீசக்கரம்


அட்டை, படங்கள் உதவி : ஜான்சன்




வலை பாயுதே...

ஒன்னு மட்டும் புரியலை!

சென்ற வாரம் ஒருநாள் சற்று வித்தியாசமாக ஏதாவது சமையல் செய்யலாமே என்று கணினியில் சமையல் குறிப்பு எழுதி வைத்திருந்த கோப்பு (அதாங்க, file) ஒன்றைத் தேடினேன். ஹூம்ம்ம். அகப்படவில்லை. தவறுதலாக அழிந்துவிட்டிருக்க வேண்டும். இப்போது என்ன செய்வது?



அட, www. about.com இருக்கில்ல...? கவலையேன்? என்றோ செய்த மெக்ஸிகன் பிட்சாவை அந்தத் தளத்தில் தேடினேன். இரண்டு பக்கத்திற்கு விதம் விதமாக பிட்ஸா குறிப்புகள் வந்து விழுந்தன. அதில் ஒன்றைப் பொறுக்கினேன். செய்முறைக் குறிப்பில் காணப்பட்ட சாமான்களில் பாதி என் வசமில்லை. அதனால் என்ன? ஆங்காங்கே நம் ஊர் சாமான்களைச் சேர்த்து, ஒரு மாதிரி இந்திய மெக்ஸிக ஒருமைப்பாட்டு பிட்ஸாவை உருவாக்கினேன்.



இணைய தளங்களில் தகவல் தேடுபவர்கள் பொதுவாக இரண்டு விதம். தங்களுக்குத் தேவையான தகவல்கள் என்ன என்று குறிப்பாகத் தேடுபவர்கள் ஒரு பக்கம். பலவித அமைப்புகள், நிறுவனங்கள், 'கடைகளை' அலசி ஷாப்பிங் செய்பவர்கள் வியாபார நோக்கில் ஆராய்பவர்கள்.

இன்னொரு ரகம், சும்மா ஒரு window shopping ரீதியில் எங்கே என்ன இருக்கிறது என்று பவனி வரும் ரகம். தாங்கள் அடிக்கடி விஸிட் செய்யும் தளத்தில் அந்த நிமிடத்தில், தலைப்புச் செய்தி என்ன, என்று பார்ப்பவர்களும் இதில் அடக்கம்.

இந்த இரண்டாவது ரக இணைய ரசிகர்களைக் கவர நிறைய தளங்கள் உள்ளன. rediff.com, indianinfoline, indolink போன்ற தளங்களில் சுடச்சுட செய்தி, ஷாப்பிங், அரட்டை, வாழ்த்து அட்டைகள் என்று உலகமே உங்கள் சுட்டு விரலில்.

அனேக இந்திய தளங்களில் கிரிக்கெட் உலகக்கோப்பை ஜுரம் நன்றாகவே சூடு பிடித்துள்ளது. கிரிக்கெட் ஜோக்ஸ்களுக்கு பஞ்சமேயில்லை. மாதிரிக்கு ஒன்று: உபயம்: 123india.com

"ஒரு பணக்காரர் வீட்டு விருந்தாளியாக அரபு ஷேக் ஒருவர் வந்திருந்தார். தம் விருந்தாளிக்குக் கிரிக்கெட்டை அறிமுகப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பி, தம் பண்ணைத் தோட்டத்தில் ஒரு மேட்ச் ஏற்பாடு செய்தார். மேட்ச் முடிந்தவுடன், "என்ன ஆட்டம் புரிந்ததா?" என்று விசாரித்தார்.

ஷேக்: ஓ. பிரமாதம். ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை."

"என்ன?"

"நீங்கள் பந்து அடிக்கும்போது அது தாறுமாறாக எல்லா திசைகளிலும் ஓடுகிறது. அதைப் பொறுக்க நீங்களேதான் ஓட வேண்டுமா? வேலையாட்களை ஏவினால் போதாதா?"

— அருணா ஸ்ரீநிவாசன்

தயாராகிறது பாக்தாத்





உலகெங்கும் பதற்றம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்க - ஈராக் யுத்தம் குறித்து எங்கெங்கும் வாதப் பிரதிவாதங்கள். அவரவருக்கு அவரவர் கவலை. இந்திய மத்திய பெட்ரோலிய அமைச்சர் "யுத்தம் நிகழ்ந்தாலும் நமக்கு பெட்ரோல் சப்ளை நின்றுவிடும் என்ற பயம் தேவையில்லை. வேண்டிய ஸ்டாக்குகளைத் தயாராக வாங்கி வைத்திருக்கிறோம்" என்கிறார்.

பாக்தாத் எந்த அளவு தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டு வருகிறது?

மேலோட்டமாகப் பார்த்தால் அரசு கலைக் கூடம் ஒன்று சமீபத்தில் அங்கு திறக்கப்பட்டிருக்கிறது. கருத்தரங்கங்களுக்குக் குறைவில்லை. என்றாலும் ஒவ்வொரு நிமிடமும் ஈராக் மக்களின் மனத்தில் யுத்த பயம் நிறைந்திருக்கிறது. சற்றே பலமான எந்த ஒலியைக் கேட்டாலும், அமெரிக்க ஏவுகணையோ என்ற கிலியில் மிரள்கின்றனர்.

பாஸ்போர்ட் அலுவலகங்கள் மிகவும் பிஸியாக இருக்கின்றன. அண்டை நாடுகளுக்குச் செல்லத் தயார் நிலையில் இருப்பதற்காக, விசாக்களுக்கான விண்ணப்பங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. டமாஸ்கஸ் நகரில் உள்ள பிரபல புனிதத் தலம் ஒன்றுக்கு நிறையப் பேர் (போரில் தங்கள் குடும்பம் பாதிக்கப்படக்கூடாது என்பது போன்ற) பிரார்த்தனைக்காகச் செல்லத் துவங்க, பல பேருந்து உரிமையாளர்களும் அதிகக் கட்டணம் வசூலித்து, நிறையக் காசு பார்த்து வருகிறார்கள்.

மனிதாபிமானமும் தட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. போர் பயம் என்னும்போது பொருளாதாரம் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

பள்ளி வகுப்புகள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால் தினமும் பெற்றோர்கள் வானொலிச் செய்திகளை மிகவும் கவலையுடன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பாக்தாத் போன்ற பெரு நகரங்கள்தான் அமெரிக்காவின் முதல் மற்றும் முக்கியக் குறியாக இருக்கும் என்பது எல்லோருக்குமே தெரிகிறது. கிராமத்தில் இருந்த தங்களது சொற்ப சொத்துக்களையும் விற்று விட்டு, முன்னேற்றம் நாடி நகரத்துக்குக் குடிபெயர்ந்தவர்கள் திரும்பிச் செல்ல வழியின்றித் தவிக்கிறார்கள். ஈராக்கிய நாணயமான தினாரை, டாலர்களாக மாற்றும் முயற்சிகளுக்கும் குறைவில்லை.

இவ்வளவு இருந்தும் சதாம் உசேனின் உடல் நலத்துக்காகவும், உள்ள உறுதிக்காகவும் இறைவனை வேண்டிக் கொண்டிருக்கிறார்கள் பெரும்பாலான இராக் மக்கள். ஏனென்றால் சதாம் உசேனும் அவரது குடும்பத்தினரும் நடத்திவரும் அக்கிரமங்களுக்குக் குறைவில்லை என்றாலும், உறுதியான ஆட்சியைத் தரவும், அமெரிக்காவை தில்லோடு எதிர்க்கவும் சதாம் உசேனால் மட்டுமே முடியும் என்பதில் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

பாக்தாத் நகரில் சமீபத்தில் ஒரு நாடகம் அரங்கேறியிருக்கிறது. அமெரிக்காவுக்கும் இராக்குக்கும் யுத்தம் நடக்க, இரு தரப்பிலும் பேரழிவு. எனினும் ஈராக் கிட்டத்தட்ட முழுவதுமாக நிர்மூலமாகி விடுகிறது. இந்தப் போரில் இறந்த ராணுவ வீரரின் மகள் ஒருத்தி, உணவுக்கும் வழியில்லாமல் ஒரு கறைபடிந்த இரவு விடுதியில் நடனமாடத் தொடங்குகிறாள். 'இதுதான் அமெரிக்காவின் ஆசை' என்று கருத்துத் தெரிவிக்கிறார் நாடக ஆசிரியர்!

- அருண்

வீர்சவார்கர் வீரம் உள்ளவரா? அல்லாதவரா? என்பதுதான் இங்கே தலையாய பிரச்னையாக உள்ளது. பார்லிமெண்டில் அவரது உருவப் படத்தை திறந்து வைத்தபோது கசமுசா நடந்ததா இல்லையா? அதை ஒட்டி இங்கே இன்னுமொரு படி மேலே போய், சிவசேனைக்காரர்கள், விஷ்ணுபாகத் என்ற முன்னாள் கடற்படைத் தளபதியைத் தாக்கியிருக்கிறார்கள். காரணம்? 'சவார்கர் முதுகெலும்பில்லாத கோழை. போர்ட் ப்ளெய்ர் ஜெயிலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள, பிரிட்டிஷாரிடமே சரணடைந்தவர். அவருக்கு நாட்டின் சுதந்திரத்திலல்ல... தன் சுதந்திரத்தில்தான் நாட்டம் அதிகம். அவரைக் காட்டிலும் சிரித்துக் கொண்டே தூக்கு மேடைக்குச் சென்ற ராஜ்குரு, மங்கல்பாண்டே, பேர் தெரியாத !! நேசவாளர்கள் எல்லோரும் பன்மடங்கு மேல்' என்று ஆணித்தரமாகப் பேசியிருக்கிறார். அத்துடன் 'நான் சொன்னது பொய் என்று நிரூபிக்கப் பட்டால், நான் தூக்கு மேடைச் செல்லத்

கருப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு!



• ஷீதல் மல்ஹார்

தயார்' என்று வேறு சவால் விடுகிறாரே? பழைய குப்பையைக் கிளறி 'இந்தா... பிடியுங்கள் உண்மையை' என்று எடுத்துத் தர எந்த மாஜிக் நிபுணரை வரவழைப்பது?

மாஜிக் நிபுணரையே வரவழைத்தாலும், அது பி.சி. சர்க்காராகவே இருந்தாலும் கூட, வெறுங்கையை வைத்துக் கொண்டு வித்தை காட்ட முடியாது... "அதகற்குத் தேவையான உபகரணங்கள் வேண்டும் என்பதை ஏனோ பலரும் புரிந்து கொள்ளவே மாட்டேனென்கிறார்கள்" என்று அலுத்துக் கொண்டார், 'கேன்சர்

பேஷண்ட்ஸ் எய்ட்'க்காக இங்கே மாஜிக் ஷோக்கள் நடத்த வந்திருக்கும் இந்த கொல்கத்தாக்காரர், அவரை ஒரு கூட்டம் ஒரு கடை வாசலில் சூழ்ந்து கொண்டு, ஏதாவது மாஜிக் செய்யச் சொல்லி வற்புறுத்திய தாம். அந்தச்சமயம் பார்த்து, கூட்டத்திலிருந் தவர் பர்சை யாரோ கொள்ளையடித்துவிட, 'ஐயோ... பர்சிலிருந்த இருநூறு ரூபாவைக் காணோம்' என்று அவர் அலறினாராம். எல்லோரும் சர்க்கார் தான் ஏதோ மாஜிக் செய்து காணாமல் போக்கியிருக்கிறார் என்று நினைத்து, மகிழ்ந்து, 'திரும்பவும் வரவழைத்து விடுங்கள்' என்று கேட்டுக் கொண்டனராம். சர்க்காரும் வேறு வழி தெரியாமல், தன் பர்சிலிருந்து சொந்தப் பணத்தை எடுத்து தண்டம் அழுதுவிட்டு, கூட்டத்தைத் திருப்தி செய்த நிம்மதியுடன் தப்பித்தாராம். "மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்ததே' என்று பெருமூச்சு விடுகிறார்....

"**ம**ரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிய வேண்டும்" என்று ஷபனா ஆஸ்மியைப் பார்த்து சின மூச்சு விடுபவர் 'மெலடி க்வீன்' லதா மங்கேஷ்கர். 'இவர் விஷயத்தில் நான் தலையிட்டேனா? என் விஷயத்தில் ஏன் அனாவசியமாக மூக்கை நுழைக்க வேண்டும்?" என்று மூக்கைச் சிந்துகிறார். விஷயம் இதுதான். பிப்ரவரி 17லிருந்து துவங்கிய ராஜ்ய சபா மீட்டிங்குகள் ஒன்றில் கூட லதாஜி கலந்து கொள்ள வில்லை என்று குற்றம் சாட்டியிருக்கிறார் ஷபனா. "அப்போது நான் ஏ.ஆர்.ரஹ்மானுடன் ஹைதராபாத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடிக் கொண்டிருந்தேன். அன்றே எனக்கு வைரல் ஜுரம், முதுகுவலி எல்லாம் வந்துவிட்டது. உடனே என் இயலாமையைக் குறித்து சபைத் தலைவருக்கு கடிதமும் அனுப்பி விட்டேன். நடுவில் இவர் எதற்காக வாயைத் திறக்கிறார்? என் உடல், பொருள், ஆவி அனைத்தும் இசையை நோக்கித்தான் திரும்பும். இந்த அரசியல் எனக்கு ஒவ்வாதது, நான் மதிக்கும் தலைவர் ஒருவரின் நிர்பந்தத்திற்காக இதை ஏற்றிருக்கிறேன். அவரைக் கலந்தாலோசித்து இதற்கொரு முடிவு கட்டுவேன்" என்று கொதிப்பவர், 'இனி பொறுக்க முடியாது. போதும் போதும்' என்கிறார்.

'**போ**தும் போதும்' என்று ஒரு போதும் சொல்ல முடியாத விஷயம் ஒன்று இருக்குமென்றால், நிச்சயம் அது ஏ.ஆர். ரஹ்மானின் இசை விருந்தாகத்தானிருக்கும். அண்மையில் ஸ்மிதா தாக்கரே, நடத்திய, எய்ட்ஸ் நோயாளிகளுக்கான நிவாரண நிதி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மும்பை வந்திருந்தார். அந்தேரி ஸ்போர்ட்ஸ் காம்ப்ளெக்ஸில் பொழிந்த இசை மழையில் நனைய எக்கச்சக்க கூட்டம்... அதுவும் நட்சத்திரக் கூட்டம். ஆனால் இம் முறை ரஹ்மானும் பாடகர்களுடன் இணைந்து பாடியது, தனி 'அட்ராக்ஷனா'க இருந்தது. ஆனால் இரவு பத்து மணியுடன் பொது



• ஷபனா

நிகழ்ச்சிகளை, முக்கியமாக லவுட் ஸ்பீக்கர்களை நிறுத்திவிட வேண்டும் என்ற விதி கறாராக கடைபிடிக்கப்படுவதால், ரஹ்மான் பாட நினைத்து, பாட முடியாமல் போன பாட்டுக்களின் எண்ணிக்கை இருபதாம்! இன்னொரு நிகழ்ச்சி நடத்தினாலென்ன?

இன்னொரு நிகழ்ச்சியைக் கேளுங்கள். 'மறந்து விடுகிறார்களே மாநிறமானவர்களை' என்று நொந்து கொள்கிறார், வெள்ளைத் தோலில்லாத மாடலழகி ஷீதல் மல்ஹார்! 'பாரிஸ் தவிர மற்ற இடங்களில் வெள்ளைத் தோலுள்ளவர்களைத்தான் மீண்டும் மீண்டும் மாடலிங்கிற்கு அழைக்கிறார்கள். ஃபேர்னஸ் க்ரீம் விளம்பரங்கள் நிறுத்தப்பட வேண்டும். இந்தியர்கள் பாட வேண்டியது, 'கருப்புத் தான் எனக்குப் புடிச்ச கலரை'த்தானே? என்கிறார்.

— ஜெய்ஸ்ரீ ராஜ்



வீராணம்: ரூ.280 கோடியில் ஒரு ஐடியா!

"வீராணம் திட்டமா? வீணான திட்டமா?" - என்று பலதரப்பட்ட மேடைகளில் பட்டி மன்றங்கள் நடந்து கொண்டிருக்க, 'முதலில் வீராணத்துக்கே தண்ணீர் வந்து சேரும் வழியைப் பாருங்கள்' என்கிறார் காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தொழில் நுட்ப ஆலோசகர் என். நடராஜன்.

"திருச்சி மாவட்டம் முக்கொம்பில் காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிந்து 107 கி.மீ பாய்ந்து கீழணையை அடைகிறது. நடுவில் பவானி முதல் மருதையாறு வரை பதினாறு காட்டாறுகள் வந்து இதில் கலக்கின்றன. மழை, புயல், வெள்ளம், மேட்டூரில் உபரி நீர்(?) என்று வரும்போது, தண்ணீர் இதன் வழியே வீணாகக் கடலில் சென்று கலந்து விடுகிறது. கீழணை வரையில் (190 அடிக்கு) பூமி சரிந்து வருவதால் தண்ணீர் தானாகவே இறங்கிப் பாய்கிறது. பதினைந்து கி.மீட்டருக்கு ஒன்று என இதன் நடுவே ஏழு கதவுத் தடுப்பணைகள் கட்டலாம். இதில் மின் சக்தியும் பெறலாம். நீரைச் சேமிக்கலாம். தடுப்பணைகளின் மீது சாலைகள் போட்டு ஊர்களை இணைக்கலாம்" என்கிறார்.

நீர் மின் நிலையம், பாலங்கள், கதவுத் தடுப்பணைகள், எல்லாவற்றுக்கும் சேர்த்து இவர் சொல்லும் திட்ட மதிப்பீடு இருநூற்றி எண்பது கோடி ரூபாய்.




• என். நடராஜன்

"கீழணையிலிருந்து வீராணத்திற்கு வடவாறு மூலம் இருபத்தியிரண்டு கால்வாய்கள் அமைக்கப்பட்டு, பாசனத்துக்குப் பயன்படுத்தப்படும் பகுதியும், இன்னும் விரிவாகும். மேட்டூர் அணையின் பாசனப் பகுதியைப் போல் வீராணத்தின் பாசனப் பகுதி மும்மடங்கு பெரிது. இத்திட்டத்தால் அந்தப் பகுதி விவசாயிகளும் பாதிக்கப்பட மாட்டார்கள். வீராணம் திட்டத்திற்கு எதிர்ப்பும் இருக்காது.


இரண்டு போகம் விளையும் இந்தப் பகுதியும் பாசன நிறைவு பெறும். சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதையும் சாத்தியமாக்கலாம். வீராணத்தின் மதகுகள் உயரத்திலிருப்பதால் ஏரியை ஆழப்படுத்துவதும், கரையை உயர்த்துவதும் எந்தப் பலனும் அளிக்காது. அதைவிட, இந்தக் கொள்ளிடத் தடுப்பணைத் திட்டத்தை செயல்படுத்துவது அதிக பலன் தரும்" என்கிறார் நடராசன்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



ஃபாஸ்ட் பௌலர் ஜாம் லீ!





10

யாரிடம் சொல்வேனடி தோழி!

அ. வெண்ணிலா

புரண்டு படுத்தான் சுந்தர்.

வீட்டிற்குள் அஞ்சலியின் காலடியோசை கேட்கிறதா எனக் கூர்ந்து கவனித்தான்.

ம்ஹூம்...

நிசப்தமாக இருந்தது வீடு. நிச்சயம் மாடியில்தான் உட்கார்ந்திருப்பாள் என்று சுந்தருக்குத் தெரியும். சென்று பார்க்க விருப்பமில்லை அவனுக்கு.

அலுப்பு தோய்ந்திருந்தது மனசு முழுவதும். அஞ்சலியைப் பற்றி நன்கு தெரிந்திருந்தாலும், அவனால் இதுமாதிரியான விஷயங்களைச் சரியென்று பொறுத்துக் கொண்டு போக முடியவில்லை.

அவள் திட்டுவது, இவனும் திட்டுவது, பேசாமல் முகந்திருப்பி இருப்பது, சமாதானம் செய்து கொள்வது... என இவை சகஜமாகிப் போயிருந்தாலும், சோர்வான விஷயங்களாகியிருந்தன. எப்போதும் அவளைப் பற்றித் தான் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற அவஸ்தையை அஞ்சலி அவனுக்குள் உண்டாக்கி விட்டாளோ என்றும்கூட நினைக்கத் தோன்றியது சுந்தருக்கு.

மாலையில் நடந்த விஷயங்களை நினைத்துப் பார்த்தான்.

'யார் வண்டியோ, யாரோ தள்ளி விட்டுட்டுப் போறாங்க. வண்டிக்காரரைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கலாம். இல்லை அந்தப் பையனைக் கூப்பிட்டு நிதானமாக் கேட்டிருக்கலாம். எடுத்த எடுப்பிலேயே சப்தம் போட்டுக்கொண்டு ஓடியது, அவர்களுடன் கோபப்பட்டு சண்டை போட்டது... இதெல்லாம் அதிகப்பிரசங்கித்தனமான செயல்தானே..' என்று சுந்தர் நினைத்தான்.

அவளுக்கோ, குழந்தைக்கோ என்னாயிற்றோ என்கிற பயத்தை உண்டாக்கியதோடு, சுற்றியிருந்தவர்களுக்கும் தேவையில்லாத ஒரு பரபரப்பை உண்டாக்கி, எல்லாரையும் கவனிக்கும்படி செய்ய வேண்டிய தேவையென்ன?

எல்லாரும் ஒரே மாதிரியா இருப்பாங்க...? யாராவது ஒருத்தர் சட்டென்று அஞ்சலியை அசிங்கமாகத் திட்டிவிட்டாலுங்கூட, எவ்வளவு சங்கடமாகிப் போகும்...?

சொல்கிற விஷயம் நியாயமா, சரியா இருந்தாலும் யாரு இப்பெல்லாம் அடுத்தவங்க சொல்றதைக் கேட்டுக்கத் தயாரா இருக்காங்க...?

எத்தனையோ முறை இது பற்றியெல்லாம் அவளிடம் எடுத்துச் சொல்லியிருக்கின்றான். பதிலேதுமின்றி மௌனமாய்க் கேட்டபடி இருப்பாள்.

''பொது இடத்தில கொஞ்சம் அப்படி, இப்படிதான் இருக்கும். எல்லா இடத்திலேயும், எல்லார்க்கிட்டேயும் நியாயத்தை, ஒழுக்கத்தை எதிர்பார்த்துக்கிட்டு இருக்க முடியாது. ப்ளீஸ்... தேவையில்லாம நம்ம முகத்தை ஏன் நாம அசிங்கமாக்கிக்கணும்...?''

அஞ்சலி வேலை செய்கிற பள்ளியில் நடந்த அந்தச் சம்பவத்தைச் சுந்தரால் மறக்கவே முடியாது.

இரண்டேயிரண்டு கட்டடங்கள் உள்ள பள்ளி அது. பள்ளி விட்டதும் அந்தக் கட்டடங்களுக்குள் ஆடுகளை அடைத்து விடுவார்கள். இரவு முழுக்க ஆடுகள் பள்ளிக் கட்டடத்திற்குள்ளும், வெளிப்புறத்திலும் அசை போட்டபடி படுத்




துக் கிடக்கும்.

பள்ளி வளாகமே ஆட்டுப் புழுக்கை களும், பீடித் துண்டுகளுமாகக் கிடக்கும். மனித சிறுநீர் கவுச்சி வேறு!

சிலநாள் ஆடுகளை வெளியே ஓட்டி விட்டு, பள்ளியைச் சுத்தம் செய்வார்கள். பலநாள் ஆடுகளை ஓட்டிக் கொண்டு போய் துவங்கும்வரை அள்ள மாட்டார்கள். இல்லை, பெருக்கி ஓரத்தில் குவித்து வைத்து விட்டுப் போய் விடுவார்கள்.

ஒரு பள்ளிக்கூடத்துக்கான எந்த மரி யாதையையும், அக்கறையையும்கூட தராத ஊர் மக்களிடம் எவ்வளவு சொல் லியும் அவளால் புரிய வைக்க முடிய



விடுவார்கள். பள்ளிக்கூடமே பார்க்கச் சகிக் காது. பிள்ளைகள்தான் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்வார்கள். அஞ்சலிக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது இது.

மழைக் காலங்களிலும் இப்படித்தான். நெல், வேர்க்கடலை எல்லாவற்றையும் உள்ளே காயப் போடுவார்கள். பள்ளி வில்லை.

"கிராமம்னா, அப்படித்தாம்மா இருக்கும். நாம ஒண்ணும் செய்ய முடியாது. மிஞ்சி எதுனா கேட்கப் போனோம்னா, பெரிய சண்டையாயிடும். வந்தமா, பாடம் நடத் துனோமான்னு போய்க்கிட்டு இருப்போம். அவங்க ஊரு பள்ளிக்கூடத்து மேல அவங்

களுக்கே அக்கறையில்லை..." என தலைமை யாசிரியரும் விலகிக் கொண்டார்.

வேலி கட்டி, செடி வைத்துவிட்டால் வரமாட்டார்கள் என்று, சிரமப்பட்டு பிள்ளைகளை வைத்தே வேலி கட்டி, பத்து தென்னங் கன்றுகளை வாங்கி நட்டு வைத்தாள் அஞ்சலி.

வேலியை முறித்துக் கொண்டு, தென்னங் கன்றுகள் மேலேயே மிதித்து, ஏறி நாசம் செய்து வைத்தன ஆடுகள்.

பள்ளிக் கட்டடம் திறந்து இருப்பதால் தானே, ஆடுகளை அடைத்து வைக்கிறார்கள் என்று, தலைமையாசிரியர் விடுமுறை போட்டிருந்த நாளொன்றில் பள்ளிக்கூடத்தைப் பூட்டி, சாவியை எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள் அஞ்சலி.

அவ்வளவுதான், ஆட்டுப் புழுக்கைகளால் பள்ளிக்கூடமே நாற்றமடித்துக் கொண்டிருக்கும் போதெல்லாம், அதைப் பற்றி எதுவுமே கேட்டுக் கொள்ளாத மக்கள் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து விட்டார்கள்.

"என்னாத்துக்கு அந்த டீச்சரு ஸ்கூலைப் பூட்டிக்கினு போனாங்க,. நாளைக்கி வரட்டும்...ரெண்டுல ஒண்ணு பாத்துடுறோம்..."

அஞ்சலி மேல் மரியாதை உள்ள ஒருவர், ஊரின் நிலையைக் கண்டு, மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் வீட்டிற்கே வந்து விட்டார்.

"டீச்சர்... ஊரே ஒண்ணுபட்டு நிக்கிது. பேசாம நீங்க லீவு எடுத்திடுங்க. சாவிய மட்டும் கொடுங்க. நா பேசி சமாதானப் படுத்தப் பாக்கறேன். ஊர் நெலமையே சரியில்லே..."

அஞ்சலி கேட்பதாயில்லை. பிடிவாதமாகப் பள்ளிக்குக் கிளம்பி விட்டாள்.

"ஊர் மக்களோட இந்த ஒற்றுமைய பள்ளிக்கூடத்தைச் சுத்தமா வச்சிருக்கிறதுலயும் காட்டுங்கன்னு கேக்கப் போறேன். இன்னிக்குப் போகலேன்னா, ஏதோ பயந்துக்கிட்டு நின்னுட்டாங்கன்னு கேலி பேசுவாங்க... நான் இன்னிக்குக் கட்டாயம் ஸ்கூலுக்குப் போவேன்..."

அஞ்சலியின் உறுதியான பேச்சு, சுந்தரால்கூட தடுத்து நிறுத்த முடியாமல் செய்தது.

வேறு வழியே இல்லாமல், சுந்தரும் அவளுடன் அன்று பள்ளிக்கூடம் வந்தான். ஊர் மக்களிடம் அவனே வலிய போய்ப் பேசி, அவர்களைச் சமாதானப்படுத்தினான்.

பெரியவர்கள் சிலர் கோபம் குறையாமல் இருந்தார்கள்.

"வேணும்னா இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்'னு டீச்சரை மன்னிப்பு கேட்கச் சொல்லுங்க..." என்றார்கள்.

சுந்தருக்குத் தர்மசங்கடமாகி விட்டது.

"நீ போப்பா. நான் பார்த்துக்கறேன்." என்ற அஞ்சலி, ஊர் மக்களிடம் வந்தாள்.

"நான் மன்னிப்பு கேக்கற அளவுக்குத் தப்பு ஏதும் செய்யலே. ஊர் பள்ளிக்கூடத்தை மாட்டுக் கொட்டகை மாதிரி நாசப்படுத்தியது நீங்கதான். இதப் பத்தி நீங்க யார்க்கிட்டே கம்ப்ளெயின்ட் செஞ்சாலும் நிச்சயம் உங்க மேலதான் நடவடிக்கை எடுப்பாங்க. அப்புறம் உங்க விருப்பம்..." பேசிவிட்டு விடுவிடுவென வகுப்பறைக்குள் சென்றுவிட்டாள் அஞ்சலி.

ஊரே வாயடைத்து நின்றது. சுந்தர் செய்வதறியாது தவித்தான்.

ஊர்ப் பெரியவர் முன் வந்தார்.

"டீச்சர் இப்படிப் பேசுறது சரியில்ல. ஒங்க முகத்துக்காகப் பாக்குறோம். இனிமே யாச்சும் பள்ளிக்கூடத்தைப் பூட்டாமப் போகச் சொல்லுங்க..." என்றார்.

"சரிங்க..." தலையாட்டினான் சுந்தர்.

அன்று மட்டும் தான் இல்லாமல் போயிருந்தால் என்ன நடந்திருக்குமென சுந்தரால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை.



மின்விளக்குகள் அணைந்து, மறுபடியும் உயிர்த்தன. பாரதி தொட்டிலில் சிணுங்குவது கேட்டு எழுந்து போய் ஆட்டினான்

சுந்தர்.

ஜட்டி ஈரமாகியிருந்தது. கழட்டிவிட்டு, வேறொரு ஜட்டி போட்டுவிட்டான்.

"சமத்துப் பையா... தூங்கு" என்றான்.

யார் வீட்டு டி.வி.யிலோ மெகா தொடர் ஒன்றில் டைட்டில் பாட்டு ஒலிப்பது, இங்கு எதிரொலித்தது.

வாசலுக்கு வந்தான். சப்தமெழுப்பாமல் வெளியே தலை நீட்டி மாடியைப் பார்த்தான்.

கையில் புத்தகமொன்றைப் பிடித்தபடி படித்துக் கொண்டிருந்தாள் அஞ்சலி.

மற்ற நாட்களாக இருந்திருந்தால்...

"கவிஞரே படிச்சது போதும். வந்து படுங்க. பனியில புத்தகம் நனையப் போகுது..." என்பான் கிண்டலாய்.

இப்போதைய மனநிலை அவளைக் கூப்பிடக் கூட தோன்றாமல் இருந்தது.

'தூக்கம் வந்தா, வந்து படுக்கட்டுமே!'

மறுபடியும் வீட்டுக்குள் வந்தான். பசித்தது.

'தண்ணீர் குடிக்கலாம்...!'

சமையலறைக்குள் நுழைந்தான்.

வெண்டைக்காய் சாம்பார் வாசம் மூக்கில் நுழைந்து, வயிற்றின் அடிவரை சென்றது.

"இவளோட கோபித்துக் கொண்டு, நான் ஏன் பட்டினியா கிடக்கணும்...?"

தட்டை எடுத்துக் கழுவி, சாதத்தை எடுத்துப் போட்டுக் கொண்டான். சாம்பாரை ஊற்றிக் கொண்டான். பிசையும்போதே... பசி கூடியது.

வேகுவேகுவென்று சாப்பிட்டான். புரையேறியது. தலையைத் தட்டிக் கொண்டே, தண்ணீர் குடித்தான்.

வெளிக் கதவை அஞ்சலி சாத்தும் சப்தம் கேட்டது. வேகமாய் எழுந்து தட்டை வைத்துவிட்டு, கையைக் கழுவிக் கொண்டு வந்து படுத்துவிட்டான். டி.வி.யில் இன்னொரு மெகா தொடரின் டைட்டில் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

காலையில் எழுந்தவள் எப்போதும் போல் தனது வேலைகளைச் செய்துவிட்டு, வழக்கத்தை விடச் சற்று முன்னதாகவே கிளம்பி விட்டாள்.

இருவரும் பேசவில்லை.

சுந்தருக்கு வருத்தமும், கோபமுமாய்ப் பொங்கிக் கொண்டு வந்தது.

"ஏன்... இப்படி நடந்து கொள்கிறாள்? நான் கோபமாய் இருக்கிறேன் என்று தெரிந்ததும், ஏன் சமாதானம் செய்யக் கூட தோன்றாமல் இப்படிப் பாராமுகமாய் விலகிப் போகின்றாள்...?

சுந்தருக்கு முன்னதாகக் கிளம்பிப் போகும் நாட்களில்... "ஏம்ப்பா... பாரதிய நீ போகயில, பக்கத்து வீட்டுல விட்டுட்டுப் போயிடு...!" என்று சொல்லிவிட்டுப் போகிறவள், இன்று அவள் போகும்போதே தூக்கிக் கொண்டு போய், பக்கத்து வீட்டில் விட்டு விட்டுப் போகிறாளே...!

'குழந்தை விஷயத்தில் நீயென்ன பெரிய அக்கறையோடு இருக்கிறாய்...?' என்பதைச் சொல்லாமல் சொல்லிப் போகிறாளா...? அல்லது இந்த வீட்டில் அவனை மட்டும் தனியாளாக்கிக் குத்திக் காட்டுகிறாளா..?'

கடிகாரம் பார்த்தான்.

அவனுக்கும் நேரமாகியிருந்தது.

அறைக்குள் சென்று பாண்ட், சட்டைக்குள் நுழைந்துகொண்டான்.

வீட்டுச்சாவி வழக்கமாய் வைக்கிற இடத்தில் இலை. 'ச்சே...எல்லாம் பேசுறா, வீட்டுச் சாவிய இன்னும் ஒரே இடத்தில வைக்க ஞாபகமில்லே..' முணுமுணுத்தபடியே தேடினான்.

தாழ்வாரப் பலகையில், பீரோ மேலே, சன்னல் மூலையில்... எங்குமில்லை.

'எங்கே வைத்தாள்...?'

புத்தக ஷெல்ஃப் பக்கம் வந்தான். அடுக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டொரு தடித்த புத்தகங்களின் மேல் சாவி இருந்தது.

சாவியை எடுத்துக் கொண்டு திரும்பப் போனவனின் பார்வையில் பட்டது... படபடத்துக் கொண்டிருந்த தாளொன்று.

கூர்ந்து பார்த்தான். அஞ்சலியின் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த தாளது.

கையில் எடுத்தான்.

வாசிக்க, வாசிக்க கண்கள் ஈரத்தால் மூடின.

(தொடரும்...)

"எனக்குச் செய்யப் போறது என்ன ஆபரேஷன் டாக்டர்?"

"சொன்னா புரியாது உங்களுக்கு."

"புரியற மாதிரி சொல்லுங்களேன் டாக்டர்?"

"புரிஞ்சா சொல்ல மாட்டேனா... ஏன்யா புரிஞ்சுக்கவே மாட்டேங்கறீங்க?"

- சீர்காழி வி. ரேவதி



வட்டத்துக்குள் கீப்பர்!


ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் விடையை எதிரே உள்ள கோடுகளில் நிரப்புங்கள். வட்டத்துக்குள் உள்ள எழுத்துக்களை மட்டும் ஒழுங்குபடுத்தினால் விடைப் பகுதியில் உள்ள குறிப்பு உணர்த்துவது கிடைத்துவிடும்.

1. தென்னாப்பிரிக்க அணியின் பிரபல ஃபீல்டர் — _ _ _ _ ○ ○
2. ஆஸ்திரேலிய அணியின் கேப்டனாக இருந்த 'எல்லை'க்காரர் — ○ _ _ _ _ _ _
3. கல்கத்தாவிலுள்ள பிரபல கிரிக்கெட் மைதானம் — _ ○ _ _ _ _ _ _
4. இந்திய கிரிக்கெட்டிலும் விளம்பரங்களிலும் விளாசிக் கொண்டிருப்பவர் — _ _ _ ○ _ _
5. ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் — ○ _ ○ _ _ _ _
6. இந்த உலகக் கோப்பையோடு ஓய்வு பெறவுள்ள பிரபல பாகிஸ்தான் ஆட்டக்காரர் — _ _ ○ _ ○ _ _

உலகின் சிறந்த விக்கெட் கீப்பர்களில் ஒருவர் _ _ _ _ _ _ _ _ _

— ஜி.எஸ்.எஸ்.

1. ஜான்டி ரோட்ஸ் 2. ஆலன் பார்டர் 3. ஈடன் கார்டன்ஸ் 4. டெண்டுல்கர்
5. ரிக்கி பான்டிங் 6. வாசிம் அக்ரம்
விடை: ஆடம் கில்க்ரிஸ்ட்



பதினேழு புல்லாங்குழல்களை ஒன்றாய்ச் சேர்த்து ஒரே குழலாக வாசித்தால் எப்படியிருக்கும்? அதுதான் ஜப்பானிய யோகோபு. கூடவே ஷேயோ என்கிற, பழங்காலத்து யாழ், சிதார் போல இசைக் கருவிகள். அதிலே தனியான முறையில் ஒரு வாசிப்பு, தனி ராகம், தாளம்.

இதற்கு நடனமும் தனி. ஆடுபவர்கள், போர் வீரர்கள்! தலையில் பளபளவென்று பெரிய கிரீடம், வண்ணங்களில் கவசம் போல ஒரு மேலங்கி, சுரிதார் டைப்பில் நீண்ட உடை, அலங்காரமாக ஒரு ஈட்டி, தங்கப் பிடி போட்ட ஒரு கத்தி - இவற்றோடு பிரத்யேகமான முறையில் ஒரு நடனம்.

ஜப்பானின் பழங்கால அரண்மனைகளில் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளாக அரச வம்சத்தவர் மட்டுமே ரசிக்க, நடந்து வந்த இந்தக் கலை நிகழ்ச்சி, தற்போது மெல்ல பொது மக்களைச் சென்று சேர்ந்து, ரசிக்க வைக்கிறது.



இந்த நடன, இசைக் குழுக்களில் சேர்ந்து ஆடுவதும், இசைப்பதும் இலேசான சமாசாரமில்லை. அரண்மனை விழாக்களை கவனிக்க என்றே நிர்வாகக் குழு இருக்கிறது. அதில் வைக்கப்படும் 'என்ட்ரன்ஸ் பரீட்சையில் தேற வேண்டும். பிறகு ஏழு வருஷம் பயிற்சி. பழகவும் கற்கவும் அதில் அவ்வளவு இருக்கிறது. பிறகுதான் ஆஸ்தானக் கலைஞனாக முடியும்.

நடனத்திற்கான உடைகளையோ நடன முறைகளையோ, இசையையோ மாற்றாமல் அப்படியே பாதுகாத்து வருகிறார்கள்.

'யோகோபு' வாசிக்கும் யாசோ, இவானாமி, 'ஷோயோ' வாசிக்கும் மாகயாமா செய்சி எல்லோரும் சொல்வது ஒன்றுதான் : "இது மாறாமல் வந்து கொண்டிருக்கும் கலை. இது காலங்களைக் கடந்து செல்வதற்கு நாங்கள் வெறும் படிக்கட்டுக்கள்தான். அதன் வடிவத்தை வளர்ச்சியென்ற பெயரில் சிதைக்கவோ, மாற்றவோ எங்களுக்கு உரிமை கிடையாது." **-விஷ்வக்**



யாகோபு!

• அவ்வை.கே.சஞ்சிவிபாரதி, கோபி.

? தமிழக காங்கிரஸ் இனி எப்படிச் செயல்படும்?

! அதே கோஷ்டிப் பூசலுடன்தான்.

• இரா. பார்த்திபன், வயலூர்.

? சமீபத்தில் உங்களை வியப்பில் ஆழ்த்திய நிகழ்ச்சி?

! பாகிஸ்தானை வென்ற கையோடு இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார் நிதியமைச்சர். இதன் மூலம் அணியினர் மனத்தில் மட்டுமின்றி ரசிகர்கள் மத்தியிலும் விஷ வித்தைத் தூவியிருக்கிறார். இது, இரு அணியினரும் ஆட்டத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் வெளியிட்ட ஆரோக்கியமான நேசப் பான்மையை நசுக்கி நாசமாக்கிவிட்டது.

• ஆர்.ஜி.ஹரி, திசையன்விளை.

? சாத்தான்குளம் ரிசல்ட் சால்ட்டா? அசால்ட்டா?


! தமிழக முன்னேற்றத்தை ஹால்ட் செய்த ஃபால்ட்டுக்குத் தந்திருக்கிறது மேலும் ஒரு சுப் கோக்கோ மால்ட்!

சாத்தான்குளம் ரிசல்ட் – சால்ட்டா? அசால்ட்டா?

• பஞ்சவண்ணமகன், கருப்பம்புலம்.

? இந்திரா காந்தி ஆட்சியின்போது நினைவுத் தபால்தலை வெளியிடப்பட்ட வீரசாவர்க்கர் படத்தை, பாராளுமன்ற வளாகத்தில் திறக்க எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?

! சாவர்க்கர் சுதந்தரப் போராட்ட வீரர் என்றாலும் காந்தியத்துக்கு நேர் விரோதமான கொள்கை கொண்டிருந்தார். காந்தி கொலை வழக்கில் அவர் பெயர் அடிபட்டது என்பதால், தேசப் பிதா படத்தின் எதிரிலேயே சாவர்க்கர் படத்தை வைப்பதில்தான் ஆட்சேபணை. ஆனாலும் ஆரம்பத்தில் தலையாட்டிச் சம்மதம் அளித்துவிட்டு அப்புறம் ஆட்சேபிப்பது எதிர்க்கட்சிகளுக்கு அழகில்லைதான்.



• சர்ச்சை!

• லெ.நா. சிவகுமார், சென்னை - 33.

? செயற்கை உரங்கள் பயன்படுத்தப்படுவதைக் குறைக்கவே அவற்றுக்கான வரி உயர்த்தப்பட்டதாக பி.ஜே.பி. குறிப்பிடுகிறதே?

! ஏற்கெனவே பட்ஜெட் சிரிப்பாய்ச் சிரிக்கிறது. போதாததற்கு இப்படி ஒரு செயற்கையான ஜோக்கா!

• ஆர். செந்தில் முருகன், நல்லூர்.

? ஜெயலலிதா அளவுக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கை ஹை கோர்ட் விசாரிப்பதற்குத் தடை விதித்தது பற்றி...?

! குற்றம் சாட்டப்பெற்ற நபர், ஆட்சிப் பொறுப்பில் இருந்து வழக்கை அரசு சார்பில் நடத்துவதால், மிரட்டலுக்குப் பயந்து சாட்சிகள் பல்டியடிக்க, சாட்சியங்கள் அழிக்கப்பட, வழக்கும் நேர்மையாக நடைபெறாது போகும் என்பதால் தி.மு.க. சார்பில் போடப்பட்ட மனுவுக்குச் செவி சாய்த்துள்ளது உச்சநீதி மன்றம்.



• துறை (1)

• என். பாலகிருஷ்ணன், மதுரை -1.

? வாசகர்கள் நிதி உதவியுடன் விகடனும் வாசன் அறக்கட்டளையும் கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அரிசி வழங்கும் திட்டம் குறித்து...?

! எல்லோரும் இன்புற்றிருக்க விகடனுக்குக் கை கொடுத்த வாசகர்களையும் சேர்த்து வாழ்த்தலாம்!

• ஜோ. பன்னீர் செல்வம், சென்னை -12.

? 2003 – 2004ஆம் நிதியாண்டை, பயணிகள் திருப்தி ஆண்டாகக் கடைப்பிடிக்கப் போவதாக மத்திய ரெயில்வே துறை அமைச்சர் அறிவித்துள்ளாரே – பயணிகள் திருப்தி அடைவார்களா?

! இதுவரையிலான ஆண்டுகள் பயணி கள் அதிருப்தி ஆண்டுகள்தான் என்று ஒப்புக் கொண்டது வரை திருப்தி போங்கள்!

● எம்.சிவகுருநாதன், தஞ்சை.

? இந்தியா என்பதை 'ஹிந்துஸ்தான்' என மாற்ற வேண்டும் என தொகாடியா கோரியிருப்பது பற்றி...?

! வி.எச்.பியின் பிடிவாதப் பட்டியலில் மற்றொரு நெருஞ்சி முள். இந்துக்கள் தவிர வேறு யாருக்கும் இங்கு இட மில்லை என்ற அநியாய சிந்தனையின் வெளிப்பாடு. அது சரி, இந்தியா என்பது ஏற்கெனவே 'பாரத்' ஆகிவிட் டதே. தெரியாதா தொகாடியாவுக்கு...?

● எஸ்.ராஜசேகரன், பெரம்பலூர். *

? விழிப்புணர்வு ஊட்டிச் சிந்திக்க வைக்கும் பதில் ஒன்றை எடுத்து விடுங்களேன்...?

! (பட்ஜெட்டின்) ''பற்றாக்குறை என்னைப் பயமுறுத்துகிறது''_ நிருபரின் கேள்விக்கு மத்திய நிதி அமைச்சர் தந்த பதில்.



• வாழ்த்து

● முகவை முத்துசாமி, தொண்டி.

? நமது குடியரசுத் தலைவர் சிறுசிறு நகரங்கள்தோறும் சென்று அங்கு நடக்கும் நிகழ்ச்சி களில் கலந்து கொள்வது குறித்து...?



துறை (2)

! நாற்காலி தேய்க்க விரும்பாதவர். இளம் மூளை களைத் தீட்டிப் பளபளக்கச் செய்ய விரும்பு பவர்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? மேஜர் சுந்தர்ராஜனின் மறைவு குறித்து?

! நாடகத்துறையிலிருந்து சினிமாத் துறைக்கு வந்து பிரகாசித்த நடிகர்களில் முக்கியமான வர். இமேஜ் பற்றிக் கவலைப்படாமல் எல் லாவிதமான பாத்திரங்களிலும் வாழ்ந்து காட்டியவர். சிவாஜியைப் போலவே கம்பீர உடல்மொழி, குரல்வளம் கொண்ட மேஜர், தமிழ் சினிமா நடிகர்களில் மேஜர் என்று சொல்லலாம்.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? நோரா ஜோன்ஸ், கிராமி விருதுகளை அள்ளியுள்ளாரே...?

! அப்பா _ மகள் உறவில் தட்டும் அபஸ்வரங் களை நீக்கிவிட்டு வாழ்த்தி மகிழ்வோம்.

● பா.சு.மணிவண்ணன், திருப்பூர் - 4.❐

? ஒரு காலத்தில் அரசியல் பொதுக் கூட் டங்களை மக்கள் விரும்பி ரசித்தார்கள். ஆனால் இப்போது அந்த நிலை இருப்பது போல் தெரியவில்லையே?

! எல்லாம் இந்தத் தொலைக்காட்சி வந்த பிறகு தானய்யா. இப்போதெல்லாம் கட்சி யைத் தொலைக்காட்சி வழியாகவே நடத்தி விட முடிகிறதே! சொந்தத்தில் தொலைக் காட்சி இல்லாத கட்சிகளுக்குத்தான் பின்னடைவு!○

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
பா. சு. மணிவண்ணன்,
184, தென்னம்பாளையம்,
திருப்பூர் - 641 604

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
எஸ். ராஜசேகரன்,
வெண்பாவூர் (அஞ்சல்)
பெரம்பலூர் மாவட்டம் - 621 116

20

காதல் பிசாசே

உன் கண்களிரண்டும்
கன்னித்தீவின்
வாசலாகியது
உன் உதடுகளிரண்டும்
முத்தம் எழுதிய
வாசகமாகியது

உன் கால்களிரண்டும்
இன்பக் கதவின்
தாழ்ப்பாளாகியது
உன் புருவமிரண்டும்
வானவில்லின்
தாய்ப்பாலாகியது

ஒரு நல்ல சிறுகதையின் முதல் வார்த்தையும் ஒரு சிறந்த கவிதையின் இறுதிச் சொல்லும் மிக மிக முக்கியமானவை. படைப்பின் முழுமையும், தாக்கமும் இதன் மூலமே அளவிடப்படுவதாகச் சொல்கிறார்கள். முதலும் முடிவும் இல்லாது போனால் உயிரேது? மூலதனமில்லாத வணிகம் நிரந்தரமற்றது. மூலமில்லாத கலை ஊனமுடையது.

காதலனின் முதல் சொல் காதலிக்கு இறுதியாகவே அல்லது காதலியின் முதல் சொல் காதலனுக்கு இறுதியாகவோ அமைதல் காதலின் இயற்கை. இறுதியென்பது நூல் கண்டின் இன்னொரு முனை போல, மறைந்திருப்பது. உயர்ந்து உயர்ந்து போகும் பட்டத்தின் பயணத்தைப் பொருத்தே, சுருண்டு கிடக்கும் நூலின் நீளம் விளங்கும்.

இதுகாறும் கிடைத்திருக்கிற காவியங்களிலே மிக மிக சுவையான காதல் ரஸங்களைக் கொண்டதாகச் சொல்ல வேண்டுமானால் 'கீத கோவிந்த'த்தையே சொல்ல வேண்டும். மனிதனால் உருவாக்கப்பட்டதுதான் மரபும் புனிதமும். எனினும் புனிதத்தை மனிதனே வணங்கும் மரபாக மாற்றும் வல்லமை சிலருக்கே உண்டு. அந்தச் சிலரில் ஜெயதேவர் முக்கியமானவர்.



காலத்தால் பழைமையானது என்பதால் மட்டுமே கீதகோவிந்தம் போற்றலுக்குரியதல்ல. பக்தியையும் பிரேமையையும் சரிவிகிதத்தில் சேர்த்ததாலும், ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தை துல்லியமாகத் தீட்டியதாலுமே ஜெயதேவர் சிலாகிக்கப்படுகிறார்.

நாயக நாயகி பாவத்தைக் கையாண்ட பல பக்திக் காவியங்கள் உண்டெனினும், கீத கோவிந்தம் அதற்கும் மேலான காதலின்பத்தை கைக்கொண்டதால் பரவலான கவனத்தைப் பெறுகின்றது. கண்ணன் ராதைக் காதலை சிருங்காரக் காவியமாக அமைத்திருந்தாலும் இந்தக் காவியத்துக்கு வேதாந்தபாரமான ஆழ்ந்த உட்பொருள் இருப்பதாகச் சொல்கிறார்கள். பகவானே புருஷன். மற்ற ஜீவிகள் பெண்கள். ஜீவாத்மா கடைத்தேற பகவானை அடைதல் முழுமை. அந்த முழுமையை குருவின் மூலமே பெற முடியும் என்பதை, ஜெயதேவரின் பாத்திரப் படைப்புகள் பறை சாற்றுகின்றன.

ஜெயதேவரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டாக இருக்கக்கூடும் என்பது கணிப்பு. இந்தப் பாடல்கள் எட்டு சரணங்களைக் கொண்டிருப்பதால் 'அஷ்டபதி' என்னும் பெயர் ஏற்பட்டது. மொத்தம் இருபத்தி நான்கு அஷ்டபதிகளைக் கொண்ட கீத கோவிந்தத்தில் பத்தொன்பதாவது

யுகபாரதி



அஷ்டபதிக்குச் சதுர் புஜம் என்று பெயர்.

பகல் முழுதும் வராது போன கண்ணன் அந்தியில் வருகிறான். வந்து விட்ட மகிழ்ச்சி ஒரு புறமிருக்க, தாமதம் ராதையை கோபமுறச் செய்கிறது.

இந்தக் கோபத்தை வெளிக்காட்டினால் கண்ணன் வெளியேறி விடுவானோ, என பயமாகவும் இருக்கிறது. ஒரு வழியாய் மனத்தை சாந்தப் படுத்திக் கொண்டு பேசப் போக, மன்னிப்புக் கேட்கிறான் கண்ணன் எனத் தொடங்கும் இந்த அஷ்டபதியில் விசேஷம் என்னவென்றால், இதன் ஏழாவது சரணத்தை சாட்சாத் கண்ணனே எழுதியதுதான்.


ஆறாவது சரணத்தை இயற்றிய ஜெயதேவர் 'காமம் என்ற கொடிய விஷம் தலைக்கேறி விட்டது. இந்த விஷம் இறங்க வேண்டுமானால் மிருதுவான ராதையின் கால்கள் என் தலை மீது பட வேண்டும்' என கண்ணன் எண்ணுவதாக எழுதுகிறார்.

எழுதிக் கொண்டிருந்த ஜெயதேவருக்குத் தயக்கம். பகவானின் தலையில் ஒரு பெண்ணின் கால்கள் படுவதா? நினைக்கவே விபரீதமாகப்படுகிறது. மேலும், யோசிக்க மனமின்றி, மனைவி பத்மாவதியிடம் சுவடியைக் கொடுத்து விட்டு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யப் புறப்படுகிறார்.

தனக்குத் தோன்றிய சரணத்தை எழுதுவதன் மூலம் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமான இடைவெளி குறைந்து விடும். தாம் வணங்கும் தெய்வத்தைத் தாமே அவதூறு செய்வது போல் நேர்ந்து விடும். இப்படியொரு எண்ணம் தோன்றியதற்காகத் தன்னையும் கற்பனைகளையும் கடிந்து கொள்கிறார் ஜெயதேவர்.

செய்வதறியாமல் திணறிப் போவது படைப்பின் வெற்றியை உறுதி செய்யும். ஆனால், இந்தத் திணறல் தீராத பழியை உண்டாக்கி விட்டால் என்ன செய்வது? ஒரு

பெண்ணின் கால் பகவானின் தலையில் படலாமா? மனம் குழம்பும் போது கைகால் நடுங் கும். கைகள் நடுங்கினால் எழுத்து வராது. குளித்து முடித்து, தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டார் ஜெய தேவர். உணவு முடிந்தது. பத்மாவதியை அழைத்துச் சுவடியை எடுத்து வரச் சொன்னார்.



எடுத்து வந்த சுவடியில் ஏழாவது சரணம் எழுதப்பட்டிருந்தது. கொதித் துப் போனவர் வார்த்தைகளைக் கொட் டத் துவங்கினார். கூடாது என நினைத்த கூற்றை யார் எழுதியது? பத்மாவதி அம்மையார் தனக்கு எதுவும் புரியாதவளாய் நின்றிருந்தாள். 'என் ணெய்த் தலையுடன் திரும்பி வந்து சுவடியைப் பெற்று நீங்கள்தானே எழுதினீர்கள்' என்கிறாள். நானெங்கே வந்தேன்? எண்ணெய்க் கறையோடு எழுதிப் போனது கண்ணன், என்பதாக பிறகு தெளிகிறார்கள்.

ஒரு பெண்ணின் கால் பகவானின் தலையிலும் படலாம். அந்தக் கால் அவனுக்கு விருப்பமுள்ள பெண்ணுடை யதாக இருந்தால், தவறில்லை. விஷம் குடிக்கவும் தயார்தான். ஆனால், அது நீ தருவதாக இருந்தால், என்பதும், இதன் தொடர்ச்சிதான் போல.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கீதகோவிந்தம் இன்றைக்கும் ரஸமுடையதாக இருப்ப தற்கு கற்பனை மட்டுமே காரண மில்லை.

பெய்தது அடைமழையாக
இருந்தாலும்
ஆறேழு துளிகளுக்கு மேல்
தங்குவதில்லை
தந்திக் கம்பிகளில்

'பலூன்காரன் வராத தெரு' தொகுப்பில் அழகு நிலா எழுதிய இக் கவிதை சமுத்தி ரம் போல் எண்ண அலையை இதயத்துக்குள் எழுப்புகிறது. ஜெயதேவருக்கு சிக்கல் வர, கண்ணனே வந்து தீர்த்து விட்டுப் போவது காத லால்தான். எல்லாத் துளிகளை யும் கடல் ஏந்திக் கொள்ள நினைத்தாலும் விழுவது தான் தங்கும்.

"அந்த நடிகை படப்பிடிப்பை கனடாவில்தான் வைக்கணும்னு பிடிவாதம் பிடிக்கிறாங்களே ஏன்?"
"அந்த நாடுதான் இன்னும் அவங்க பார்க்கலையாம்."
— மன்னை சதிரா

துளியாய் விழுந்து கட லாய்ப் பெருகுவதும், கட லாய் பெருகி துளியாய்க் குறுகுவதும், காதலின் நிகழ்வு.

இரு சரீரங்களுக்கு
இடையில்
வார்த்தை
இருப்பதில்லை.
நாம்
வார்த்தை இல்லாமலும்
இருந்ததுண்டு

இரு சொற்களுக்கு இடையில்
உடல் இருப்பதுண்டு
நாம் உடலில்லாமல்
இருந்ததுண்டு
ஒருவருக்கொருவர்
முழுமை கோரும்
நிகழ்வு நாம்.

முதல் சொல்லும் இறுதிச் சொல்லும் இல்லாமல் போனாலும், மொழி இல்லாமல் போய் விடு வதில்லை. உடலற்று, சொல்லற்றுப் போனாலும், முழுமையின் நிகழ்வைக் கோருகிற இக் கவிதை, கவிஞர் சுகுமாரனுடையது. 'வாழ் நிலம்' தொகுப்பில் வாசிக்கக் கிடைத்தது.

ஒவ்வொரு படைப்பின் மூலமும் இதயத்தை முன்வைத்தே எழுதப்படு கிறது. ஒவ்வொரு கட்டடமும் மண் வாகைப் பொருத்தே வடிவமைக்கப் படுகிறது. ஒவ்வொரு காதலும் இயல்பை மீறாமல் எழுப்பப்படுகிறது. காலில் மிதிபட்ட முயலகனோடு காட்சியளிக்கிற நடராஜர் சிலை போல, காதலில் மிதிபட்டு காலம் கிடக்கிறது. வணங் குதல் கடமையல்ல, ஆனந்தம். ஆண்டவனே ஆனாலும், காதலில் அப சாரமோ, விபரீதமோ இல்லை. இது ஜெய தேவர் மூலம் கண் ணனே எழுதியது. கண் ணன் நம் காதலன்.



(தொடரும்)

தட்டினேன் திறந்தது

HUTCH

ஆர்.பி.ஜி, ஏர்டெல், ரிலையன்ஸ் என்று மொபைல் போன்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் வேளையில், 'ஹட்ச்' செல்ஃபோன் நிறுவனமும் களத்தில் குதித்திருக்கிறது.

இந்த ஏழெட்டு மாதங்களில் சந்தாதாரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, 'ஹாய்! ஹட்ச்'சை ஒரு மந்திரம் போல் சென்னையில் நுழைத்து வெற்றி கண்டிருக்கிறார் சாம்யுவல் செல்வகுமார். இத்தனைக்கும், இது அவர் கையாளாத புதிய துறை!

''படிப்பு முடிந்ததும் ஜுவல்லரி தொழிலில் மூன்று வருடம் வேலை பார்த்தேன். குடிசைத் தொழில் போல வீடுகளில் நகைகளும், ஆபரணங்களும் செய்யப்பட்ட நிலையிலிருந்து, இன்டஸ்ட்ரி அந்தஸ்தை அடைந்தது ஜுவல்லரி மார்க்கெட். நிறையக் கற்றுக் கொள்ளவும் செய்தேன். அடுத்து பத்து வருடங்கள் மோடி ஜெராக்ஸ் நிறுவனத்தில் பணி புரிந்தேன். முற்றிலும் புதிய துறை. நகை மார்க்கெட்டுக்குச் சம்பந்தமே இல்லாத துறை. ஆனால் ஆறு வெவ்வேறு பிரிவுகளில் எனக்குப் பொறுப்பு தரப்பட்டபோது, ஆறிலும் என் முத்திரையைப் பதித்தேன். அப்போதுதான், அதாவது 1992ல், 'ஃபார்ச்சூன்' இதழில் என்னை அட்டைப்படத்தில் போட்டுக் கௌரவித்தார்கள்!'' என்கிறார் செல்வகுமார்.

மேற்கொண்ட வேலை எதுவானாலும், அதில் புதிய பாதைகளைப் போட்டிருக்கிறார். புதிய கதவுகளைத் திறந்திருக்கிறார். இப்போதும் அந்தத் துறுதுறுப்பே அவரை செல்ஃபோன் மார்க்கெட்டிலும் சில பல சவால்களைச் சந்திக்க வைத்திருக்கிறது!

''நான் ஒரு வேலையில் என்னைப் புகுத்திக் கொண்டு அதிலேயே சிக்கித் தவிப்பதில்லை. ஒரே ஒரு துறை அல்லது ஒரே ஒரு வேலையோடு நான் திருப்தியாக இருந்துவிடவில்லை. அப்படி இருந்தால் பெரும்பாலும் சாதனைகளைச் செய்ய முடியவதில்லை!'' என்கிறார் சாம்யுவல் செல்வகுமார்.

செல்வகுமார் சயன்ஸ் பட்டதாரி. பட்ட மேற்படிப்பு மனித வள மேம்பாட்டுத் துறையில். ஆனால் வந்து சேர்ந்ததோ விற்பனைக் களமான மார்க்கெட்டிங் துறைக்கு!

படித்த படிப்பை வைத்துக் கொண்டே, கிடைத்திருக்கிற வேலையில் பிரகாசிப்பதுதான் செல்வகுமாரின் வழியாக இருந்திருக்கிறது. 'Passion' என்கிறார்களே, அந்தத் தீவிர உணர்வுதான் முக்கியம். அது இல்லாவிட்டால் வெற்றி பெற முடியாது. அந்தத் துடிதுடிப்புத்தான் புதிய மார்க்கெட்டுகளைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றை நிலைநிறுத்துவதிலும் கைகொடுக்கும். நானே எங்கள் மார்க்கெட்டிங் பிரிவு நபர்களுடன் சவால் விடுவதுண்டு. ஒரு நிபுணனுக்கு மார்க்கெட்டை உடைப்பதும், மறுபடி உருவாக்குவதும் சாத்தியமாக இருக்க வேண்டும்!'' என்கிறார் செல்வகுமார்.



'ஹட்ச்' என்ற தமது நிறுவனப் பெயர் சற்றே அந்நியமாகத் தொனிப்பது பற்றி அவருக்குக் கவலையே இல்லை. ஹட்ச் ஒரு சர்வதேச நிறுவனமாக இருப்பதால், அதற்குத் தனியே பிராந்திய அடையாளம் தேவையில்லை என்று உறுதியாக நம்புகிறார்.

''எங்களுடைய சேவை உயர்தரமானது

என்பதை மட்டுமே வலியுறுத்துகிறோம். உபயோகிப்பவரின் நலன் மட்டும்தான் முக்கியக் குறிக்கோளாக இருக்க வேண்டும். இது மும்பை, தில்லி, கொல்கத்தா என்று எங்குமே பொதுவானதாகத்தான் இருக்கிறது. மும்பை மார்க்கெட்டும் அடிப்படையில் சென்னை மார்க்கெட் போலத்தான் இருக்கிறது. விழிப்புணர்வு, கல்வி, சாமர்த்தியம் இவை எல்லாமே மீடியாவின் தாக்கத்தினால் ஒரே அளவில்தான் இருக்கிறது என்றும் சொல்லுவேன். எங்களைப் பொறுத்தவரை, எளிமை, நாணயம், நம்பிக்கை, ஆர்வம் இவற்றைத்தான் எங்கள் பிஸினஸில் கடைபிடிக்கிறோம். இதுதான் உண்மையில் எந்த வியாபார வெற்றிக்கும் அடிப்படையாக இருக்கின்றன இல்லையா?'' என்கிறார் செல்வகுமார்.



வளரப்!

சென்னையில் செல்ஃபோனை அறிமுகப்படுத்தும்போது, இங்குள்ள மக்களால் வாங்க முடியாத அளவுக்கு விலை வைத்திருப்பதாகத் தோன்றவில்லையாம். ஆரம்பித்த ஆறு மாதங்களில் 'சிறந்த சேவைகள் தருபவர்' என்ற உணர்வைத் தோற்றுவித்ததே, தங்கள் வெற்றிக்கு முக்கியக் காரணம் என்று கருதுகிறார் செல்வகுமார்.

'அதே விலை - அதிக மதிப்பு' என்ற விளம்பரச் செய்தி மூலம் செல்ஃபோனில் கூடுதலாக என்னென்ன பயன்கள் கிடைக்கும் என்பதை விளக்கியிருந்தார்கள்.

ரெயில் டிக்கட்டின் பி.என்.ஆர். எண்ணைச் சொன்னால், முன்பதிவு விவரம் கிடைத்துவிடும். அதேபோல விமான டிக்கட் நிலவரம். எஸ்.எம்.எஸ். எனப்படும் ஷார்ட் மெஸேஜ் சர்வீஸ். (முதலில் யாரும் இதை நம்பவில்லையாம். துளியூண்டு இடத்தில் என்ன மெஸேஜ் அனுப்பிவிட முடியும் என்ற சந்தேகம்

எல்லோருக்கும் எழுந்தது. இப்போது என்னடா என்றால் 'எஸ்.எம்.எஸ்.' மெஸேஜுக்கு ஒரு தனி மொழியே உருவாகிவிட்டது! உலகக் கோப்பை கிரிக்கெட் ஜுரத்தில் நாடே உச்சத்தில் இருக்கிறது. ராகுல் திராவிட் 'பாட்' செய்வதை அப்படியே செல்ஃபோன் திரையில் காண்பித்தது 'ஹட்ச்'! இவை எல்லாமே 'பெரிசு'களுக்குப் பயன்படுகிறதோ இல்லையோ, இளைய தலைமுறைக்கு இவை எல்லாம் பிடித்துப் போய் விட்டதல்லவா?

ஆனாலும் செல்ஃபோன்கள் மேல் தட்டுத்தனமாக - எலைடிஸ்ட் ஆக - இருப்பதாக எழுப்பப்படும் குரல்களை இவர் ஏற்கவில்லை.

"அப்படியானால், 2001 டிசம்பரில் இரண்டரை லட்சம் பேரே செல்ஃபோன் வைத்திருந்தார்கள். இந்த எண்ணிக்கை ஒரே வருடத்தில் நாலு லட்சத்தைத் தாண்டி விட்டதை என்னவென்று சொல்லுவீர்கள்? இதில் மத்தியதரக் குடும்பங்களின் பங்கும் இல்லை என்று எப்படிச் சொல்லுவீர்கள்?" என்று கேட்கிறார். இதில் 'ஹட்ச்'சின் பங்கும் கணிசமானது என்பதில் இவருக்குப் பெருமை.

'டெலிஃபோன் பில் எல்லாம் ஏறிப் போச்சு. இனிமே செல்ஃபோன் வாங்கிட வேண்டியதுதான்!' என்று அரசு ஊழியர்கள் கூடச் சொல்ல ஆரம்பித்துவிட்டதை செல்வகுமாரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது, "அந்த நிலைமை வரும் என்று நீங்கள் சொன்னால் அதை நான் நிச்சயம் ஏற்றுக் கொள்வேன். கையோடு ஒரு மொபைல் ஃபோன் இருப்பது என்பது, அளவற்ற சுதந்தரத்தைக் கையோடு வைத்திருப்பது போல அல்லவா?" என்று புன்னகை செய்கிறார்.

"உங்கள் இலக்கு என்ன?"

"சென்ற வருடத்தைப் பார்க்கும்போது இந்த வருடம் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. எல்லாக் கணிப்புகளும் கூடுதலான எண்ணிக்கையைத்தான் காண்பிக்கின்றன. வீடுகளில் ஒருவருக்கு ஒரு செல்ஃபோன் இருப்பது மாறி, ஒரே வீட்டிலேயே பல செல்ஃபோன்கள் வாங்கும் காலம் வரும் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அதைப் பொறுத்து என் இலக்கும் அமையும்!"

- கீதா நாயர் / சித்தார்த்



"என் வீட்டுக்காரி என்னுங்கிறதுக்கு முன்னாடி எண்ணெயாய் நிற்கிற டைப், தெரிஞ்சுக்க..."

"இதென்ன பிரமாதம், என் ஒய்ஃப் மெகா சீரியல் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே அழ ஆரம்பிக்கிற டைப், புரிஞ்சுக்க!"

- வெ. ராஜாராமன்

உலகத்தைச் சுற்றி ஓர் உப்புச்சுவர்!





உலகம் உருவானபோது இருந்த ஆதி சமுத்திரத்தின் உப்பின் அளவு, இப்போது உள்ளதைப் போல் ஒன்றரை முதல் இரண்டு பங்கு அளவாக இருந்திருக்க வேண்டும் என்று இப்போதைய ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

உயிரினங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான 'செல்லுலர் மெம்ப்ரேன்' எனப்படும் சவ்வுப் பொருள்கள், உப்பான கடல் நீரில் உருவாவதை விட, நல்ல நீரிலேயே எளிதாக உருவாகின்றன. 'ஃபாஸில்' எனப்படும் பண்டைக் கால உயிரினப் படிவுகள் கூட, நல்ல நீரில் உருவானவையாக இருக்க வேண்டும் என்கிறார்கள்.

இதன்படி பார்த்தால், இப்போதைய உப்பின் அளவை விட, இரண்டு மடங்கு அதிகமான உப்புத் தன்மையுடைய கடல் நீரில் நம்முடைய 'முன்னோர்கள்' பிறந்து வந்திருக்க முடியுமா? - இது இப்போதைய கேள்வி.

டி.என்.ஏ என்று சொல்கிறோமே, இவற்றுக்கு முப்பாட்டன்களுக்கு முப்பாட்டன்களான, ஒருவகைப் பட்ட அணுக்களை மையக் கருவாய்க் கொண்டு, சிறு சிறு கொப்புளங்கள் போல்தான் முதல் உயிரினங்கள் உருவாயின என்கிறார்கள். இதை 'வெஸிகிள்' (Vesicle) என்பார்கள்.

இவை ஆழ்கடல் பகுதியில்தான் முதலில் உருப் பெற்றன என்று நம்பினார்கள். இந்தக் கொள்கை சரியானதல்ல என்று இப்போது சொல்கிறார்கள். கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்து விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சியில், அந்த மாதிரியான உயிர்க் கொப்புளங்களை (வெஸிகிள்) உப்புத் தன்மையற்ற நல்ல நீரிலேயே உருவாக்கி வெற்றி கண்டிருக்கிறார்கள்.

கடல் நீரின் உப்புத் தன்மையும் எல்லா இடத்திலும் ஒரே சீராக இருப்பதில்லை. செங்கடல், மத்திய தரைக் கடல் போன்ற குறுகலான கடற்பகுதிகளில் உப்பின் அடர்த்தி கூடுதலாக இருக்கிறது. பரவலான கடற்பகுதியில் உப்பின் அளவு மூன்று, மூன்றரை சதவிகிதம்தான்.

உலகின் பல இடங்களில் காணப்படுகின்ற உப்புப் பாறைப் படிவங்கள் எல்லாம், அந்தப் பகுதிகளில் இருந்த கடல் நீர் ஆவியாகிக் கெட்டிப்பட்டதால் உருவானவை என்கிறார்கள்.

உலக அளவில் பெரும்பான்மையான சாப்பாட்டு உப்பு, உப்பு பாறைகளிலிருந்தே பெறப் படுகின்றன. வயல்களில் கடல் நீரைத் தேக்கி உலர வைக்கும் முறை எல்லா இடங்களிலும் இல்லை.

கடல் எல்லாம் வற்றி உலர்ந்து போனால் கிடைக்கக்கூடிய உப்பின் அளவைப் பற்றி ஒரு கணக்குச் சொல்வார்கள். பூமத்திய ரேகையைச் சுற்றி ஒரு சுவர் எழுப்பக் கூடிய அளவுக்கு உப்பு கிடைக்குமாம்! இந்தச் சுவரின் உயரம் 290 கி.மீ; அகலம் ஒன்றரைக் கி.மீ! இப்போது கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!

— பாலு

அடையாளங்கள்

சித்தமங்கலம் கிராமத்தை விட்டுச் சீக்கிரமே நகரத்துக்கு இடம் பெயர வேண்டிய அவசியம் ஏற்பட்டது அவனுக்கு. அவன் சார்ந்திருந்த கட்சிக்கு அரசியல் செல்வாக்கு கூடிக் கொண்டே போய்ச் சற்றும் எதிர்பாராத நேரத்தில் ஆட்சிப் பொறுப்பு அவன் தலைவருக்குச் சுமையாக வந்து சேர்ந்தது.



"இவ்வளவு சீக்கிரத்தில் ஜனங்கள் மாறி விடுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. எல்லாமே சொந்த பலத்தால் கிடைத்து விடாமல், எதிராளியின் பலவீனத்தாலேயே சுலபமாய்க் கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே வந்து விடுகிறது" என்று தனக்கே உரிய கலையழகோடு தலைவர் கட்சி ஏட்டில் எழுதினார். அப்படி அவர் எழுதியதையும், பேசியதையும் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களில் பலர் விரும்பவில்லை. அந்தக் கட்சிக்காரர்கள் கடுமையான உழைப்பாளிகள். ஆட்சி அதிகாரம் தங்கள் கரங்களில் வந்து விழப் போகிறது, என்று கனவு கூடக் காண முடியாத காலத்தில் அவர்கள் கட்சியின் வேரானார்கள். வேருக்கு நீர் ஆனார்கள். சொந்தப் பணத்தில் கொடி மரம் வைத்துக் கூட்டங்கள் போட்டுச் சின்னச் சின்ன ஊர்களில் எல்லாம் கட்சியை வளர்த்தார்கள்.

அவனுடைய நண்பன் ஒருவன் கட்சிப் பத்திரிகைகளைக் காட்சிப்படுத்துவதற்காகவே பெட்டிக் கடை வைத்து பீடி சிகரெட் எல்லாம் விற்றான். தேச சுதந்திரப் போராட்டங்களைப் பற்றிக் கதை கதையாய்ப் பேசுகிறவர்கள், தேசம் விடுதலை பெற்ற பிறகும் சொந்தப் பிரச்னைகள் உருவாகும் என்பதை நம்பவும் இல்லை. எடுத்துச் சொன்ன அறிஞர்களை ஓரங்கட்டவும் தயங்கவில்லை.

ஆனால் அவனுடைய கட்சியும், தலைவர்களும் புதிய பிரச்னைகள் இருப்பதைத் துணிவோடு எடுத்துச் சொன்னார்கள். நிறைய எழுதியும், பேசியும், படித்த வர்க்கத்தில் கணிசமான பேர்களைத் தங்கள் பக்கம் சேர்ப்பது அவர்களுக்குச் சுலபமாக இருந்தது. அநேகமாக, கட்சியில் முக்கியத் தலைவர்களெல்லாம் ஆளுக்கு ஒரு பத்திரிகை நடத்தி வந்தார்கள். அந்தப் பத்திரிகைகளை வாங்குவதைத் தொண்டர்கள் ஒரு தனியான கௌரவமாய்க் கருதினார்கள்.

சுதந்திரம் வாங்கிக் கொடுத்தோம் நாங்கள், என்று மட்டும் சொல்லிக் கொண்டு யார் யாரெல்லாமோ அரசியலுக்கு வந்து விட்டதால், இந்த இளைஞர்களின் பேச்சும்,

3 மினி தொடர்

எழுத்தும் கனலாகப் பரவி ஆட்சியாளர்களைச் சுட்டன. 'சும்மாத் தெருவுல நின்னு சத்தம் போடாதே. எலக்‌ஷன்ல ஜெயிச்சு அசம்பிளிக்கு வா. அப்புறம் பார்க்கலாம்'



என்று சிலர் சீண்டி விட்டு, உசுப்பி விட்டதன் விளைவு, இவர்கள் படிப்படியாக ஆட்சி அரசியலுக்கு வந்தார்கள். உண்மையில் சமூக சீர்திருத்தம், மொழி உரிமை என்று மட்டும் பேசிக் கொண்டிருந்தவர்களைச் சீண்டாமலிருந்திருந்தால், இன்னும் ஓர் ஐம்பது ஆண்டுகளுக்காவது 'சுதந்திரம் வாங்கித் தந்த' கட்சியே ஆண்டு கொண்டிருந்திருக்கும்.

இப்படி ஒரு விபத்தின் விளைவாக ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. போன நூற்றாண்டின் ஐம்பதுகளின் வரலாறு.

நகரத்துக்கு வந்த அவனுக்குப் புதிய வேலையாகக் கட்சியே தலைமை அலுவலகத்தில் இடம் தந்தது. தேர்தல் நேரங்களில் அவனுடைய கூர்மையான எழுத்தும், ஆவேசமான பேச்சுக்களும் 'இவன் இருக்க வேண்டிய இடம் இதுதான்' என்று தலைவரை முடிவு செய்ய வைத்தன.

ஆட்சி அரசியலில் அவனுக்கு நாட்டமில்லை என்பதை அவன் தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருந்தான். 'கட்சி வளர்ச்சிக்கு மட்டும் நான் பயன்பட்டால் போதும்' என்கிற அவனுடைய தீர்மானம், அவனை உயிராக நேசித்த தொண்டர்களுக்கும் சொல்ல முடியாத வேதனையை உண்டாக்கியது.

அவனுடைய பிடிவாத குணம், யாருக்காகவும் வளைந்து கொடுக்காத தன்மை, எல்லாவற்றையும் பற்றி நன்கு அறிந்த மேல்மட்டத் தலைவர்களும், அவனுக்கு அரசாங்கப் பதவி தராததே நல்லது, என்று திருப்திப்பட்டார்கள். எல்லோரையும் விடத் தலைவருக்கே அவனைப் பற்றி நன்கு தெரியுமே!

தொடர்ந்து வந்த ஆண்டுகளில்,

சுப்ர. பாலன்

பதவி ஆசை, போட்டி பொறாமைகள், எதிர்த்தரப்பாரின் சூழ்ச்சிகள் எல்லாவற்றிலும் கட்சிக்குச் சோதனைகள் வந்தன. விழுவதும், மீண்டும் எழுவதும் தோல்விகளை வெற்றியாக்கிக் கொள்வதும், அவர்களுக்குச் சுலபமான ஒன்றாகவே இருந்தது. அடிப்படைக் காரணம், அழகாக வேர் பிடித்திருந்த தொண்டர் பலம்தான் என்பதை எதிரணியினர் புரிந்து கொள்ளவே நீண்ட காலமாயிற்று. அப்படியும் அந்த மாதிரியான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க முயலாமல், நாலாந்தர அரசியலிலேயே நம்பிக்கை வைத்துத் தோற்றுப் போனார்கள். அந்தக் கட்சிக்கு இணையாகத் தொண்டர்



"இடைத் தேர்தலில் நம் தோல்விக்கு என்னப்பா காரணம்?"

பலம் உள்ள வேறு கட்சி, இந்தியா முழுவதுமே இல்லை என்கிற நிலையை உருவாக்கிக் காட்டினார்கள்.

கட்சி அலுவலகத்தில் பழைய நாளேட்டுத் தொகுதிகளைப் பக்கம் பக்கமாக, பத்திரமாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டு, ஒரு பதினைந்து ஆண்டுக்கால நினைவுகளையும் அசைபோட்டுக் கொண்டிருந்தான் அவன்.

வீட்டிலிருந்து அவசரமாக ஆள் வந்திருப்பதாக அவனுடைய உதவியாளர் வந்து சொன்னார். "என்ன?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தான்.

குழந்தைக்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும், மனைவியும் குழந்தையும் அவசரமாக மருத்துவமனைக்குப் போயிருப்பதாகவும் தம்பி ஓடி வந்து சொன்னான். "உடனே ஆசுபத்திரிக்கு வா அண்ணே. அண்ணி ரொம்பக் கவலையா அழுதுக்கிட்டிருக்கு..." என்று அவசரப்படுத்தினான்.

அதே நேரத்தில் தலைவரிடமிருந்து அவசரமான தொலைபேசி அழைப்பும் வந்தது. மறுநாள் காலையில் சட்டமன்றத்தில் ஒரு பிரச்னை வரும் என்று எதிர்பார்க்கப் படுவதால், அது பற்றிப் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற விவாதங்களின் கருத்தைக் கேட்டார் தலைவர். மாநிலத்தின் முதலமைச்சர் என்றாலும் அவனுக்கு அவர் தலைவர் மட்டும்தான்!

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே வழிதான். குழந்தையின் உடம்பு அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. குளிரினாலோ, காய்ச்சல் வேகத்திலோ குழந்தைக்குத் தூக்கித் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தது. மருத்துவமனைச் செவிலியர்கள் குழந்தையின் நெற்றியில் பட்டையாய்க் குளிர்நீரில் அமிழ்த்திப் பிழிந்த துணியைப் பரவிப் பரவிச் சூடுபோக்க முயன்று கொண்டிருந்தார்கள் :

கண்களை மூடித் தியானத்தில் இருப்பது போலச் சில விநாடிகள் முயன்று பார்த்தாலும், அவனால் அப்படியெல்லாம் இருக்க முடியவில்லை. சுவரில் மாட்டியிருந்த ஒரு நாள்காட்டித் தாளில் மட்டும் இயேசுபிரான் வலக்கரம் உயர்த்திப் புன்னகை செய்து கொண்டிருந்தார். 'நானிருக்கிறேன், உனக்கென்ன பயம்?' என்று கேட்பது போல் அவனுக்குத் தோன்றியது.

"அண்ணி! அவருக்கு அவசரமான வேலை ஒண்ணு வந்திருச்சு. நான் போயிருந்தப்பத்தான் தலைவருகிட்டேயிருந்து போன் வந்துச்சு. அதை முடிச்சுக் குடுத்துட்டு வாரம்னு சொல்லிச்சு அண்ணன்..."

அவள் எதிர்பார்த்த நிகழ்வுதான். திக்கற்ற நிலை என்று சொல்ல முடியாது. இன்னாரின் மனைவி என்பது தெரியுமாதலால், மருத்துவமனையில் சிறப்பாகவே கவனித்துக் கொண்டார்கள். தவிரவும், பொதுத் தொண்டுக்காகவே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு செயல்படுகிற ஓர் அமைப்பின் நிர்வாகத்தில் இயங்குகிற மருத்துமவனை அது என்பதால் தனிப்பட்ட சிபாரிசுகள், கவனிப்புக்கள் என்பனவும் அங்கு அநாவசியம்தான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

அவனுடைய கட்சி ஈடுபாடுதான் முதன்மையானது. அப்புறம்தான் வீடு, மனைவி, மக்கள் என்பனவெல்லாம்.

குழந்தை முனகலை நிறுத்திவிட்டுச் சற்றே கண்ணயரத் தொடங்கியிருந்தது. மருந்தின் வேகம் காரணமாகவும் இருக்கலாம். குழந்தையைக் கவனித்துக் கொண்டிருந்த செவிலிப் பெண், முதன்மை மருத்துவர் வருகிற நேரம் என்று சொல்லிக் கோதையைச் சற்று வெளியே சென்று அமருமாறு கேட்டுக் கொண்டாள்.

"அண்ணி! காப்பி எதுனாச்சும் வாங்கியாரட்டா. ரொம்ப நேரமா ஒண்ணுமே சாப்பிடல்லியே..." என்று கேட்டுக் கொண்டே, பிளாஸ்கை எடுக்க உள்ளே போனான் மாணிக்கம். அதற்குள் 'பெரிய டாக்டர்' வருகிற சலசலப்பு எழவே, அவன் வெளியிலேயே நின்று விட்டான். டாக்டர் உள்ளே போய்க் குழந்தையையும், சோதனைத் தாளை

யும் பார்வையிட்டு விட்டு வெளியே வந்த போது கோதை எழுந்து நின்றாள். உடன் வந்தவர்கள் ஆங்கிலத்தில் என்னவோ சொல்லி, அவளை டாக்டருக்கு அறிமுகப் படுத்தினார்கள். அவர் மௌனமாகப் புன்னகை செய்து, அவளுடைய கைகூப்பிய வணக்கத்தை ஏற்றுக் கொண்டு விரைந்தார்.

டாக்டர் சென்றதும், கோதை மீண்டும் உள்ளே சென்று குழந்தையின் அருகே அமர்ந்து கொண்டாள். புதிதாக ஒரு கூடுதல் ஊசி மருந்து செலுத்தப்பட்ட போது குழந்தை சற்றுச் சிணுங்கி விட்டு, மறுபடியும் உறங்கிப் போனது. மாணிக்கம் வாங்கி வந்த காப்பியை மட்டும் வாங்கி, ஒரே மடக்கில் பருகி விட்டுக் கோப்பையை அவனிடம் தந்தாள்.

"தம்பி! நீ வேணா வீட்டுக்குப் போயி அம்மாவுக்குத் துணைக்கி இருந்துட்டுக் காலையில வாயேன். உன் அண்ணன் எப்படியும் வந்துருவாரு. நீ போ..." என்று அவனை வீட்டுக்கு அனுப்ப முயன்றாள். அவன் அதற்கு இசையவில்லை.

"இல்லே அண்ணி! அம்மாவுக்கு ஒண்ணும் பயமில்லே. பார்த்துக்குவாங்க. நா இங்கேயே கெடக்கேன்" என்று சொல்லி விட்டு, வராண்டாவுக்கு வேடிக்கை பார்க்கப் போனான்.

"ஆரத்தி எடுத்த பெண்களுக்குத் தட்டில் ஒரு ரூபாயைப் போட்ட உங்க கஞ்சத்தனம்தான் தலைவரே!"

- உ. ராஜாஜி.

அந்த நேரத்திலும் அவளுக்கு மாணிக்கம் பயலின் மேல்தான் பரிவு உண்டானது. அண்ணனைப் போல் படிப்பு, உலக அறிவு எதுவும் அவனுக்கு ஏறவில்லை. வயசும் இருபத்தைந்து ஆகப் போகிறது. இன்னும் சின்னக் குழந்தை மாதிரி யார் என்ன சொன்னாலும், ஓடி ஓடிச் செய்து கொண்டிருப்பதே அவனுக்குச் சந்தோஷமானதாக இருக்கிறது. அண்ணனோ யாரைப் பற்றியும் கவலைப்படுகிற ஜன்மா இல்லை. இவனுடைய எதிர்காலம்? இப்படியெல்லாம் சிந்தனை ஓடியது.

உட்கார்ந்தபடியே கோதை சற்றுக் கண்ணயர்ந்து இருக்க வேண்டும். தன்னை யாரோ தொடுவதை உணர்ந்து சட்டென்று எழுந்தாள். அவன்தான் வந்திருந்தான்.

"இப்ப எப்படியிருக்கு? நல்லாத் தூங்குதுன்னு நர்ஸ் சொன்னாங்களே. நீ எதுக்கும் கவலைப்பட்டுக் கலங்காதேம்மா. டாக்டருங்க பார்த்துப்பாங்க. எனக்கு இன்னும் ரெண்டு மூணு மணி நேரம் வேலை கிடக்கு. அத்தெ முடிச்சுக் குடுத்துட்டு வந்திடறேன். அதான், தம்பி, ஒங்கூட இருக்கான்ல?" என்று கேட்டுவிட்டுக் கடிகாரம் பார்த்தான். அப்போதே இரவு பதினோரு மணிக்கு மேல் ஆகியிருந்தது. அவன் கணக்குப்படியே எல்லாம் நடந்தாலும் இரண்டு மணி, மூன்று மணி என்று ஆகிவிடும்.

"நான் இங்கேயிருந்து என்ன செய்யப் போறேன். டாக்டருங்க எல்லாம் பார்த்துக்குவாக. நீ கவலைப்படாமெ இருந்துக்க.." என்று சொல்லிவிட்டு ஒருவிதமான தயக்கத்தோடு அந்த அறையை விட்டு வெளியே வந்தான்.

அடுத்த நாள் காலைப் பொழுது நல்லபடியாகப் புலரவேண்டுமே என்று வேண்டிக் கொள்ளத்தான் முடிந்தது கோதையால். நல்லபடியாகப் பொழுது விடிந்தது மட்டுமில்லாமல், குழந்தையை வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்றும் சொல்லி விட்டார் டாக்டர். அப்போதுதான் தன்னுடைய வேலைகளிலிருந்து விடுபட்டு வந்தான் அவன்.

அப்படி அவன் வந்தானே என்கிற சந்தோஷமும் இல்லை; வராமலிருந்திருந்தால் அவள் வேதனைப்பட்டிருக்கப் போவதும் இல்லை. இதுவேதான் அவனுடைய வாழ்க்கை முறை என்பதைக் கோதை வெகு நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாள். அந்தக் குழந்தைதான் செந்தமிழ். அவளும் வளர்ந்து நன்றாகப் படித்துப் பெரிய பெண்ணாகி, மிகவும் எளிய முறையில் திருமணமும் நடந்து - இப்போது அவளுக்கும் இரண்டு குழந்தைகள். இனிமையானதொரு சங்கிலி வளையம்தானே வாழ்க்கை, என்பதை அவனை விடவும் அவளே நன்றாய்ப் புரிந்து கொண்டாள்.



(தொடரும்)

புத்தம் புதுசு!




ஆரோக்கியமான சமையலுக்கு உதவும் நிர்லெப் நான்ஸ்டிக் சமையல் பாத்திரங்கள் இல்லத்தரசிகளுக்கு இனிய வரமாகும். இவ்வகைப் பாத்திரங்களில், எண்ணெய் எரிபொருள் சிக்கனம் மட்டுமல்ல, உணவுப் பொருள்களின் சத்தையும் ஆவியாகாமல் பாதுகாக்க முடிகிறது. சமைத்தபின் இந்தப் பாத்திரங்களை எளிதாகச் சுத்தம் செய்துவிட முடியும் என்பதால், பெண்கள் நிர்லெப் நான்ஸ்டிக் பாத்திரங்களையே விரும்புகிறார்கள்.



சமையல் எரிவாயுவை மிச்சப்படுத்தும் இந்த 'கேஸ்+' கருவியை, இந்தியன் யோகி நிறுவனம் தயாரித்து விற்பனை செய்கிறது. கேஸ் கார்களில் 'கேஸ்+' பயன்படுத்தினால், கூடுதல் மைலேஜ் கிடைக்கும் என்கிறார்கள். ஒரு வருட உத்திரவாதம் உடையது. பத்து வருடம் உழைக்கக் கூடியது. விலை. 240/- மட்டும்.

ஜி.கே. சுந்தர்ராஜன், இனெட் டிஜிடெல் சிஸ்டம்ஸ், திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41

இந்தியாவின் பிரபல விற்பனை நிறுவனமான மோடிகேர், 'ஃப்ரூட் ஆஃப் தி எர்த்' என்ற பெயரில் சரும மற்றும் கேச பராமரிப்புப் பொருள்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அரோமாதெரபியின் மூலக் கோட்பாடுகளோடு ஆயுர்வேதத்தை இணைத்துத் தயாரிக்கப்பட்ட ஜெல், ஸ்கிரப், ஷாம்பூ மற்றும் கண்டிஷனர் அழகு சாதனங்கள் இயற்கையான அழகைத் தந்து புதுப் பொலிவு தருகின்றன.



வாழ்வில் வரும் சுபகாரியங்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் அழைப்பிதழ்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ரசனைக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ற



அழகிய அழைப்பிதழ்களை 'மாத்ரா கார்ட்ஸ்' விற்பனை செய்கிறது. பல ரகங்களில், உன்னதத் தரத்துடன் வடிவமைக்கப்பட்ட 'மாத்ரா கார்ட்ஸ்' பட்ஜெட்டுக்குள்ளும் அடங்குவது முக்கிய சிறப்பம்சம்.

மாத்ரா கார்ட்ஸ் - பு.எண்.361. பைகிராஃப்ட்ஸ் சாலை, சென்னை - 14.

ஜிலு ஜிலு எஞ்சின்!


இதுவரை பயணிகளின் வசதிகளை மட்டுமே அவ்வப்போது பரிசீலித்து வந்த ரயில்வே நிர்வாகம், இப்போது ஆயிரக் கணக்கான பயணிகளின் உயிருக்குப் பொறுப்பான என்ஜின் ஓட்டுனர்களையும் கொஞ்சம் கரிசனத்துடன் பார்த்துள்ளது. ஆம்! இனி மெயில், எக்ஸ்பிரஸ் ரயில் என் ஜின்கள் குளிர்ச்சாதன வசதி செய்யப்பட இருக்கிறதாம். "இந்த ஜிலு, ஜிலு செய்தி ஓட்டுனர்களைக் குஷிப்படுத்தியிருக்குமே" என்று சென்ட்ரல் ரயில் நிலையத்தில் புறப் படத் தயார் நிலையில் இருந்த சில ஓட்டு னர்களின் வாயைக் கிண்டினோம். அவர்கள் உஷ்ணத்துடன் பொரிந்து விட்டார்கள்.

"ஒரு காலத்தில் எங்களுக்கு உட்கார ஸீட் கூடக் கிடையாது. அதற்கே போராட





வேண்டியதாகி விட்டது. உங்களுக்கு எல்லா (?) வசதிகளும் செய்து தரும் நிர் வாகம், எங்களைப் புறக்கணிக்கிறது. என் ஜினில் எந்தவிதமான அடிப்படை வசதியும் கிடையாது. சென்னையிலிருந்து கிளம் பினால், ஆறரை மணி நேரம் தொடர்ந்து குறிப்பிட்ட வேகத்தில் ஓட்டினால் தான் விஜயவாடாவை அடைய முடியும். ஆனால் அதற்குள் அவனுக்கு ஏதாவது இயற்கை



ராகிங் பிரச்னையைத் தவிர்ப்பதற்காக, கோவையில் உள்ள அங்கப்பா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு கல்லூரி மாணவர்களுக்கும், இரண்டு, மூன்றாம் ஆண்டு கல்லூரி மாணவர்களுக்கும் கல்லூரி நேரம் ஒரு மணி நேரம் வித்தியாசமாக வைத்துள்ளார்கள்.

- சுந்தர் சுந்தரி

கொள்கைக்குத் தோல்வி!

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர் தத்துவ ஞானி புரோடகோரஸ். அவர், 'எல்லாம் பொய்! உண்மை என்று எதுவுமே இல்லை!' என்று கூறினார். அவர் கருத்தை ஏற்க மறுத்த அரிஸ்டாட்டில், ''உங்கள் கொள்கை உண்மையா? பொய்யா? பொய் என்றால் உலகில் உண்மை இருக்கிறது என்று பொருள். உங்கள் கொள்கை உண்மை என்றால் உலகத்தில் உங்கள் கொள்கையாவது உண்மையாகவே இருக்கிறது என்பது புலனாகும். அப்போது 'உலகில் உண்மையே இல்லை என்னும் உங்கள் கொள்கை தோற்கிறது. எப்படிப் பார்த்தாலும் உங்கள் கொள்கைக்கு தோல்விதான்' என்று கூறி வெற்றி பெற்றார்.



- எம். ஜரிகாபானு

உபாதை வந்தால்கூட அம்பேல்தான்! ரயிலை நிறுத்தி 'போக' முடியுமா? குடிதண்ணீர் வசதியும் கிடையாது. சிவப்பு விளக்கைத் தாண்டி, ஓர் அடி தள்ளி நிறுத்தினாலும், கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். பணி நேரம் முழுவதும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இதனால் ஏற்படும் மன அழுத்தம் உடலை மிக பாதிக்கும். இந்த நிலையில் ஏ.ஸி. என்ஜின் போடப் போவதாகச் சொல்கிறது நிர்வாகம். எங்களுக்குத் தேவையோ இல்லையோ, என்ஜினில் உள்ள நுட்பமான மின்சார சாதனங்களுக்குக் கட்டாயம் ஏ.ஸி. தேவை. ஏனென்றால் ஒரு நாள் நாற்பத்தைந்து டிகிரி சென்டிகிரேட்டில் ஆந்திரா பக்கம் செல்லும் என்ஜின், அடுத்த நாள் இருபது டிகிரி வெப்ப நிலை உள்ள கேரளா பக்கம் செல்லக்கூடும். இந்த மாறுபட்ட வெப்பநிலை மின் சாதனங்களைச் செயல் இழக்கச் செய்யும். எனவே ஏ.ஸி. அவசியம். என்ஜினுக்கு இந்த அடிப்படையில்தான் ஏ.ஸி. போடுகிறார்களோ என்னவோ?" என்கிறார்கள் ஓட்டுனர்கள்.

பாலக்காடு மற்றும் ஈரோடு பக்கம் ஏ.ஸி. பொருத்திய ரயில் என்ஜின் ஓடுவதாக நம்மிடம் சொன்னார் தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆனந்த்.

"தென் இந்தியாவிலேயே அது போன்ற ஏ.ஸி. என்ஜின்கள் எங்கும் ஓட்டப்படவில்லை" என்கிறார் ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளர் கன்னையா!

"ரயில் ஓட்டுனர்களின் பிரச்னைகள் குறித்து நிர்வாகம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் நிறையவே இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சரக்கு ரயில் ஓட்டுனர்கள் சபிக்கப்பட்டவர்கள். அவர்கள் டூட்டி எப்போது முடியும் என்று அவர்களுக்கே தெரியாது. இந்த நிலையில், அவர்கள் சென்று வருகின்ற தூரத்திற்கு ஏற்ப அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த அலவன்ஸ், அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே குறிப்பிட்ட தூரம் ஓட்ட வாய்ப்புக் கிடைக்காத ஓட்டுனர்களுக்கு மாதச் சம்பளத்தில் வெட்டு விழுகிறது. இதை மாற்ற வேண்டுமென்பது எங்கள் நீண்ட கால கோரிக்கை. ஓட்டுனர்களின் வசதிக்கு என்ஜின் ஏ.ஸி. செய்ய வேண்டியதுதான்; அத்துடன் அவர்களின் அடிப்படை பிரச்னைகளும் கவனிக்கப்பட வேண்டும்'' என்கிறார் கன்னையா.

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: ராஜன்

அருள்மழை பொழியும் திருஅண்ணாமலையில் சித்ரா பௌர்ணமியன்று

சிவமடத்தில் தீபமேற்றி அன்னதானம் செய்ய அழைக்கிறோம் !

பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

ஆன்மீக அன்னதான அறக்கட்டளையில் ஆறாம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை !

- இமயமலையை விட காலத்தால் மூத்ததாகும் தெய்வத்திருமலையான தீபத்திரு அண்ணாமலை. ஒளி ஒன்றே கண்கண்ட கடவுளின் வடிவம் என்பதை உணர்த்தும் ஆதித் திருத்தலமாக விளங்குவது திருஅண்ணாமலை. திருஅண்ணாமலையாரை 14 கி.மீ. வலம் வந்தால் ஈரேழு 14 லோகங்களையும் சுற்றிய பலன் தரும் திருத்தலம் திருஅண்ணாமலை ஒன்றே ஆகும். இத்தனை சிறப்பு வாய்ந்த திருஅண்ணாமலையில் கிரிவலம் வரும் இறைஅடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண் பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அடி அண்ணாமலையில் உள்ள சிவமடத்தில் அன்னதானம் சிறப்பான முறையில் செய்யப்படுகிறது. இந்தப்புனித அன்னதான இறைபணியில் பங்குகொண்டு தாங்களும் தங்கள் சந்ததியினரும் எல்லாம் வல்ல ஸ்ரீ உண்ணாமலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளையும் பெற இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் பௌர்ணமி அன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

❖ பிறந்தநாள் ❖ திருமண நாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற ❖ நல்ல வரன் அமைய ❖ புத்திர-பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு, மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வ சக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமை பெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்...


தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு. ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு. ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுககு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு. ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுககு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

*ரூ.5000 - அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று திரு அண்ணாமலையில் அன்னதானம் செய்து பத்து ஆண்டுகளுக்கு ஆன்மீகம் மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறை சிந்தனையோடு ரூ. 5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

*நன்கொடை அனுப்பும் சிவநேசச்செல்வர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust, Chennai - 4) என்ற பெயரில் Cheque / D. D/ M. O. மூலம் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம் தரும் இறைபணி சேவைகளாக "ஆன்மீக அன்னதான அறக்கட்டளை" ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரா

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Cherinai - 600 004.

TEL : 2495 9302, E-mail:siva siva @ vsnl.net



ஸ்ரீ உண்ணாமலையம்மன்

'ஆறும் ஆறும் ஆறுமாய்' என்று கணக்கைப் போட்டு எம்பெருமானின் பரதத்வத்தைக் காட்டினார் ஆழ்வார். வேதார்த்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், விசேஷ சாஸ்திர பாண்டித்யாதிகளெல்லாம் வேண்டும். அவ்வளவு சுலபமாக எல்லோருக்கும் அது புரியாது. ஏழை எளியவர் என்று ஒருவர் விடாமல் புரிந்து கொள்வதற்காக, வேதத்தையே மாற்றிக் கொடுத்தார்கள் மஹரிஷிகள், ஆழ்வாராதிகள்.


வேதார்த்தம் இவற்றில் இருப்பதால்தான் இவை பெருமையுறுகின்றன. வேத வான்மயத்தில் என்ன சொல்லப்பட்டதோ, அதைத்தான் மஹரிஷிகள் எல்லாம் கானம் பண்ணினார்கள். எம்பெருமானுடைய திருநாமங்கள் – குணப்ரயுக்தமான – குணங்களைச் சொல்லக் கூடிய திருநாமங்களை கானம் பண்ணினார்கள். இப்படி குணங்களைக் காட்டக் கூடிய நாம வைபவங்களை மஹரிஷிகள் பலபடியாக பல இடங்களில் கானம் பண்ணினார்கள். அவற்றையெல்லாம் ஆசார்ய சிரேஷ்டரான பீஷ்மாச்சார்யர் சேர்த்து நமக்கு ஆயிரம் நாமமாகக் கொடுத்தார். அத்தனை நாமங்கள்; ரிஷிகள் பலர் கானம் செய்த நாமங்கள் – இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது என்றால் – ஒரு கோர்வையாகத் தந்திருக்கிற பீஷ்மாச்சார்யாருடைய திருவடிவாரத்திலே நாம் ரொம்ப கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையி

குறையொன்றுமில்லை

னால் சஹஸ்ரநாமம் சொல்கிறபோது, அதைச் சொன்னவரின் பிரபாவமும் நாம் நினைக்கத்தக்கது. அந்தத் திருநாமங்களைச் சொல்லி எம்பெருமான் வாசுதேவனுடைய திருவடியை அடைந்து, உயர்ந்த கதியைப் பெற்றார் அவர்.

நாமும் அப்படி இருக்க வேண்டும். பீஷ்மாச்சார்யரைப் போல் – அதாவது நமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை முடித்தவர்களாக, மகாபிரயாணத்தின்போது 'நிர்பரோ நிர்பயோஸ்மி' என்று மார்பில் கை வைத்துக் கொண்டு ஒரு சிந்தையில்லாமல் படுத்திருக்க வேண்டும்.

அந்த மாதிரி இருக்க முடியுமா இந்த உலகத்திலே...? ரொம்ப கஷ்டம்! அந்திம காலத்தில் எம்பெருமானை நினைத்து அவன் திருவடியையே தியானம் பண்ணிக் கொண்டு – இரு இணையடிகள் – அந்த இணையடிகளையே சிரஸிலே தரித்துக் கொண்டு, அமிர்தமயமான கடலில் மூழ்கி, அந்த எம்பெருமானை தியானம் பண்ணிக் கொண்டே, அவன் திருவடியை அடைய வேண்டும். – இது எத்தனை பேருக்கு முடியும்? ஆகையினால்தான் பீஷ்மர் அனுஷ்டித்த முறையை நாமும் அனுஷ்டிக்க வேண்டும் என்றது. அவர் காட்டிய வழியை நாமும் அனுஷ்டித்தோமானால், உயர்ந்த அந்த நிலையை நாமும் அடைய முடியும். நமக்கு எம்பெருமான் அருள் புரிவான். இவர் அவர் என்று பாராது, எவர்க்கும் அருள் செய்பவன் அவன் என்ற காரணத்தினாலே, திடமான பக்தி நமக்கு எம்பெருமானிடத்திலே இருந்ததானால், போதும். பீஷ்மாச்சார்யார் முன் அவனே


32

நேரில் வந்தான் அந்திமக் காலத்திலே – அந்த எம்பெருமானைத் திருவடியிலிருந்து திருமுடி வரை தரிசித்துத் தோத்திரம் பண்ணுகிறார் பீஷ்மாச்சார்யார். க்ருத க்ருத்யரானதனாலே அவருக்கு அந்திமக் காலத்திலே பகவான் தானே வந்து சேவை கொடுக்கிறான்.

சாஸ்திர ரீதியாக ஆராய்ந்து பார்த்தால், இதற்கு ஒரு கதை உண்டு. காஞ்சிபுரத்திலே தேவாதிராஜன் இருக்கிறானே... அவனுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் – பக்கத்திலே நின்று கொண்டு வீசுறுகிற பணி ஒருத்தர் செய்கிறார். திருக்கச்சி நம்பி என்று அவருக்குப் பெயர். அந்தத் திருக்கச்சி நம்பியோடு வரதராஜன் – எம்பெருமான் பேசுகிறான். மிகப் பிரசித்தமான ஆறு வார்த்தைகள் என்று கொண்டாடப்படுகின்றன அவன் பேசிய வார்த்தைகள். அந்த ஆறு வார்த்தையிலே ஒரு வார்த்தை, முக்கியமான வார்த்தை: 'அந்திமக் காலத்திலே 'பகவத் ஸ்ம்ருதி ஆவச்யகமில்லை' என்பது தான். அந்திமஸ்ம்ருதி வேண்டியதில்லை. பிராண வியோக காலத்திலே பகவான் சிந்தனை அவசியமில்லை!... பகவானே, தேவாதிராஜனே சொன்ன வார்த்தை இது.

ஆனால் சாஸ்திரங்களெல்லாம் என்ன சொல்கிறது...? அந்திம ஸ்ம்ருதி வேண்டும் என்கிறது.

அப்படியானால் அந்திம ஸ்ம்ருதி வேண்டுமா? வேண்டாமா?

அந்த வரதராஜன் சொன்ன விஷயம் என்னவென்றால், அந்திம ஸ்ம்ருதி யாருக்கு வேண்டும், அந்திம ஸ்ம்ருதி யாருக்கு வேண்டியதில்லை, என்பதிலேயே ஒரு சூட்சுமம் இருக்கிறது.

பக்தி யோகம் பண்ணுகிறவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் சிரமப்பட்டுத் தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டு அந்திம ஸ்ம்ருதியை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், அவன் திருவடியிலே சரணாகதி பண்ணியவர்கள் இருக்கிறார்களே... அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே மோக்ஷத்தில் இச்சையுடன் 'எம்பெருமானே! உன் திருவடியைப் பற்றி நிற்கிறேன்; நீதான் எனக்கு உபாயம், உபேயம். வழியும் நீதான்; அடையப்படுபவனும் நீயே' வேறு எந்த விதமான பிரதிப்பிரயோஜனமும் இல்லை. உன் திருவடியிலே நித்ய கைங்கர்யம் ஒன்றையே பிரார்த்திக்கிறேன். 'ஹே பிரபு! அருள வேண்டும்' என்று நாம் நல்ல முறையிலே பகவானிடத்தில் பிரார்த்தித்திருந்தால், சரணாகதி பண்ணியிருந்தால், அந்திம ஸ்ம்ருதி என்பது வேண்டியதில்லை என்கிறான் அந்த தேவாதிராஜன் 'அத்தகையவர்க்கு நானே அந்திம ஸ்ம்ருதியைக் கொடுத்து ஆட்கொள்வேன்; அவர்களை நானே வந்து அழைத்துக் கொண்டு போய் விடுவேன்' என்கிறான்.

அந்த எம்பெருமான், 'நானே வந்து அழைத்துக் கொண்டு போய்விடுவேன் என்று சொல்கிறான் பாருங்கள்... அந்த வாக்கிலே நமக்குப் பரிபூரண விச்வாசம் இருக்க வேண்டும். சரணாகதி பண்ணியவர்களுக்கு பகவானே அந்திம ஸ்ம்ருதியைக் கொடுப்பான் என்கிற விச்வாசம் இருந்தால் போதும். சுவப்ரயத்தனத்தினாலே அதைத் தேடிச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதில்லை.

– இதைத்தான் தேவாதிராஜன் திருக்கச்சி நம்பிக்குச் சொன்னான். சரணாகதி பண்ணிய பிரபன்னர்களுக்கு அந்திம ஸ்ம்ருதி வேண்டியதில்லை – அதை நானே கொடுக்கிறேன் – என்ற அர்த்தத்திலே பேசினான். பகவானே வந்து அந்த ஸ்ம்ருதி பலத்தைக் கொடுக்கிறான் என்றால் வேறென்ன வேண்டும்!

வராஹ சரம ஸ்லோகம் என்பதில் இரண்டு சுலோகங்கள் ரொம்ப முக்கியம்.

கிருஷ்ணாவதாரத்திலே ஒரு சரம

கிரிக்கெட் பாதி இஸ்லாம் பாதி!

ஐந்து வருடங்களுக்கு முன்னால் சென்னையில் நம் அணிக்கு எதிராய் 194 ரன் எடுத்து உலக சாதனை புரிந்த பாகிஸ்தான் வீரர் சயித் அன்வருக்கு என்னாச்சு?

ரன் மெஷினாய் விளையாடிக் கொண்டிருந்த அன்வர், சமீப காலமாய், ஆன்மீகத்தின் பக்கம் நாட்டம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார். 'இளைஞர்கள் சினிமா, விளையாட்டு போன்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து, அண்ணல் முகம்மது நபியின் கொள்கைகளைத் தெரிந்து கொள்வதிலும் அவற்றைப் பின்பற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்' என்று நாடு முழுக்க'

போய் வருகிறார்.

இந்த மாற்றத்துக்கான காரணம் சோகமானது. கடந்த 2001 செப்டெம்பரில் அன்வரின் ஒரே மகள் மூன்றரை வயது அட்ரா இறந்து போனாள். இந்த வருத்தத்தைத் தாள முடியாமல், முப்பத்து மூன்று வயது அன்வர் தன்னுடைய வாழ்நாளின் பிற்பகுதியை இஸ்லாம் மதத்தைப் பரப்புவதற்காக மட்டுமே செலவிடத் தீர்மானித்து விட்டார்.



— என். சொக்கன்

சுலோகம் உண்டு. ராமாவதாரத்திலேயும் ஒன்று அருளியிருக்கிறான். இவை எல்லாவற்றுக்குமே மூலம் இந்த வராஹ சரம ஸ்லோகம்தான். அதனால்தான் நம்மாழ்வார் 'ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்டதுவே' என்கிறார். திருவிருத்தம் என்கிற பிரபந்தத்திலே 'ஞானப்பிரானை, வராக மூர்த்தியைக் காட்டிலும் ஒரு நல்லது, ஆத்மாவுக்கு ஹிதத்தைப் பண்ணக் கூடிய ஒரு நல்லது, வேறொன்றும் நானறியேன்' என்கிறார்.

ஞானப்பிரான்தான் கோலவராகம். யக்ஞ வராகம், ஞானவராகம் என்றெல்லாம் பெயர் அவனுக்கு. அந்த வராக மூர்த்திதான் உயர்ந்தது என்று கொண்டாடுகிறார். அதே மாதிரி அந்தத் திருவாய்மொழி கடைசி பிரபந்தம் – அதை முடிக்கிறபோதும் –

'கோல வராகம் என்னாய்
நிலம் கோட்டிட வந்தாய்
நீலக் கடல் கடைந்தாய் – உனை
ஏற்று இனி போக்குவனோ!'

என்கிறார். உனைப் பெற்ற பிற்பாடு விட்டு விடுவேனா இனிமேல் நான்?...

சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். ஏனென்றால் அழகான வராகம். 'ஞான வராகம், கோட்டிடை கொண்டு எந்தாய்'– இப்படி அழைக்கிறார் பொய்கையாழ்வார். முதலாழ்வார் அவர். அவர் பேசுகிறார்; மூன்றடியால் உலகமெல்லாம் அளந்த த்ரிவிக்ரமாவதாரம் ரொம்பப் பெரிசு என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம் 'உலகத்தை அளக்க ஓர் அடியும் சாடுதைத்து' என்று எங்கெங்கோ திருவடியை நீட்ட வேண்டியதாகப் போய் விட்டது அவனுக்கு. அப்படி வளர்ந்து நின்றான். பெரிய உருக் கொண்டு திருவடியை நீட்டினான், இந்த உலகை அளப்பதற்கு.

ஆனால், அதே உலகமானது, 'வராகத் தெயிற்றைப் போதாவார் என்கொலோ, எந்தை அடிக்களவு போந்த படி!' என்பதற்கேற்ப அவனுடைய திருமுக மண்டலத்திலே அந்தக் கோரைப் பற்களுக்கிடையில் ஒரு அழுக்கு ஒட்டிக் கொண்டிருக்கிற மாதிரி இருந்தது! இந்த பூமியானதைத் தாங்கி நிற்கிறான் என்றால், அந்த வராக அவதாரம் பெரிதா? இந்தத் திரிவிக்ரம அவதாரம் பெரிதா?

'மகா வராஹ: ஸ்புடபத்ம லோசன:' என்றார் விஷ்ணு புராணத்திலே. குர்குர் ரென்று ஒலி எழுப்புகிறான் எம்பெருமான் வராஹ மூர்த்தி. அந்த த்வனியிலிருந்து ஸாம வேதம் ஒலிக்கிறது. அப்படி எம்பெருமான் நான்கு வேதங்களும் கால்களாக அமைய, சமஸ்த யக்ஞங்களும் அவன் திருமேனியிலே தென்படுகிறது. எல்லோரும் சேவிக்கிறார்கள். எல்லா மஹரிஷிகளும் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள்.

அப்படிப்பட்ட உயர்ந்த ரீதியிலே பிறந்த எம்பெருமான், பூமாதேவியை மீட்டு வெளியிலே கொண்டு வருகிறான். அப்போது அவள் சரணாகதி பண்ணினாள் பகவானிடத்திலே. சரணாகதி பண்ணி 'ஓ' வென்று அழுகிறாள்!

பகவான் பார்த்தான்... ஒரு மாதிரி ஹிரண்யாக்ஷனைக் கொன்று அவளை மீட்டு வெளியிலே எடுத்துக் கொண்டு வந்தால் சந்தோஷப்பட வேண்டுமா வேண்டாமா? கைப் பற்றித் தூக்கிவிட்ட அந்த எம்பெருமானைக் கொண்டாட வேண்டுமா வேண்டாமா? அதெல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரே அழுகை!

'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டான் எம்பெருமான். அதற்கு அவள் பதில் சொல்கிறாள்...

(வளரும்)



• குலுக்கை நிகழ்ச்சியில்

இந்தியக் கிரிக்கெட்டும் ரவீணாவும்!

மேட்டரில் விட்ட தவறுக்காக ஆசிரியரிடம் 'டோஸ்' வாங்கிக் கொண்டிருக்கும் போது வந்து சேர்ந்தது ஊர்க்குருவி.

'இந்த நேரத்துல வந்து தொலைச்சிருக்கே' என்று நொந்து கொண்டதைக் கண்டு கொள்ளாமல் கவிதை பேசியது.

"இருக்கிற கவிஞர்கள் இம்சை போதாதுன்னு நீ வேறயா?" என்று நாம் ஆரம்பிக்க, "எங்கோ உள்ள கோபத்தையெல்லாம் என் மேல காட்டதப்பா... நான் ஒரு கவிதை கருத்தரங்குக்குப் போய்ட்டு வந்தேனா... அதான்..." என்றது.

"கவிதை கருத்தரங்கா? எங்க?"

"செங்கல்பட்டு பக்கத்துல தண்டரைன்னு ஒரு கிராமம். அந்தக் கிராமத்துக்குள்ள தனியா காடு மாதிரி இருக்கு. இருளர் பெண்கள் ஆய்வு மையம். அந்த மையத்துலதான்..."

"அங்கயா?"

"ஆமாப்பா. வழக்கமா சென்னையில ஏதாவதொரு ரூமுக்குள்ள பேசறதுதான் வழக்கம். அதை மாற்றலாமேன்னுதான், இயற்கையான சூழல்ல ஏற்பாடு செய்தது குலுக்கை அமைப்பு."

"குலுக்கையா?"

"குலுக்கை கேள்விப்பட்டது இல்லையா. நீ சரியான விளக்கெண்ணெய்ப்பா. தென் மாவட்டங்கள்ல 'நெல்' போட்டு வைக்கறதுக்காக பெரிய பானை மாதிரி ஒண்ணு செஞ்சு வஞ்சிருப்பாங்க. அதை குதிருன்னும் சொல்வாங்க. அந்தப் பெயரைத் தான் இந்த அமைப்புக்கு வச்சிருக்காங்க."

"சரி... சரி... அங்க நடந்ததைச் சொல்லு?"

"கவிஞர்கள் ஞானக்கூத்தனும், விக்ரமாதித்யனும் தங்களோட கவிதை அனுபவங்களைப் பற்றிப் பேசினாங்க. அப்புறம் கவிஞர் இந்திரன் ஆதிவாசிகள் கவிதை பற்றிப் பேசினாரு. இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் கவிதை பற்றி பேசிட்டிருக்கும்போது காரசாரமான வாக்குவாதம். பாடல் வகை கவிதையா? இல்லையான்னு. அப்புறம் எதுதான் கவிதைன்னு கேட்டா, இன்றைய நிலையில், நவீன கவிதை, பேச்சு ஓசை உரை நடையை ஒட்டி இருக்கணும்னு விக்ரமாதித்யன்

• ரவீணா





சொன்னார். இந்த வகையில மௌனியின் எல்லாக் கதைகளும் கவிதைகள்தான்னு சொன்னார் ஞானக்கூத்தன்."

"குழப்புறியே குருவியே... கதை எப்படி கவிதையாகும்?"

"அதத்தான் நானும் மூணு நாளா தலை கீழா படுத்து யோசிச்சிட்டிருக்கேன். ஒண்ணுமே புரியலை. சரி விடு. அப்புறம் நம்ம 'பரீட்சா'வுக்கு இது வெள்ளி விழா ஆண்டாம்."

'பரீட்சாவா?'

"யோவ். நீயெல்லாம் கூவத்துல குப்பை யள்ளப் போகலாம். பரீட்சா தெரியாம பத்திரிகையில வேலை வேற பார்க்கற.. சரி சொல்லித் தொலைக்கறேன்? பத்திரிகையாளர் ஞாநி, 1978ம் வருஷம் நாடகத்துக்காக ஆரம்பிச்ச அமைப்புதான் பரீட்சா. அப்பல்லாம் நவீன நாடகம் போட்டாலே கிண்டலா பார்ப்பாங்க. அந்தச் சமயத்துல, முதல் மாற்று நாடகக் குழுவா சென்னையில வந்தது இந்த அமைப்புதான். இப்ப அதுக்கு வெள்ளி விழா. அதை முன்னிட்டு இந்த வருஷம் பூரா மாதம் ஒரு நாடகத்தை, எம்.ஜி. ஆர். ஜானகி மகளிர் கலைக் கல்லூரியில்... அதாம்பா பழைய சத்யா ஸ்டூடியோவுல நடத்தறாங்க. பன்னிரண்டு மாதம் தொடர்ந்து நாடகம் பார்க்கப் போறதா இருந்தா கட்டணம் நூறு ரூபாய். மாணவர்களுக்கு எழுபது ரூபாய். ஒரு நாடகம் மட்டுந்தான் பார்க்கணும்னா இருபது ரூபாயாம். மாணவர்களுக்குப் பத்து ரூபா."



* ஞாநி

"கவிதை, நாடகம்னு ஒரு மாதிரி போய்ட்டிருக்கியே குருவி..."


"ஆங்... இன்னொரு மேட்டரையும் சொல்லிடறேன். நம்ம மேஜிகல் ரியலிச எழுத்தாளர் மார்குவேஸ் இருக்கார்ல!"

"ஆமாமா... கேள்விப் பட்டிருக்கேன்!"

"இதையாவது தெரிஞ்சு வச்சிருக்கியே... அவரைப் பற்றி விலாவாரியா அலசி, ஆராய்ந்து தமிழ்ல ஒரு புக் வருது. ஆர். வெங்கடேஷ் எழுதியிருக்கார். மேஜிக்கல் ரியலிஸம்னா என்ன? நம்ம இலக்கியத்துக்கு அது எந்த வகையில உபயோகமா இருக்கும்னு, ரொம்ப டீட்டெய்லாவும், அவரோட வாழ்க்கை வரலாறு, அவரோட சில கட்டுரைகள், இப்படி..."

"போதும்பா இலக்கியம்... கொஞ்சம் என் லெவலுக்கு வா..."

"உங்களையெல்லாம் திருத்தவே முடியாதுபா... சொல்றேன் கேளு. சூப்பர் சிக்ஸுக்கு இந்தியா நுழைஞ்சதுல, மற்ற எல்லாரையும் விட அதிகமா சந்தோஷப் பட்டவர் ரவீணா டாண்டன்தான்."



* மார்குவேஸ்

"ஏன்?"

"ரவீணா 'ஸ்டம்ப்டு'ன்னு ஒரு படத்தைத் தயாரிச்சிருக்காங்க. கிரிக்கெட் மேல மக்களுக்கு இருக்கற வெறி, எல்லைல போராடுகிற போர் வீரனின் தியாகத்தைக் கூட மறக்கடிச்சுடுங்கறதுதான் கதை."

"அதுக்கும் சூப்பர் சிக்ஸுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கே. வோர்ல்டு கப் பைனல் வரை இந்தியா வந்தா, ரசிகர்களுக்குக் கிரிக்கெட் ஜுரம் ஏறிட்டே போகுமாம். அப்போ, இவங்க சொல்ல வர்ற மெசேஜ் இன்னும் எளிமையா மக்களைப் போய்ச் சேரும்னு சொல்றாங்க ரவீணா..."

"சரிதான். நானெல்லாம் கிட்டிப்புள் விளையாட்டிருந்தேன் ஊருல. அதுக்கெல்லாம் ஒரு வோர்ல்டு கப் வைக்கறதுக்காக ஏதாவது செய்ய முடியுமா குருவி?" என்று நாம் போட்ட பௌன்ஸரில் எஸ்கேப் ஆனது ஊர்க்குருவி. ●

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : உத்தியோகத்தில் இதுவரை இருந்து வந்த குழப்பமெல்லாம் நீங்கி, உங்கள் வாழ்க்கை சாத்தான்குளம் புது ரோடு போல பளிச்சிடப் போகுது. அரசாங்க விவகாரங்கள் அனுகூலமாகும். சுய தொழில், வியாபாரம் முன்னேற்றம் அடையும். பொருளாதார அபிவிருத்தி உண்டாகும். மனை, நிலம், வீடு, ரியல் எஸ்டேட் இந்த வகையில் ஆதாயம் காத்திருக்கு. சொத்து விவகாரம், கோர்ட்டு வழக்கு என ஏதாவது சிக்கல் இருந்தால், இப்போது அனுகூலமான திருப்பம் ஏற்படும்.



ரிஷபம் : குரு பார்வை ஒன்றை குரு குரு என்று வீசுவதால் என்னென்ன மேன்மை கிடைக்கும் என்று லிஸ்ட் போடலாமா? எதிர்பாராத தனலாபம், புதியவர்கள் அறிமுகம், தெய்வானுக்கிரகம் அடேயப்பா! சுயதொழில், வியாபாரம், கூட்டு வர்த்தகம் ஆகியவற்றில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். குடும்பத்தில் இதுவரையிருந்து வந்த கருத்து வேறுபாடுகள் எல்லாம் நீங்கி 'சுபம்' கார்டு போடப்பட்ட மெகா சீரியல் போல குதூகலம் பொங்கும்.



மிதுனம் : குழப்பங்களும், குறுக்கீடுகளும் அதிகமாக இருக்கும். பொறுமையைக் கடைபிடித்து நிதானமாகக் காரியம் ஆற்றுங்கள். வார பிற்பகுதியில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். குறிப்பாக பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டாகும். பழைய கடன் பாக்கிகள் விலகும். பெயர், புகழ், ஆதாயம் கூடும். மனை, நிலம், வீடு வகையில் அளவோடு நன்மை ஏற்படும். மாணவர்கள் கிடு கிடு முன்னேற்றம் அடைவார்கள்.



கடகம் : குடும்பத்தில் எல்லோருடைய மனப்பாங்கும் இனிமையுடன் திகழும் என்பதால், ஒற்றுமையான சூழ்நிலை இருக்கும். சுப காரியங்கள் நடக்கும் வாய்ப்புகள் அமையும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். வெளியூர் பயணம் அனுகூலம் தரும். புதிய பொருள் சேர்க்கை, புதிய வாகனம் வாங்க வாய்ப்பிருக்கு. நண்பர்கள், உறவினர்கள் வருகை, மக்களால் மகிழ்ச்சி ஏற்படும். கிரக வழிபாடு, தெய்வ தரிசனம் நலம் தரும்.



சிம்மம் : இந்த வாரம் உங்கள் எதிரிகள் உங்கள் முன்னால் பணிந்து நிற்பார்கள். மறைமுக எதிர்ப்புகள் மாயமாக மறைய, உங்கள் திறமை கூடும். கலைத் துறை, நாடகம், நாட்டியம், சங்கீதம், ஓவியம், சிற்பம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் அடைவார்கள். புதிய ஒப்பந்தம் ஏதும் கையெழுத்தானால், அது நல்ல லாபத்தைக் குவிக்கும். பெண்களுக்கு உகந்த காலம். சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.



கன்னி : நல்ல கிரக பார்வையில் இனிய செய்திகள் வந்து சேரும். 3ல் கேது, குரு பார்வை வேறு... கேட்கணுமா? துணிவு, தன்னம்பிக்கை ஓஹோன்னு அதிகரிக்கும். அலங்காரப் பொருள்கள், அழகு சாதனங்கள், ஜவுளி, பொன், வெள்ளி ஆபரணங்கள், ஏற்றுமதி இறக்குமதி போன்றவை எதிர்பாராத லாபத்தைத் தரும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். பெண்களுக்கு உற்சாகமான மன நிலை உண்டாகும். மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். சாதுக்கள், மகான்கள் தரிசனம் சிறப்பு தரும். சுபகாரிய முயற்சிகள் பலன் தரும்.

அக்னி சர்மா பக்கம்

மார்ச் 12 முதல் 18 வரை




துலாம் : 'அதிர்ஷ்டமான திருப்பம். அனுகூலமான முயற்சி.' அது இதுன்னு பெரிசா அலட்டிக்காமல், காரியத்தை கச்சிதமா முடிச்சிட்டு, அடுத்து என்னன்னு பார்க்கப் போங்க. எடுத்த காரியங்களில் எடுப்பான வெற்றி கிடைத்தே தீரும். உத்தியோகத்திலும் உற்சாகமான நிலையே என்பதால், விரும்பிய இடத்துக்கு மாறுதல், பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற குஷி தரும் நிலவரமே இருக்கும்.



உமா பத்மநாபனின் மகள் ஷரண்யாவுக்கு (கடகம்) புது வாகனம் வாங்க வாய்ப்பு இருக்காம்!



விருச்சிகம் : புதியவர்கள் அறிமுகம் என்றாலே எட்டு அடி தள்ளி நின்று பேசும் நீங்கள், உங்கள் ராசிநாதன் என்ன சொல்றார்னு தெரிஞ்சுக்கிட்டா, உற்சாகமாகப் பழகுவீங்க. செவ்வாய் இரண்டில் அமர்ந்து அந்த வீட்டின் அதிபதியான குரு 9ல் உச்சம் பெற்றுள்ளதால், புதியவர்கள், குறிப்பாக முக்கியஸ்தர்கள் அறிமுகம் ஏற்பட்டால், அதனால் பற்பல வகைகளில் ஆதாயம் உண்டு என்பதை அறிந்து நடக்கவும் கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இருக்கும். பொருளாதார மேன்மை உண்டாகும். பெண்களுக்கு, புதிய பொருள் சேர்க்கை உண்டாகும்.



தனுசு : துணிவு, தன்னம்பிக்கை இரண்டும் இருப்பதால் எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவது முடித்துவிடுவீர்கள். இதனால் மேலதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிடைப்பதோடு, தொழில் சம்பந்தமாகவும் நிறைய முன்னேற்றங்கள் உண்டாகும். புதிய தொழிலிலும், கூட்டு வியாபாரத்திலும் சின்னதாக ரிஸ்க் எடுத்துப் பார்க்கலாம். வெளிநாட்டுத் தொடர்புடைய வியாபாரம், எதிர்பாராத தனலாபம் கொண்டு வரும். அரசுப் பணியாளர்கள் உயர்வார்கள். சொத்து விஷயம் சமாதானமுறையில் பைசலாகும். திருமணம் மற்றும் சுப காரியங்கள் நடக்க சந்தர்ப்பம் கனிந்து வரும்.



மகரம் : மனஸ்தாபங்களும், சிறுசிறு சச்சரவுகளும் நிரம்பியிருந்த உங்கள் குடும்ப வாழ்க்கையில், இனி அன்புத் தென்றல் சுகமாக வீசப் போகிறது. குரு பலம் நிறைந்திருப்பதால் மக்கள் மகிழ்ச்சி, ஒற்றுமை, அபிவிருத்தி என உவகை பொங்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் அமைந்து வரும். நீண்ட நாளாக குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு மகப்பேறு உண்டாகும். ஸ்பெகுலேஷன் துறையில் அளவான நன்மையை மட்டுமே எதிர்பாருங்கள். அரசியல்வாதிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.



கும்பம் : வராத கடன் வசூலாகும். பயணத்தால் அனுகூலம் என்று முக்கியமான இரண்டு பலன்களை தரப்படுகின்றன. உத்தியோக வகையில் எல்லா அனுகூலமும் ஏற்படும். புதிய முயற்சிகள் கைகூடும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த தகவல் விரைவில் வந்து சேர்ந்து மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். கொடுக்கல் வாங்கல் தக்க சமயத்தில் கை கொடுத்து உதவும்.



மீனம் : உங்களைச் சுற்றியிருக்கிற முக்கியஸ்தர்கள் பிரபு, தனவான்களின் பட்டியலை எடுத்து தயாரா வைச்சுக்குங்க. அதுலே தெய்வீக ஈடுபாடு அதிகமா யாருக்கு இருக்கோ, அவங்கதான் உங்களுக்கு இந்த வாரம் உதவப் போறவங்க. பொருளாதார அபிவிருத்தி, தாராளமான பண நடமாட்டம், எதிர்ப்புகள் மறைதல் என சிலாக்கியமான பலன்களே நடக்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிடைக்கும்.

மூன்றாவது

மும்தாஜ் யாசீன்

ரஞ்சிதா மனம் நொந்திருப்பாள். ஏமாற்றத்தின் வெறுப்பில் சபிக்கவும் கூடும். 'நீ இவ்வளவு அற்பமா?'' அவளது சிவந்த முகம் வெதும்பி துடிப்புடன் சுழிக்கும் கோலம் மனத்தில் பதிய, வேதனை படர்ந்தது. இனி அவளது முகத்தில் விழிக்க முடியுமா?

எல்லாம் தாமோதரனால் வந்தது.

வட்டார அலுவலகம் அது. எந்நேரமும் நசநசக்கும் மனிதக் கூட்டம். முகம் நீட்டும் விசாரணை நச்சரிப்பு, இரைச்சல். சலவை உடுப்பும், கையில் செல் ஃபோனுமாக காரில் வருகிறவர்களுக்குத் தனி மரியாதை உண்டு.

தாமோதரன் என்ன சொல்லித் தொலைத்தாரோ. சுந்தர பெருமாள் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளேயே வந்து விட்டார். "வணக்கம்... சார்."

நடுத்தர வயது. மீசை இல்லாத முகம். கனத்த உடம்பு. முன் அறிமுகம் கிடையாது. சட்டென்று துளிர்த்த கோபத்துடன், "யார் நீங்க... என்ன வேணும்?'' என்று கேட்டான் சங்கரன்.

அவர் இதற்கெல்லாம் பயப்படாதவர் போலிருந்தார். "எம்பேரு சுந்தர பெருமாள். கீழ் அதிகாரிகளைப் பத்தி புகார் சொல்ல வந்திருக்கேன். என் மனுவை பைசல் பண்ண பணம் கேக்கறாங்க. அதுவும் உங்க பேரைச் சொல்லி.." எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

"யாரு?'' சங்கரன் திடுக்கிட்டான்.

"உங்க ஹெட் கிளார்க்."

"தாமோதரன்.." அழைப்பு மணியை அழுத்தப் போனான்.

"அவரு வேணாம். நான் உங்ககிட்டயே பேசி முடிக்க விரும்பறேன்." அழுத்தமாக ஒலித்த அவரது குரல் ஆணையிடுவது போல இருந்தது. தயங்கி, பின்வாங்கினான்.

"பேக்டரி விரிவாக்கம் சம்பந்தமா விண்ணப்பிச்சிருக்கேன். வேலை முடியறது உங்க கையிலதான் இருக்கு."

சங்கரனுக்குப் புரிந்தது. பேரம் பேசுகிறார்.

"தாமோதரன் கிட்டப் பேசுங்க."

"அவரு உங்களைச் சொல்றாரு..'' சுந்தர பெருமாள் சிரித்தார்.

சங்கரன் பைல்களைப் புரட்ட ஆரம்பித்தான்.

"சாருக்கு நான் யார்ன்னு தெரியலை. அதான் யோசிக்கிறீக..'' சுந்தர பெருமாள் அரிய இரகசியத்தைச் சொல்லப் போகும் குறும்புக்காரச் சிறுவனின் குதூகலத்துடன் அவனைப் பார்த்தார்.

மேலதிகாரி அல்லது அரசியல் புள்ளியின் பெயர் உச்சரிக்கப்படும் என்று அவன் எதிர்பார்க்க. "நான் ரஞ்சிதாவின் தாய் மாமா.." என்றார்.

சங்கரனுக்கு குப்பென்று வியர்த்தது.

"இதெல்லாம் தொழில் விஷயம். அதான் நான் யாருன்னு காட்டிக்கலை'' அவரது முகத்தில் அதே இளநகை இன்னும் மாறாமல் இருந்தது.

சங்கரனின் உடல் கூச ஆரம்பித்தது. கம்பீரம் குலைந்து அவமானமாக இருந்தது.

"பரவாயில்லை. தம்பி ரொம்பவும் கெட்டிதான். நம்ம விஷயத்துல கொஞ்சம் கருணை காட்டுங்க. உண்டானதை குடுத்துடறேன்."

சுந்தர பெருமாள் புறப்பட்டார். நேராக ஊருக்குத்தான் போலும்.

சொந்த ஊரில் அவனுக்குள்ள பிம்பம் வேறு.

குறிப்பாக ரஞ்சிதா... அவள் காணாத காசு பணமா?

பூமி பிளந்து தன்னை உள் வாங்கிக் கொள்ளக் கூடாதா என்றிருந்தது.

ஜீப்பை விட்டு இறங்கியதும், "தம்பி வந்தாச்சு..." என்று குரல் கேட்டது. அம்மா எதிரில் வந்தாள். அவளது பார்வையைத் தவிர்த்தபடி தலையைக் குனிந்து கொண்டு உள்ளே நுழைந்தான். "பெயிண்டருக்குச் சொல்லிட்டியா?" எனக் கேட்டபடி பின்னாலேயே வந்தாள்.

"இல்லைம்மா... நாளைக்கு வரச் சொல்றேன்."

"பாத்தியா... உன் தம்பியை... ஆபீசுக்குப் போயிட்டா உலகமே மறந்து போயிடும்." அம்மா அக்காவிடம் சொன்னாள்.



"நிச்சயதார்த்தத்துக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. அதுக்குள்ள இதெல்லாம் முடிஞ்சாத்தான் மத்த வேலைகளைப் பார்க்க முடியும்..." என்றாள் அக்கா.

அக்காள் வந்து இரண்டு தினங்கள் ஆயிற்று. அவள் இல்லாமல் அம்மாவுக்கு ஒன்றும் ஆகாது.

"எவ்ளோ வேலை கெடக்கு. எப்படி முடிக்கப் போறம்னு பயமா இருக்குடி செண்பகம்..." என்றாள் அம்மா.

"என்ன பயம்... தம்பிதான் அதுக்கு ஆள் வரும்னு சொல்லிருச்சே."

முகத்தில் பூரிப்பின் தனி ஒளி வீச அம்மா அதை ஏற்றுக் கொண்டாள். அம்மாவுக்கு இந்த வாழ்வு கனவில் கூட காணாதது.

அம்மாவும், அப்பாவும் அவனுடனேயே வந்து விட்டார்கள். இந்த ஆறு வருடங்களில் டவுனில் வீடும், காரும்,

ஊரில் தோப்பும் வாங்கியாயிற்று. அம்மாவின் கழுத்தில் காசு மாலையும், இரட்டை வடச் சங்கிலியும் வந்தது. அக்காள் புருஷன் மளிகைக் கடை வைத்துக் கொண்டார். நல்லது கெட்டதுக்கு ஊருக்குப் போகும்போது ஒதுங்கி வழி விடுபவர்களாக அங்குள்ளவர்கள் ஆனார்கள். "தம்பி... தம்பி" என நாலு பேர் வருவதும், பவ்யமாகப் பேசி விட்டுப் போவதும் நடந்தது.

இத்தனைக்கும் மேலாக மணியக்காரர் பேத்தியை மணம் முடிக்கும் வாய்ப்பு.

எப்பேர்ப்பட்ட குடும்பம் அது!

சங்கரன் தனது அறைக்கு வந்து கட்டிலில் சாய்ந்து கொண்டான். பெரிய அறை. கிழக்குப் பக்கம் ஆளுயர ஜன்னல். குளுகுளுவென்று வீசும் மாலைக் காற்று. பக்கவாட்டில் டிரஸ்ஸிங் டேபிளும், இடது பக்கத்தில் டேப் ரிகார்டரும், டேபிள் பேனும். சமீபத்தில்தான் இந்த இரட்டைக் கட்டிலை வாங்கிப் போட்டிருந்தான். கனவில் ரஞ்சிதாவுடன் கழித்த இரவுப் பொழுதுகள்...

ரஞ்சிதா தனக்கு வாய்ப்பது சாத்தியம் தானா இனி?

அம்மா கூலி தானியத்திற்கு முந்தானை ஏந்திய காலங்களில் அளந்து போடுகிற நிலைமையில் இருந்தவர் பெரிய முதலாளி. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். வெளித் திண்ணையில் உத்திரத்தைத் தாங்கிய பெரிய தூண்களுக்கு இடையில் ஈஸி சேரில் சாய்ந்து கிடப்பார். எதிரே நிழலாட்டம் கண்டு தலைதூக்கிப் பார்ப்பார். "என்னய்யா?"

பணிவாக நிற்பவர்கள் மேலும் பணிவைக் காட்டுவார்கள். வந்த காரியத்தைச் சொல்லி, தீர்வுடன் திரும்பிப் போவார்கள். அப்பா அவரை நல்ல மனிதர் என்று சொல்வார். "பெரியவரைப் பாக்கலாம் வா..." என்று கூட்டிப் போனால் கையில் காசு இல்லாத நாளாக இருக்கும். பெரியவர் சங்கரனை அடையாளம் கண்டு, "உம் பையனா?" என்று கேட்பார். கும்பிடும் அவனது கரங்களைப் பற்றிக் கொண்டு, "படிப்புங்கிறது கடவுளோட ஆசீர்வாதம். நல்லாப் படிக்கணும்" என்று சொல்வார். பக்கத்தில் இருத்திக் கொள்வார். எப்பவும் சொல்வதற்கு ஏதாவது இருக்கும்.

உத்திரவு வாங்கும் போது கையை மடக்கி பத்தோ, இருபதோ தருவார். பேச்சு கேட்டதற்குக் கூலி போலத் தோன்றும். தெருமுனையில் அப்பா அவனிடமிருந்து பிடுங்கி ஜேபியில் போட்டுக் கொள்வார். இவனுக்கு வெறுப்பாக இருக்கும். பெரிய படிப்புக்கு அவரிடம் உதவி பெற அப்பா திட்டம் வைத்திருந்தார். ஆனால் அதற்குள் பெரியவர் மறைந்து விட்டார். அவனது பிடிவாதத்தால் காட்டை விற்றுத்தான் படிக்க வேண்டியதாயிற்று.

ரஞ்சிதாவின் அப்பாதான் மூத்த மகன். அங்கும் எல்லாம் மாறிவிட்டது. குதிரை வண்டி லாயத்தில் கார் நின்றது. காடு கழனியை விட்டுத் தொலைத்து ரைஸ் மில், சிமெண்ட் ஏஜென்சி நடத்தினார்கள். சங்கரனின் பெரிய உத்தியோகம், அந்தஸ்து பாராமல் பெண்ணைக் கொடுக்கக் காரணமாக இருந்தது. சுந்தர பெருமாள் கூறுவதைக் கேட்டு இனி என்ன செய்வார்கள்?

வேறென்ன, ''லஞ்சம் வாங்கறானாமே...த்தூ!'' என்று துப்பிவிட்டுக் கதவைச் சாத்துவார்கள். பக்கத்து ஊரில் ஏதாவது ஒரு பண்ணை வீட்டிற்கு ரஞ்சிதா வாழ்க்கைப் படுவாள் - மனவலியை இரண்டு சொட்டுக் கண்ணீரில் கழுவி விட்டு...

தான் அவமானத்தில் குறுகி, சொந்த ஊரை மிதிக்க முடியாமல்... தனக்காவது பரவாயில்லை. மனத்தைத் திருப்ப எத்தனையோ உண்டு. அம்மா என்ன செய்வாள்?

பாவம் அம்மா!

அடுத்த இரண்டு தினங்களில் சங்கரன் வெளியூர் போக நேர்ந்தது. தாமோதரனும் கூடவே ஜீப்பில் வந்தார்.

மேலதிகாரிகளிடம் அவருக்கு நல்ல பெயர் உண்டு. இந்த வயதிலும் வேலையில்

''ஹூம், விதி யாரைவிட்டது...''

''ஏம்பா அலுத்துக்கறே?''

''பின்னே, பட்டப்பகலில் முனுசாமியைக் கொலை செய்த வழக்கில் கூலியா விடுதலை ஆயிட்டேன்... பெட்டிக்கடையில் வாழைப் பழம் திருடிய வழக்கில் மாட்டிக்கிட்டு இங்கே வந்துட்டேனே!''

— உ. ராஜாஜி

காட்டும் சுறுசுறுப்பு. சட்ட ஞானம். பார்டிகளிடம் கண்டிப்புடன் பேசிக் கறக்கும் சாமர்த்தியம். தகுதிப்படி பங்கிட்டு வழங்கும் நாணயம். எல்லா அலுவலகங்களிலும் தாமோதரன்களும், மேலதிகாரிகளும் உண்டு. தான் ஒரு இடைக் கண்ணி. என்ன செய்துவிட முடியும்?

வீடு வெள்ளையடித்து புதுத் தோற்றம் கொண்டிருந்தது. சமையலறையிலிருந்து பலகார வாசனை. வியர்வை வழிய அக்காள் அடுப்படியில் இருந்தாள்.

"செண்பகம்... தம்பி எழுந்தாச்சு."

அம்மா அவனது உடுப்புக்களை துவைக்க எடுத்துக் கொண்டாள்.

"ரெண்டு நாள்தான் இருக்கு. வெளியூர் எங்கியும் போக வேணாம்..."



"சரீம்மா..."

சங்கரன் உடை மாற்றிக் கொண்டான்.

"தனம்... தனம்..." என கூவியபடி அப்பா வேகமாக வந்தார்.

"என்னங்க?"

"கை வண்டியில மளிகை சாமான் வருது. எங்க இறக்கிப் போடறதுன்னு சொல்லு."

"காய்கறி, பாத்திரங்கள்லாம் நாளைக்கு வரும்" என்றான் வண்டிக்காரன்.

"நல்லது... அதுகளையும் நீயே கொண்டு வந்துரு..."

"சரீங்கய்யா..."

அப்பா அவனுக்குப் பணம் கொடுத்தார். வண்டிக்காரன் அவரைக் கும்பிட்டான். அப்பா நிறைவாகச் சிரித்தார். முடிசூடிய மகாராஜாவின் தோரணை, ஒரு கணம் அவரிடத்தில் தென்பட்டது. மேடு ஏறிய பிறகு பள்ளத்தைக் காணும் பெருமிதமா இது?

சங்கரன் அவர் அருகே வந்தான். "ஏம்ப்பா... அவுக வர்றது உறுதியான பெறகு இதெல்லாம் வாங்கக் கூடாதா?" எனக் கேட்டான்.

கேள்வியின் அர்த்தம் அப்பாவுக்குப் புரியவில்லை.

"யாரு வர்றது?" என திருப்பிக் கேட்டார்.

"ரஞ்சிதாவின் உறவுக்காரங்க..."

"ஏன் அதுக்கென்ன?"

"இல்ல... வர்றாகளான்னு.... இன்னொரு தரம் கேட்டுக்கிட்டா நல்லது இல்லையா?"

"அதுவா... அதுல என்ன சந்தேகம் உனக்கு? "தனம்... இங்க வா... தம்பி சொல்றதைக் கேளு..."

அடுப்படியில் அக்காவுடன் மும்முரமாக இருந்த அம்மாவுக்குக் காதில் விழவில்லை.

"அம்மா வேணாம்ப்பா... சும்மாதான் கேட்டேன். தெரிஞ்சுக்கலாம்னு" அவனுக்கு இதயம் படபடத்தது.

"மணியக்காரர் பொண்ணு நம்ம வீட்டு மருமகங்கிறது எப்பவோ முடிவாயிருச்சு. நேத்திக்குக்கூட அவுக தாய்மாமன் வந்து பேசிட்டுப் போறாரு... போதுமா?"

"யாரு?"

"சுந்தர பெருமாள். உன்னையும் ஆபீசுல பார்த்தாராமே?"

"ம்... ம்... என்ன சொன்னாரு?"

"பொழைக்கத் தெரிஞ்ச புள்ளைன்னு பாராட்டினார். ஊர்லயும் சொல்லியிருப்பாரு போல... எல்லாரும் சந்தோஷப் படாங்களாம்..."

"நிசமாவா?"

"பின்ன... பொய்யா?" எனக் கேட்டார் அப்பா. "எல்லாம் நல்லபடி நடக்கும். உன்னை மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைக்கணுமே. அலட்டிக்காம போய்ட்டு வா... ஆபீசுக்கு."

அவரது பதில் எல்லாவற்றையும் மாற்றி விட்டது.

அப்பாவைப் புரிந்து கொள்ள முடிந்தது. காசு பணத்தைக் காணாதவர். அவர்களுக்கு என்ன...

சந்தோஷம்?... தவிர்க்க முடியாமல் பெரியவரின் முகம் நினைவுக்கு வந்தது. ஒருவருக்காவது தன்னை ஒதுக்கத் தோன்றவில்லையா? குறிப்பாக ரஞ்சிதா...

திருமணத்திற்குப் பிறகு அவளிடம் கேட்க வேண்டும் என நினைத்துக் கொண்டான். ஏனோ கல்யாண நினைவே அத்தருணத்தில் சப்பென்று இருந்தது.


ஜில்லு மல்லு
—கதிர்
இந்தியாவுக்கு ஜே!
என்ன இந்தியாவுக்கே ஜெவா?
டேய் பாலிடிக்ஸ் பண்ணாதடா. நான் இந்தியா -பாகிஸ்தான் மேட்ச் பத்தி சொன்னேன்.
அதென்ன இந்தியா - பாகிஸ்தான் மேட்ச்சுக்கு அவ்வளவு ஆர்வம்!
நம்ம எதிர் அணி பாகிஸ்தான் ஆச்சே!
துப்பாக்கியத் தூக்கறது மட்டும் இல்ல. நம்ம நாடுதான் ஜெயிக்கணும்கறதும் ஒருவகையில தீவிரவாதம் தான்.
வரவர நீ 'message' சொல்ல ஆரம்பிச்சிட்ட...?
ஏன். எங்க ''Ageக்கெல்லாம் message சொல்லக்கூடாதா?
என்னடா டைரக்ஷன் காட்டுறியா?
அதுக்கெல்லாம் ஒரு knowledge வேணும்டா
போதும் போதும். டி.ராஜேந்தர் படத்த இங்கிலீஷ்ல பார்க்கற மாதிரி இருக்கு.
வயசென்ன வயசு. எல்லாமே மனசு. இதுங்க ஒரு தினுசு...!


கல்கி
KALKI 16.3.2003
இதழுடன்
இலவச இணைப்பு
பரீட்சை நேரப் பிரார்த்தனை!
-கர்மயோகி



'ஐயையோ, எக்ஸாம் நேரத்துல
போயி வேர்ல்டு கப் மேட்ச் வச்சுத்
தொலைச்சுட்டானே' என்று புலம்பி,
டீ.வியில் ஒரு கண்ணும்,
புத்தகத்தில் ஒரு கண்ணுமாக
இருக்கும் மாணவர்களுக்கு
பரீட்சை நேரப் பிரார்த்தனையைத்
தந்திருக்கிறோம். முழுசா படிச்சு
முதல் மார்க் வாங்க,
வாழ்த்துக்கள் ஒரு கோடி!

பரீட்சைக்குச் செல்லும் மாணவனுக்கு என்னென்ன பிரச்னைகள் வரும்?

1) சக்திக்கு மீறிய உழைப்பு பரீட்சைக்குத் தேவைப்படுகிறது
2) பரீட்சை என்றால் கசப்பு, வெறுப்பு, பயம்.
3) மனப்பாடம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். பள்ளியே கட்டாயப்படுத்தும்.
4) குறுகிய நாட்களில் அதிக வேலை செய்ய வேண்டும்.
5) டீ.வி., ரேடியோ, டேப்ரெக்கார்டருக்கு இடையில் பரீட்சைக்குத் தயார்

செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்.

6) வீட்டு மனிதர் பரீட்சைக்குப் படிப்பவனை மறந்து ஆரவாரம் செய்வதும், வேலையிடுவதும் மனத்தை உறுத்தும். படிப்பை நரகமாக்கும்.


7) படித்தது மறந்து போய் பயம் எழும்.

8) மனம் சோர்ந்து, தெம்பில்லாமல், நிதானம் தவறிய நிலை, பரீட்சைக்கு முன்னுள்ள மாதங்கள்.



9) டீ.வி., கிரிக்கெட்டை விட முடியாத மனப்போராட்டம்.

இந்தப் பிரச்னைகள் பொதுவானது தான். வறுமையால் எழும் சிக்கல்கள். மனிதாபிமானமற்றவர்கள் இளம் உள்ளங்களில் ஏற்படுத்தும் வடுக்கள். வறுமையின் காரணத்தாலும், தாயார், தகப்பனார் பாசமற்றிருப்பதாலும், மனம் புழுங்கி பாடத்தின் மீது



1) சக்திக்கு மீறி உழைப்பது அவசியம்:

இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு வரை, மூன்றாம் வகுப்பில்தான் A,B,C,D சொல்லித் தருவார்கள். தமிழ் மீடியத்தில் படித்த மாணவர்கள் SSLC வரும் பொழுது ஆங்கில மீடியத்தில் மூன்றாம் வகுப்பு மாணவனின் வெறுப்பு ஏற்படுவதுண்டு. அதனால் மாணவர்கள் அவதிப்படுவதுண்டு. முதல் மார்க் வாங்கியாக வேண்டும் என்று பெற்றோர், பிள்ளைகளைப் பிள்ளைகளாகக் கருதாமல் கசக்கிப் பிழிவதால். கெட்டிக்காரப் பிள்ளைகளுக்கே மனம் வெறுத்து பாடம் என்றால் கசப்பேற்படுகிறது.

பரீட்சைப் பேப்பரை படித்துத் தெரிந்து கொள்ளும் அளவுக்குத் திறமையிருக்காது. அதனால் ஆங்கிலம் கடினம், பரீட்சைக்கு அதிக உழைப்பு தேவை என்ற கருத்தை நூறு ஆண்டுகளாக உலகம் நம்புகிறது. இது அப்பட்டமான பொய். கிளன் டொமான் என்பவர் ஐம்பது ஆண்டுகளாகப்

பள்ளி நடத்துகிறார். அவர் பள்ளியில் நான்கு வயதுப் பையன் எந்தப் புத்தகத்தையும் படிக்கிறான். கிளன் டொமானுடைய முறைகளை ஓரளவு பின்பற்றும் பள்ளிகளில், இரண்டாம் வகுப்புக் குழந்தை, ஜூனியர் என்சைக்குளோபீடியாவை சரளமாகப் படிக்கிறது. நமது பள்ளிகளில் கையாளும் முறைகள் பாடத்தைக் கசப்பாக்கிவிட்டன. 'பாடம் கசப்பானதல்ல. இன்று நான் இப்பள்ளியில் கட்டாயமாக மனப்பாடம் செய்யும் நிலையில் இருக்கிறேன்.' இந்தத் தெளிவு இக்கட்டுரையைப் படித்த பின் ஏற்படுமானால், மனம் பீதியிலிருந்து பெரும்பாலும் விடுபடும். அது பரீட்சை பயத்தைப் பெரும் அளவு குறைக்கும்.

2) பரீட்சை கசப்பு, வெறுப்பு:

உண்மையில் பரீட்சை சினிமா





பார்ப்பது போன்ற சந்தோஷமான நிகழ்ச்சி. உலகம் அதைக் கசப்பாக நினைப்பதால், அந்நினைவு நம்மையும் ஆட்கொள்வதால், நமக்கும் கசப்பு, வெறுப்பு ஏற்படுகிறது. மாணவர்கள் ஒரு சோதனை செய்து பார்க்கலாம். வாராந்திரம் பரீட்சை நடத்தும் பள்ளிகள்

● பள்ளிப் பிள்ளைகளுக்குப் பிடிக்காத பாடத்தைப் படிக்கத் தூண்டுவது, செரிக்காத மரத்தூளை உணவாக உட்கொள்ள வற்புறுத்துவது போன்றதே.

— *பெர்னார்ட் ஷா*


உண்டு. காலாண்டுத் தேர்வுண்டு. இது போன்று ஒரு பரீட்சையில் ஒரு பாடத்தை — கணக்கு அல்லது சரித்திரம் — எடுத்து, பரீட்சை வரும் முன் மனப்பாடம் செய்யாமல், அதைப் புரிந்து கொள்ள முயன்றால்,

தெரியாததை ஆசிரியர், பெற்றோர், நண்பர் மூலம் தெரிந்து கொள்ள முயன்றால், பெரும் அளவு பாடம் தெளியும். புரிகிற மாதிரி தோன்றி, புரியாமல் இருப்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதன்பின் தானறிந்ததைத் தன்னைக் கேட்பவர்கட்குச் சொல்லிக் கொடுக்க முனைந்தால், அப்பாடத்தில் தெரியாத துணுக்கும் இருக்காது. அதன் பின்,


— பரீட்சை எப்பொழுது வரும் என மனம் கேட்கும்.

— சந்தோஷமாகப் பரீட்சையை வரவேற்கும்.

— கசப்பு இனிப்பாக மாறும்.



எஸ்.எஸ்.எல்.சி, இன்டர்மீடியட், பி.ஏ.ஆகிய பரீட்சைகளில் ஆங்கிலத்தில் பெயிலான மாணவன், எம்.ஏ.ஆங்கில இலக்கியத்தில்



தகப்பனார் வற்புறுத்தலால் பயந்து கொண்டே சேர்ந்தான். மேற்சொன்ன முறையைக் கையாண்டு தான் நூற்றி ருபது மாணவர்களிடையே பிரபலமா

● படிப்பதனால் மட்டும் பயன் பெற முடியாது. மொழிப் பயிற்சியைப் பெறுவோம்; நல்ல சுலோகங்களை ஒப்பிக்கலாம்; மந்திரங்களைத் தவறின்றி உச்சரிக்கலாம்; அவ்வளவுதான். எந்த விஷயங்களில் ஆசை செலுத்துகிறோமோ அவைதான் நம்மை உயர்த்துகின்றன, அல்லது தாழ்த்துகின்றன.

— *மூதறிஞர் ராஜாஜி*

னான். ஆசிரியர்கள் தங்களிடம் சந்தேகம் கேட்கும் மாணவர்களை இவனிடம் அனுப்புவார்கள்.

இதன் ரகசியம் புரிந்து விட்டால்

பயமிருக்காது. பயம் ஏற்படுவது புரியாத காரணத்தால்தான்.

3) மனப்பாடம்:

இது நம் நாட்டில் பல பள்ளிகளில் கட்டாயமாக உண்டு. பல பெற்றோரும் இந்தப் பழக்கத்துக்கு நிறைய முக்கியத்துவம் தருகின்றனர். மனப் பாடம் செய்வது, படிக்கும் முறை என்ற கருத்து உலகில் உலவுகிறது. இது தவறான கருத்து என கல்வி உலகம் அறியும். ஆனால் நடைமுறையில் அதுவே உள்ளது.

பத்தாம் வகுப்பில் விஞ்ஞான ஆசிரியர் மாணவர்கட்கு அன்றாடம் நடத்தும் பாடத்தைப் புரியும் வரை கூறிய பின், மாணவர்களே தங்கள்



சொல்லால் சொல்லும்படியும், எழுதும்படியும் பயிற்றுவித்தார். முழுப் பரீட்சையில் நான்கு செக்ஷன்



பேப்பர்களைத் திருத்திய ஆசிரியர்,

– இந்த வகுப்பின் பேப்பர் கட்டு, மற்ற கட்டுகளைவிட மூன்று மடங்கு பெரியதாக இருக்கிறது.

– எந்த மாணவனும், எந்தக் கேள்வியையும் ஒதுக்கவில்லை என்று கூறினார்.

மனப்பாடம் அறிவை மழுங்கச் செய்யும், புரிந்து கொண்டு படித்தால், புரிந்ததை எழுதிப் பார்த்தால் நினைவு தவறாது.

கசப்பு, மனப்பாடத்தால் வருகிறது.


4) குறுகிய நாட்களில் அதிக வேலை செய்ய வேண்டியிருக்கிறது:

அன்றைய பாடத்தை அன்றே

படித்து மனத்தில் இருத்தியிருந்தால், பரீட்சைக்கு அதிக வேலை செய்ய வேண்டியிருக்காது. பரீட்சைக்கு மட்டும் படிக்கும் பழக்கம் இந்நிர்ப்பந்தத்தைத் தருகிறது. நம் பள்ளிகளில் எழுத்து வேலை குறைவு. முக்கியமான கேள்விக்குப் பதில் தயார் செய்வதே அனைவரும் செய்வது. ஒரு நாள் பாடம் நடந்தவுடன், ஆசிரியர் அங்கு எழுத்து வேலை தருவதில்லை. மாணவனே அப்பாடத்தை மனத்தில் பெற எழுதும் பழக்கமிருந்தால், பரீட்சைக்குத் தயார் செய்வது 3/4 பாகம் அல்லது 9/10 பாகம் குறையும். சிரமம் இருக்காது. ஒரு முறை கையால் எழுதியது மறக்காது.



5) பெற்றோருக்கும், வீட்டில் மற்றவர்க்கும் பிள்ளைகள் படிப்பதை விட



டீ.வி.பார்ப்பது முக்கியம். பாட்டு கேட்பது அவசியம். நாட்டில் வறுமையிருப்பதால் பிற நாடுகள் போல ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறை வழங்கும் நிலை இங்கில்லை. பண்பில்லாததால், தங்கள் சொந்த சௌகரியத்தை மட்டும் மனம் நாடுவதுண்டு. இந்த நிலையைத் தவிர்க்கப் பிள்ளைகள் பார்க்கில் போய்ப் படிப்பதுண்டு. குடும்பத்திற்குப் பண்பும், வசதியும் வரும்வரை இப்பிரச்னைக்குத் தீர்வில்லை. தீர்வில்லை எனில், மனித வாழ்வில் தீர்வில்லை.

ஆனால், ஆன்மா அடிப்படையில் வாழும் வாழ்வில் தீர்வுண்டு. மாணவனுக்கு ஆன்ம விழிப்பிருந்தால், அவன் மனம் எச்செயலிலும் பிறர் வசதியை நாடுமானால், அப்பழக்கத்தை மாணவன் மேற்கொண்டால், அவன் படிப்பை டீ.வி., ரேடியோ, டேப்ரிக்கார்டர் இடையூறு செய்யாது.

சிறுவர்கள் இந்த உயர்ந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும்படி எதிர்பார்ப்பது சரியில்லை.

6) படிக்கும் மாணவனுக்கு வீட்டார் தொந்தரவு தருவது:

இதுவும் மேற் சொன்னது போன்ற பிரச்னை. படிப்பது முக்கியம் என்று ஒரு பக்கம் அழுத்தம் கொடுக்கும் பெற்றோர், தங்கள் சௌகரியம் கருதி, குழந்தைகளுக்குச் சிறிய வேலைகள் இடுவதும், கடைவீதிக்கு அனுப்புவதும் உண்டு.

கவனம் சிதறாமல் படிக்க வேண்டும் என முனைப்புடன் படித்தால் அந்த மாணவனை இவ்வாறு பெற்றோர் தொந்தரவு செய்யத் தயங்குவார்கள். அவ்வப்போது குழந்தைகளே பெற்றோரைத் தொந்தரவு செய்வதால்

> ● கல்வி என்பது ஆற்றில் எதிர் நீச்சல் போடுதல் போன்றது. முன்னே நீந்திக் கொண்டே போக வேண்டும். நிறுத்தினால் பின்னுக்கு அடித்துத் தள்ளப்படுவோம்.
>
> — *சீன அறிஞர் ஒருவர்*


தான் பெற்றோரும் குழந்தைகளைத் தொந்தரவு செய்கிறார்கள்.

7) படித்தது மறந்து பயம் வருவது:

வெறுமே அர்த்தம் புரியாமல் மனப்பாடம் செய்தால், படித்தது மறந்து போவதுண்டு. மறந்து போனால் பீதி ஏற்படுகிறது. புரிந்

ததும் மனத்தில் பதிந்ததும் மறக்க வழியில்லை. அதனால் பயம் வராது.

8) சோர்ந்து, தெம்பில்லாத வாழ்வு:



வாழ்வில் குறிக்கோளில்லாதவர்க்கே சோர்வு எழும். முதல் மார்க் வாங்க வேண்டும்; மாணவத் தலைவனாக வேண்டும்; பெரிய உத்தியோகத்திற்குப் போக வேண்டும்; நல்லவனாக இருக்க வேண்டும்; செய்வன திருந்தச் செய்ய வேண்டும்; பிறருடன் இனிக்கப் பழக வேண்டும் என்று வாழ்வில் பல இலட்சியங்களுண்டு. இவற்றை மேற்கொள்பவன் என்றும் உற்சாகமாக இருப்பான். தெம்பில்லை என்ற பிரச்னை இருக்காது.

9) பொதுவாக நன்றாக விளையாடும் மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். நம் நாட்டில் நேர் விரோதமான நிலைமை. விளையாடினால் படிக்க மாட்டான். படித்தால் விளையாட மாட்டான். அதற்குப் பல காரணங்களுண்டு. ஒன்று முக்கியமானது; கவனம் இருப்பதில்லை.

படிப்பு, பரீட்சை ஆகியவற்றில்

பிரச்னையில்லை. நெடு நாட்களாக சமூகம் தன் மனப் போக்கால் இவற்றைப் பிரச்னையாக்கி விட்டது. இந்த உண்மையை மனம் ஏற்றால் பிரமை மாறி பயம் அழியும். பரீட்சையை நம் மனப்பான்மை வேதனைக்குரியதாக்கி விட்டது.



உலகில் பரீட்சை என்பது அழியும் காலம் வந்துவிட்டது. மேல் நாடுகளில் ஏழு, எட்டு வகுப்புகள்வரை பரீட்சையில்லை. படிப்புக்குப் பரீட்சை தேவையில்லை என்பதை கிளன் டொமான் பின்பற்றுகிறார். இந்தியாவிலும் அவர் முறையைப் பின்பற்றும் பள்ளிகளில் பரீட்சையில்லை. நாட்டில் கல்வித் திட்டம் மாறும்வரை பரீட்சை அழியாது.

மாணவன் ஆன்ம விழிப்புப் பெற்

றால், பரீட்சையில் தெரியும் சிரமம் பெரும்பாலும் அழியும். இளம் மாணவர்களை ஆன்மீகக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும்படி கேட்க முடியாது. ஆனால் அவர்களைச் சத்தியத்தை மேற்கொள்ளும்படிக் கேட்கலாம். கல்லூரி மாணவனும், பள்ளி மாணவனும் சத்தியத்தைத் தவிர வேறெதையும் பேசுவதில்லை என்று முடிவு செய்தால், அவனால் எவருக்கும் தொந்தரவில்லை; அவனுக்கும் தொந்தரவில்லை.



சத்தியம் சத்தியமாக ஜெயிக்கும். மாணவன் சத்தியத்தை மேற்கொண்டால், பரீட்சை சிம்ம சொப்பனமாக இருக்காது.

இது உயர்ந்த முறை, அதிகப் பலன் தரும் முறை.

ஒரு மாணவன் சத்தியமே தம் வழி என சத்தியத்தை வழிபட்டால்,

– அவனது புத்திசாலித்தனம் வளரும்.

– அதிகமாக விளையாடினால், பாடம் அதிகமாகப் புரியும்.

– பிறரால் படிப்புக்குத் தொந்தரவு வராது.


— இயல்பாக இத்தனை நாளிருந்த சிரமங்கள் நாம் நம்பமுடியாத அளவில் கரைந்து மறையும்.

— பரீட்சை கடுமையாக இருக்காது.○

— கர்மயோகி

சரஸ்வதி பாடல்கள்

வெள்ளைத் தாமரைப் பூவில்
இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில்
இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத்
திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி
யுணர்ந்தே





ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்
மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.

— *பாரதியார்*

சரஸ்வதி சிந்தனை


சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்காய் எம்பெரு மாட்டி
அழகிய பூவணை மீதாய்

நோக்காய் என்மிடி
தீர.

சகலகலாவல்லி மாலை

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே!

— ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்



சரஸ்வதி அந்தாதி

ஆய கலைகள் அறுபத்து
நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை —
தூய
உருப்பளிங்கு போல்வாள், என்
உள்ளத்தின் உள்ளே

இருப்பள் இங்கு வாராது இடர்.
படிக நிறமும், பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையும்
- துடியிடையும்



அல்லும் பகலும் அனவரத
முந்துதித்தால்
கல்லும் சொல் லாதோ கவி!
— மகாகவி கம்பர்

கலைமகள் வழிபாடு

சோர்விலா அறிவின் தொடர்பே
தீர்விலா நுண்கலைத் திறனே
தமிழ்கலை தமிழ்ச்சுவை தந்தருள்
தமிழ்மந் திரமொழித் தண்பயன்
தாயே நின்னருள் தந்தாள்

தூயநின் திருவடி தொழுதனம்
திருவுடன் கல்வித் திறனருள்
இருநிலத் தின்பம் எமக்கருள்

கூத்தனூர் நாயகி

கையினில் வீணையும் கட்கமும்
நூல்கொண்ட

கருணையின் வாணியுன்னை -
என்றன்
மெய்யுருகப் பாடியே
வேண்டுவேன் நித்தமும்
வெற்றியின் கொற்றமே வா -
நெஞ்சில்
ஐயமும் நீங்கிவிடத் தெய்வமே
கூத்தனூர்
ஆண்டிடும் அருள்விளக்கே _
நான்
செய்வதொன்றும் அறிய
மாட்டேன் எத்தவறும்
செய்யாமல் காத்தருள்கவே.

சரஸ்வதி துதி

வெண்மலரும் வெண்பணியும்
வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்கமலம் வீற்றிருந்து
பழங்கருணை
பூத்துவண்டு விளரி பாடக்
கண்மலரு மாயிரந்தோட விழ்ந்து
முகை
நெகிழ்த்த கமலத்தில்
வாழெண்
கண்மலருந் சதுர்முகத் தோனா
வில்வளர்
வாணிபதங் கருத்துள் வைப்பாம்.
_ *மச்சபுராணம்*

அண்ட புவனங்களினை
ஆக்குமயன் றேவியுனை
மண்டலத்தில் போற்றி வரம் பெற்ற
தொண்டருக்கு
ஆதரவாய் நின்று அருளினாய்



முத்தமிழும்
போதமளி வாணி யுன்றாள் போற்றி
— மங்களேஸ்வரியம்

ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்த
கருணைமிகு கண்ணாளனே.
சொல்லாடிய நல்வர்மனக்
குறையகல — வல்லானே
எல்லா நிலையும் எடுத்தியம்பி
சொல்லா நிலை காட்டி
கல்லாக்கலை ஞானத்தை கருத்துள்
கனிவித்த குருவே போற்றி.

ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்ரம்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர்

குருர் தேவோ மஹேஸ்வரா:
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

குரவே ஸர்வ லோகானாம்
பிஷஜே பவ ரோகிணாம்
நிதயே ஸர்வ வித்யானாம்
தக்ஷிணாமூர்த்தியே நம:

ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி வழிபாடு

ஓம் ஈசா போற்றி
ஓம் இறைவா போற்றி
ஓம் அரசே போற்றி
ஓம் அமுதே போற்றி
ஓம் ஆதி போற்றி
ஓம் அறிவே போற்றி
ஓம் யுடையாய் போற்றி

சிறந்த ஆசிரியர்

சக்கரவர்த்தி நெப்போலியன் ஒரு நாள் காம்பன் அம்மையார் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தார். "இது வரை நடைபெற்று வரும் கல்வி முறை பிரயோசனமில்லை. இளைஞர்கள் தக்கவாறு கல்வி பெற வேண்டுமானால் தேவைப்படுவது எது?" என்று கேட்டார்.


"தாய்மார்கள்" என்று சட்டென்று பதில் சொன்னார் காம்பன் அம்மையார்.

"கல்வி முறை முழுவதையும் ஒரே சொல்லில் கூறி விட்டீர்கள். அதனால், குழந்தைகளுக்கு எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதை அறிந்த தாய்மார்களை உருவாக்குவதே உங்கள் கடன்.

குழந்தையின் வாழ்வை உருவாக்குகிறவர் தாய்தானே!'' என்றார் நெப்போலியன்.

கல்வியும் வாழ்க்கையும்

கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணித்து விடுவதன்று. அவ்விதம் திணிக்கப்படும் விஷயங்கள் அங்கே வாழ்நாள் முழுவதும் செரிக்காமல் உபத்திரவம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. அதனால் என்ன பயன்? கற்கும் விஷயங்கள் நன்கு ஜீரணமாக வேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய், மனிதத் தன்மை தருவனவாய்,



ஒழுங்கமைக்கப் பயன்படுபவையாய் இருத்தல் வேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து கருத்துக்களை ஜீரணித்துக் கொண்டு, அவற்றை உங்கள் வாழ்க்கையிலும், நடத்தையிலும் ஊடுருவி நிற்கும்படி செய்வீர்களானால், ஒரு பெரிய புத்தக சாலை முழுவதையும் மனப் பாடம் செய்திருப்பவனை விடப் பெரிய கல்விமான் ஆவீர்கள்.

— *சுவாமி விவேகானந்தர்.*

- கல்வியின் லட்சியம் விஷயங்களை அறிவதன்று; வேலைக்கு அடி

கோலுவதும் அன்று, சான்றோனா கவும் அறிஞனாகவும் செய்வதே கல்வி யின் பயன் ஆகும்.


— *ரஸ்கின்*


● பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் — கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

— *ஔவையார்*

● மதபோதனையற்ற கல்வி, அறிவுள்ள அரக்கர்களை உருவாக்கு கிறது.

— *வெலிங்டன் பிரபு*





● எவன் ஒருவன் படிப்பது, எழுதுவது, பண்டிதர்களைக் கேட்பது, அவர்களுக்குப் பணிவிடை செய்வது ஆகியவற்றைக் கடைபிடிக்கிறானோ, அவனுடைய அறிவு சூரியனைக் கண்ட தாமரையாய் மலர்கிறது.

— *'திவி ஷஷ்டிகா' நீதியுரை*

தொடக்கத்தில் கல்வி

கல்வி என்பதன் மூலம், குழந்தையிடமும், மனிதனிடமும் உள்ள சிறந்ததை — மனம், உடல், ஆன்மா ஆகிய எல்லாவற்றிலும், வெளிக் கொணர வேண்டும் என்றே நான் பொருள் கொள்கிறேன்.

எழுத்தறிவித்தல் என்பது கல்வியின் முடிவு அல்ல! ஏன், ஆரம்பம் கூட அல்ல, ஆகையால் ஓர் உபயோகமான கைத் தொழிலைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், நான் குழந்தையின் கல்வியைத் தொடங்குவேன்.

— *மகாத்மா காந்தி*

எதிர்காலத்துக்கு...

ஒரு சாலையை அமைப்பதோ, ஒரு மரத்தை நட்டு வளர்ப்பதோ அல்லது நல்ல பழக்கங்களைக் கற்பிப்பதோ – அவை நமக்கு மட்டுமின்றி, இனி மேல் பிறக்கப் போகிறவர்களுக்கும் பயன் தரும்.

– இந்திரா காந்தி

சிறந்த தானம்!

ஒருவன் மற்றவனுக்குச் செய்யக் கூடிய தருமங்களில் எல்லாம் தலை சிறந்தது ஞான தானமே! பசித்த ஒருவனுக்கு இன்று நாம் உணவு கொடுத்தால், நாளையும் அவனுக்குப் பசிக்கும்.

ஆனால் அறிவைப் பயன்படுத்தக் கூடிய ஒரு தொழிலை அவனுக்குக் கற்றுக் கொடுத்தால், ஆயுள் உள்ள அளவும் அவன் பிழைப்புக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்வான்.

– சுவாமி ராமதீர்த்தர்



ஞான சூரியன்

சூரியன் வந்ததும் தீபத்தின் உதவியை யாரும் நாடுவதில்லை. பண்டிதர்களின் மத்தியில் அறிவில்லாதவர்கள் வந்தால் அவர்களை யாரும் மதிப்பதில்லை.


– கவி விருந்தா

காக்க, காக்க, கல்வியைக் காக்க!

ஆத்திரமும் பொறாமையும் ஏற்படாதபடி காக்க வேண்டும். ஈனமும், மன இருளும் ஆத்மாவைச் சூழாதபடி விலக்கக் கல்வியைக் காக்க வேண்டும்.

— ஸ்கந்த புராணம்

• கன்பூஷியஸ்



பாதகமில்லை

நன்றாகப் படிக்காவிட்டால் பாதகமில்லை. உபாத்தியாயர் சொல்வதைப் புரிந்து கொள்ளாவிட்டாலும் தவறில்லை. மூளை வளர்ச்சியடையலாம்; அல்லது தேக்கமுற்று இருக்கலாம்.

ஆனால் உங்கள் ஒழுக்கம் உங்கள் கையில்தான் இருக்கிறது.

சீலம் உடையவர்கள் என்று பெயர் வாங்குங்கள். வாழ்க்கை பூராவையும் நல்ல பெயருடன் இன்பமாகக் கழிக்கலாம்.

— ராஜாஜி

இடையூறு எது?

பெரியவர்கள் குழந்தைகளை அடிக்கடி கண்காணிப்பது, நடைமுறையில் சாத்தியமில்லாத புத்திமதிகளைக் கூறுவது, அடிப்பது முதலியவற்றைக் கைவிட வேண்டும். இவை அவர்களுடைய வாழ்வில் இடையூறு

களை உண்டு பண்ணுவதல்லாமல், அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாகவும் இருக்கின்றன.

— *மாண்டிஸோரி அம்மையார்*

● படிப்பதைப் போல் செலவு குறைந்த, பொழுது போக்கு இல்லை, அதைப் போல் இன்பமளிப்பதும் வேறில்லை.

— *மார்க் ட்வெய்ன்*

● நான் மாணவருக்கு விஷயத்தின் ஒரு மூலையைத்தான் காட்டுவேன். அவன்தான் மற்ற மூன்று மூலைகளையும் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டும். நான் காட்ட மாட்டேன்.

— *கன்பூஷியஸ்*



• அரிஸ்டாட்டில்

● ஒரு நாட்டின் வாழ்வு தாழ்வு எல்லாம், அந்த நாட்டின் இளைஞர்கள் பெறும் கல்வியைப் பொறுத்தே இருக்கிறது.

— *அரிஸ்டாட்டில்*


● கல்வி இல்லாதவன் கயவன், அவன் மிருகத்துக்கு ஒப்பானவன், ஆகையால் அவனது மிருக இயல்பு நீங்கி, மனிதத் தன்மை நிலவக் கல்வி இன்றியமையாததாகிறது.

— *சக்ரவர்த்தி அசோகர்*

● நீங்கள் கற்றுத் தரும் கல்வி ஒரு குழந்தையை மகாத்மா ஆக்க வேண்டும் என்பதில்லை, மனிதனாக ஆக்கினாலே போதும்.

— கன்பூஷியஸ்!

• டி.கே.சி.



படிப்பின் விலை

பண்டைய கிரீஸ் நாட்டில் ஆண்டிபஸ் என்கிற பேரறிஞர் ஒருவர் இருந்தார்.

ஒருவர், தம் மகனுக்குக் கல்வி கற்பிக்க, "எவ்வளவு பணம் தர வேண்டும்?" என்று கேட்டார்.

"ஆயிரம்!" என்று சொன்னார் அறிஞர்.

"அவ்வளவு பணமா? அதற்கு ஓர் அடிமையை வாங்குவேனே" என்றார் வந்தவர்.

"அப்படியே செய்யுங்கள். உங்கள் மகனையும் சேர்த்து இரண்டு அடிமைகள் ஆயிற்று" என்றார் ஆண்டிபஸ்!

பூவைப் பிய்க்கும் குழந்தைகள்

இலக்கணத்தைக் கற்று இதுவரை இந்த


மங்கையர் மலர்

பயனடைந்தவர்கள் பாராட்டு!



"விளம்பரம் வந்தவுடனேயே, போன் கால்களும், கடிதங்களும், ஜாதகங்களும் வரத் தொடங்க, எங்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் ஏற்பட்டது."

"திருமண மலர் பகுதியில் நீங்களும் விளம்பரம் செய்து பயனடையலாமே!"



"எனது தம்பிக்கு மறுமணம் செய்ய நினைத்த போது மலைப்பாக இருந்தது, யார் முன் வருவார்கள் என்று.

காரணம், தாரமிழந்த அவனுக்கு மூன்று குழந்தைகள்! ஆங்கில இதழ்களில் கொடுத்த விளம்பரத்தில் அவ்வளவாக பலன் கிடைக்கவில்லை. நண்பர் ஒருவரின் ஆலோசனையின்பேரில், அரை மனதுடன் மங்கையர் மலர் 'திருமண மலர் விளம்பரப் பகுதியில்' விளம்பரம் கொடுத்தேன். இறைவன் அருளாலும் மங்கையர் மலரின் உதவியாலும் தம்பிக்கு நல்ல மனைவியும், அவன் குழந்தைகளுக்கு நல்ல தாயும் கிடைத்தாள். எங்களுக்கு உதவிய 'மங்கையர் மலருக்கு' மனமார்ந்த நன்றி. இதேபோல் அனைவரும் மங்கையர் மலர் மூலம் விளம்பரம் செய்து பயனடைய, இறைவனைப் பிரார்த்திக்கிறேன்."

- கே.எஸ். ராமன், டாக்டர் லக்ஷ்மணசாமி ரோடு,
கே.கே. நகர், சென்னை - 78

'திருமண மலர்' பகுதியில் விளம்பரம் செய்ய அணுகவும் :

மானேஜர், திருமண மலர் பகுதி, கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-97 தொலைபேசி : 22345622/23/24 தொலைநகல் : 044-2234 5621
மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalarmonthly.com

KALKI DESIGN STUDIO 2/03


Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 16.3.2003

உலகில் பாஷை கற்றதில்லை. ஒத்துச் சொல்லும், அதிலும் அனுபவித்துச் சொல்லும் பயிற்சியிலிருந்துதான் பாஷா ஞானம் வருகிறது.

அனுபவம் ஒன்றின் மூலமாகத்தான் கலைகள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன. கணிதம், பௌதிகம், காவியம், நடனம் எல்லாம் வளர்ந்திருக்கின்றன.

பகுத்துப் பார்க்கும் ஆசை பின்னால் ஏற்படுவதுதான், பூவை அனுபவித்த பிறகே குழந்தை பிய்க்க ஆரம்பிக்கிறது...

கல்வி என்றும் பள்ளி என்றும் பேர் வைத்துக் கொண்டு, நெடுகிலும்



மனுஷக் குழந்தைகளை எவ்வளவோ கஷ்டத்துக்கு உள்ளாக்கி விட்டார்கள்.

– ரசிகமணி டி.கே.சி.

தொகுப்பு : சுப்ர.பாலன்

அட்டை, படங்கள் : ஸ்ரீஹரி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 " Registered as a Newspaper in Srilanka

